www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**அனுருத்த சமாதானம்!**

போருக்கு அஞ்சோம்நாம் புலிகளுக்கும் அஞ்சோம்
ஊருக்கும் இல்லைநாம் ஒருபோதும்-பேருக்காய்ப்
பேசுகிறோம் பேச்சு முறியட்டும்பார் பார்த்துவிட்டு
பேசு! பிறகெம் பெற்றி!

-ஈழமோகம்

இதழ் 67 மார்ச். 09 - மார்ச் 22, 1995 விலை 7.00

# பிரச்சாரப் போர் தொடக்கம்!

# மூன்றாவது போருக்கு முஸ்தீபு?

**விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் தற்போது ஏற்பட்டுள்ள புதிய திருப்பம் ஒரு மூன்றாவது ஈழப்போருக்கு இட்டுச் செல்லுமோ என்று சந்தேகம் கொள்ள வைத்துள்ளது.பேச்சுவார்த்தை தொடங்கி போர் தவிர்ப்பு உடன் பாடு நடைமுறைக்கு வந்த போதும் இருதரப்பாரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டும் விதத்திலேயே இதுவரையான அவர்களது அறிக்கைகள் அமைந்திருந்தன.இவ்வாரம் புலிகளின் தலைவர் பிரபாகரனது கடிதங்கள் அரசாங்கத்தால் பகிரங்கப்படுத்தப்பட்டு,புலிகள் நியாயமற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது பேச்சு வார்த்தை உறவில் ஏற்பட்டுள்ள விரிசலின் வெளிப்பாடோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.**

பூநகரி விவகாரத்தையொட்டி உருவான இழுபறியை தொடர்ந்து புலிகள் வெளியிட்ட அறிக்கைகள் அரசாங்கம் சமாதான முயற்சியில் நேர்மையாக இல்லை என்று குற்றம் சாட்டுவனவாக அமைந்திருந்ததும் இவற்றுக்கு பதிலளிக்கு முகமாக அரசு இப்போது புலிகளே தம்தரப்பில் நியாயமற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்று அறிவித்துள்ளதும் ,இருதரப்பாரதும் பரஸ்பர சந்தேக மனோபாவத்தையே வெளிப்படுத்துகின்றன.

இவ்வறிக்கையை வெளியிட்ட ஜனாதிபதிசெயலகம்,தாம் எவ்வாறாயினும் சமாதானத்துக்காக செயற்பட போவதாக தெரிவித்துள்ளது என்ற போதும், புலிகளுடனான பேச்சுவார்த்தை தோல்வியுறுமானால்,யுத்தத்தை நடாத்த இராணுவம் தயாராகவே உள்ளது என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்த தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தித்து.

புலிகளுடனான பேச்சுவாாத்தை முறிவுறும் பட்சத்தில் யுத்தத்திற்கு தயாராக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் சமாதான முயற்சிகளில் சந்தேகங்கள் பலமடைந்து வரும் இச் சூழ்நிலையில் அறிவித்திருப்பது திரை மறைவில் அரசாங்கம் யுத்த தயாரிப்பில் ஈடுபடுகிறதோ என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே உள்ளது. ஏற்கனவே ஆர்ஜன்டீனாவில் இருந்து அரசாங்கம் புதிதாக நான்கு இராணுவ போர்விமானங்களை கொள்வனவு செய்திருந்ததும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

பொதுமக்கள் மத்தியில் புலிகள் அரசு மீது தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள் என்று குற்றம் சாட்டியுள்ள அரசினது நடவடிக்கைகளும், விளம்பரப்பகட்டில் அரசு நாட்டம் கொண்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ள புலிகளது நடவடிக்கைகளும் ஒருவரை ஒருவர் அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தும் முயற்சியில் அவர்கள் இறங்கியுள்ளதையே காட்டுகின்றன.

இத்தகைய பிரச்சாரப் போர் ஒரு மூன்றாவது யுத்தத்திற்கான முஸ்தீபு நடவடிக்கையாக இருக்கக் கூடாது என்பதே அனைத்து சமாதான ஜனநாயக விரும்பிகளதும் மக்களதும் கோரிக்கையாகும்.ஒரு மூன்றாவது யுத்தம் அரசுக்கோ, புலிகளுக்கோ மக்களுக்கோ யாருக்குமே எதையும் பெற்றுத்தரப் போவதில்லை; அழிவைத்தவிர.

சரிநிகர் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல சமாதானம் என்பது சந்தேகங்களாலும் போட்டிகளாலும் சாதிக்கப்பட முடியாதது; பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலேயே சாதிக்கப்படக்கூடியது என்பதை இரு தரப்பாரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## தமிழ் அரசகரும மொழிதானா?

''தமிழும் இலங்கையின் அரச கருமமொழி'' என்பது ஒர அர்த்த மற்ற கூற்ற என்பது, 25.10.1994ஆம் திகதியிடப்பட்ட 842/8 எனும் இலக்கத்தைக் கொண்ட, அரசாங்க அறிவித்தல் (Gazzette) இல் வெளியிப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டுச் சேவை (SLOS) இன் சட்டங்களை (Minutes) வாசிப்பவர்களுக்க தெரியவரும்.

இவ்வெளியீட்டின் 3ஆம் அத்தியாயத்தில் உபபந்தி (4) (ii) ஆனது பின்வருமாறு கூறுகிறது.

''புதிதாகச் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு, அரச கரும மொழிக் கொள்கையின் பொருட்டு; சிங்களமொழி மூலம் தேர்வுப்பரீட்சையிற் சித்தியெய்துபவர்களுக்கு இரண்டாவது மொழியாக தமிழ் அல்லது ஆங்கிலம் இருக்கும் அதேவேளையில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தேர்வுப்பரீட்சை சித்தியடைபவர்களுக்கு இரண்டாவது மொழியாகச் சிங்களம் இருக்கும்''

சிங்கள மொழி மூலம் சித்தியடைபவர்களுக்கு இரண்டாவது மொழி

→ 15

## தமிழ் கட்சிகள்-புலிகள் பேச்சு!

86ம் ஆண்டு ரெலோ இயக்கத்துக்கெதிராக நடவடிக்கையில் ஈடுபட்ட புலிகள் தொடர்ந்து வட-கிழக்கில் ஏனைய தமிழ் அமைப்புக்கள் இயங்குவதை தடை செய்திருந்தனர்.

84ம் ஆண்டு திம்பு பேச்சுவார்த்தையில் அனைத்து இயக்கங்களும் கலந்து பேசிய பின்னர் ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு பின்னர் மீளவும் புலிகள் ஏனைய அமைப்புக்களுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்ளப்பு பிராந்தியத்தில் புலிகள் கடந்தவாரம் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.ஏப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக புளட் பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,'எமது இயக்கத்துடன் உத்தியோகபூர்வமாக இன்னளும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவில்லை. எமது மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பேச விரும்புவதாகப் புலிகள் கூறுயிருக்கிறார்கள். எவ்வகையான பேச்சுக்களாயினும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்,

## மண்டபம் திறக்க தாமதம் ஏனோ?

ஊவா மாகண சபை நிதியைக் கொண்டு முன்னாள் ஊவா மாகாண சபை கூட்டுறவு, மின் சக்தி, உல்லாசத்துறை, இந்துகலாசார அமைச்சரும், தற்போதைய ஊவா மாகண சபை உபதலைவருமாகிய கெளரவ எம். சுப்பையா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் சைவ பரிபாலன சபைக்கு சொந்தமான காணியில் இந்து கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இம் மண்டபத்தில் முதல் கட்டிட வேலைகள் பூர்த்தியான நிலையில் உள்ளன. இரண்டாம் மாடி கட்டிட வேலைகளில் நான்கு தூண்கள் மட்டும் பூர்த்தியான நிலையில் 93-03-16ம் திகதி மகாணசபை கலைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் கடகடிடத்திற்கு 23 இலட்சம் செலவிடப்பட்டது. 93ம் ஆண்டு ஊவா மாகாண சபையினால், இரண்டாம் மாடி அமைப்பதற்கு வரவு செலவு நிதியிலிருந்து 14 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் மண்டபத்திற்குள்ளே அவசியமான தளபாடங்கள் வாங்குவதற்கு ஒருலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிதி ஒதுக்கீடு தொடர்பாக 93ம் ஆண்டு வருட ஆரம்பத்திலேயே இந்து கலாசார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய கட்டிட வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

மண்டப நிர்மாணிப்புக்கு 91ம், 92ம், 93ம் ஆண்டுகளில் ஊவா மாகாண சபையினால் மொத்தமாக 38,50,000/= ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இம் முழுத் தொகைப் பணத்தில் 93-03-16ம் திகதி வரை 23 இலட்சம் ரூபா மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. 93ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட 15,50,000/= ரூபாவுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அப்பணம் செலவிடப்படவுமில்லை.

முதலாவது மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் இன்று வரை மண்டபத்திற்கு ஒரு சதம் கூட செலவிடப்படவில்லை. இரண்டாவது மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பிறகு இந்து கலாசார அமைச்சராக சச்சிதானந்தன் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவரின் காலத்தில் கலாசார மண்டபத்தை கவனிப்பார் எவருமில்லை. இதை அறிந்த முன்னாள் அமைச்சர் சுப்பையா அவர்கள் இந்து கலாசார அமைச்சர் அவர்களுடனும் முதலமைச்சருடனும் தொடர்பு கொண்டு மண்டபத்தை திறந்து வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டார். பல முறை மாகாண சபைக் கூட்டங்களிலும் கேள்வி மேல் கேள்வி கேட்டார். மண்டபத்தின் தற்போதைய நிலைமை பற்றி அமைச்சருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு கேட்டார். அதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக மட்டுமே கூறி சமாளித்து விடுகின்றார். இன்றும் அதே இராமாயணம் தான்.

இம்மண்டபம் தொடர்பான எல்லா விபரங்களும் தொண்டமானிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தலைவர் அவர்களும் பல முறை பதுளை சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்துள்ளார். புதிய அமைச்சர் பதவி ஏற்றபிறகும் இப்பாடசாலைக்கு விஜயம் மேற் கொண்டார். ஆனால் பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தை பற்றிக் கண்டு கொள்ளவில்லை. ஏன் தலைவர் அவர்களும் பிரச்சினையை தீர்த்து வைக்காமல் மெளனம் சாதித்து வருகின்றார் என்பது எவருக்கும் புரியவில்லை.

இதன் நிலைமை இப்படியிருக்கையில் கட்டிடத்தை திறந்து வைத்து விட வேண்டும் என்பதற்காக முன்னாள் அமைச்சர் சுப்பையா அவர்களின் தலைமைத்துவத்தில் சைவ பரிபாலன சபையினர் மண்டபத்தின் நிலைமையை பற்றி ஆராய்வதற்காக" பதுளை வாழ் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி கூட்டமொன்றை நடாத்த ஏற்பாடு செய்து விட்டு அமைச்சர் சச்சிதானந்தன் அவர்களுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டது. இறுதி வரை அமைச்சர் இக்கூட்டத்தில் கலந்து

→ 16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் என்ன செய்யப் போகிறார்கள்?

-மாதவன்



இப்பத்தி எழுதுகிற போது புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தை மந்த நிலையை எட்டிவிட்டது.பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்த "பேச்சுவார்த்தை முறிவடைந்தால், வேறு வழிகளைக் கையாள வேண்டும்" என்று மென்மையாக,ஆனால் எச்சரிக்கைத் தொனியில் கூறி இருக்கிறார்.படைகளை ஆயத்த நிலையில் இருக்குமாறும் கூறுகின்றார்.

சமாதான முயற்சிகளைத் தடைப்படுத்தும் கருத்துக்களை 'அவசரப்பட்டு வெளியிடாமல் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று புலிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதில் துரதிர்ஷ்டம் என்னவெனில், சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய அரசு போரைப் பிரகடனப்படுத்த முயல்கிறது.இது யாருக்கும் உவப்பான விடயமல்ல.சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பு அரசையே சார்ந்தது.

மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கினால் தீவு அடங்கலும் அதன் பாதிப்பு தெரிய வரும்.மீண்டும் உயிரிழப்பு, அனர்த்தங்கள், துயரம், சிக்கல் என வாழ்க்கை மோசமான சூழலை அடையும்.

இரண்டாவது ஆனையிறவுப் பாதையைத் திறப்பதினூடாக, குடாநாட்டுக்கான பொருட்களை ஏற்றி இறக்குவதில் மக்கள் புலிகளை நம்பியிருக்கத் தேவையில்லை. அதாவது புலிகளுக்கு ஒரு நாளில் கிளாலிப் பயணத்தினூடாகக் கிடைக்கும் பத்து இலட்சம் ரூபா இதனால் இல்லாமல் போகிறது. இதற்குப் புலிகள் ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை; அதாவது வேறேதாவது வழியினூடாகப் புலிகளுக்கு பணம் கிடைக்கும் சந்தர்ப்பம் வரும் வரை.

இவ்விரண்டு காரணங்களாலும் புலிகள் ஆனையிறவுப் பாதையை திறக்கச் சம்மதிக்கப் போவதில்லை. எனவே இருக்கக் கூடிய மாற்று வழி பூநகரிப் பாதை ஒன்று தான்.

இச் சந்தர்ப்பத்தில் புலிகள் கேட்பதில் நியாயம் ஒன்றுண்டு: பூநகரிப் பாதையைத் திறப்பதாயின், பூநகரியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப் படவேண்டும் என்பது, பூநகரி இராணுவ முகாம் 1991இன் இறுதியிலேயே அமைக்கப்பட்டது. பின்னர் ஒரு தடவை முற்றுமுழுதான தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது.

பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட்டால் யாழ் மாவட்டத்துக்கும் முல்லைத்தீவு, வவனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களுக்குமிடையில் நேரடித்தொடர்பு ஏற்படுத்த முடியும். இது புலிகளுக்கு சாதகமான சூழலைத் தருவதாக அமையும்.எல்லாவற்றுக்கும் மேலாக, ஆனையிறவிலும் இராணுவமுகாம் இருந்தது, பூநகரியிலும் இராணுவ முகாம் இருந்தது. பூநகரிப் பாதை திறக்கப்பட்டாலும் புலிகளின் பலம் இரண்டு துண்டாக்கப்படும் நிலையே உருவாகும். புலிகள் தமது படையினரை பூநகரி இராணுவ முகாமைச் 'சுற்றியும் ,ஆனையிறவு முகாமைச் சுற்றியும் நிறுத்தி வைத்திருக்க வேண்டும். அத்துடன் எச்சரிக்கையுடன் எதற்கும் தயார் நிலையில் புலிகள் தமது படையினரை வைத்திருக்க வேண்டும். இது புலிகளைப் பலவீனப்படுத்தும் செயலாகும்.

இதில் புலிகளின் நலனே கவனத்தில் எடுக்கப்பட்டாலும், தற்போதுள்ள நிலையில் புலிகளின் நலனும் தமிழ் மக்களின் நலனும் பின்னிப்பிணைந்துள்ளதால், புலிகள் எடுக்கும் முடிவானது தமிழ் மக்களின் நலனுடன் சம்பத்தப்பட்டுள்ளது. உறுதியான, விடாப்பிடியான கோரிக்கையை பூநகரிப்பாதை தொடர்பாகப் புலிகள் முன்வைக்க வேண்டும். இவ்விடயத்தில் புலிகள் என்னசெய்யப் போகிறார்கள் என்பதே புலிகள் முன்னுள்ள கேள்வியாகும். ஏனெனில் எதிர்காலத்தில் குடா நாடு ஆக்கிரமிப்புக்குள்ளாகிவிட முடியாது எனபதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

புலிகள் என்னசெய்யப் போகிறார்கள்? என்ற கேள்வியை இன்னொரு சந்தர்ப்பத்திலும் புலிகளை நோக்கி கேட்டேயாக வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லீம்களை வெளியேற்றியது தொடர்பாக புலிகளின் தலைமை தனது கவலையைத் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகிறன.இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை.அல்லது மனப்பூர்வமானதாக அல்லாமல் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப இட்டுக்க ட்டப்பட்ட புனைவா? என்பதும் தெரியவில்லை.ஏனெனில் புலிகளைச் சந்தேகப்பட முக்கியமான காரணம் ஒன்றுண்டு."வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமைக்காக வருந்துகிறோம்;மீளக் குடியமர்த்த விரும்புகின்றோம்" என்று புலிகள் கூறுகின்றனர். இது அவர்களின் மனப் பூர்வமான கூற்றா எனச் சந்தேகம் எழுகின்றது.கவனியுங்கள் இன்னோரு கூற்றும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது." அவர்களது இடங்களில் இப்போது குடியிருக்கும் தமிழ் அகதிகள் தமது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதும் முஸ்லீம்கள் வந்து குடியேற முடியும்" என்றும் புலிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். இதனைவிரிவாகக் கூறுவதாயின் , முஸ்லீம்கள் இருந்த இடங்களில் தற்போது தமிழ் அகதிகள் குடியிருக்கின்றனர். அவ்வகதிகள் அளவெட்டி, தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மாதகல், இளவாலை முதலான ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை விட்டு வெளியேறியவர்கள். அவர்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேற வேண்டுமாயின் இராணுவம் அவ்விடத்தை விட்டு அகல வேண்டும். இனிப் புலிகள் கூறுவதைச் சுருக்கிக் கூறினால், இராணுவம் தாம் ஆக்கிரமித்த பிரதேசத்தை விட்டு வெளியேறினால் நாங்கள் முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துவோம். இது தான் புலிகளின் கருத்து. இங்கு இனவாத நோக்கில் புலிகள் சிந்திப்பதனையே வெளிப்படுத்துகிறது. இது இன்னொரு புறத்தில் அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் ஒரு ராஜதந்திரமாகப் புலிகள் கருதுவார்களானால், புலிகள் வரலாற்றுத் துரோகம் செய்தவர்களாவார்.

அதற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட அப்பிரதேசம் முஸ்லீம்களுக்குச் சொந்தமானது. அது அவர்களின் சொத்து. அதை அடாத்தாகப்பறிக்க முடியாது. பறித்து விட்டு வேறுநியாயம் பேச முடியாது. இவ்வாறு பேசிக் கொண்டு விடுதலைப் போரை நடாத்த முடியாது. அகதிகளாகி அல்லற் படுகின்ற முஸ்லீம்கள் எப்போது தமது சொந்த நிலத்திற்குப் போவோம் என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமக்குச் செய்த வரலாற்றுத் துரோகத்தை மன்னித்து, மறக்கவும் தயாராக உள்ளனர். நோன்புப் பெருநாளில் யாழ்ப்பாணத்து முஸ்லீம் அகதிகள், பள்ளிவாசலின் வாயிலில் பிச்சைக்கு ,சாப்பாட்டுக்கு இரந்து நிற்கிறார்கள்.

புலிகள் உடனே முடிவு எடுத்தாக வேண்டும்.எடுத்த முடிவை உடனே நடமுறைப்படுத்த வேண்டும். இவ்வளவு இராணுவ வெற்றிகளைச் சாதித்துக் கொள்கிற புலிகளுக்கு இது ஒன்றும் கடினமான காரியமல்ல.

கேள்வி இதுதான்: இவ்விடயத்தில் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள்?

பேச்சுவார்த்தை முறிவடைவதற்குக் காரணகர்த்தா யார் என்பது அல்ல நம்பிரச்சினை பூநகரிப் பாதை திறப்பது தொடர்பாகவே பேச்சுவார்த்தை தற்போது மந்தநிலையில் உள்ளது.பூநகரி விடயத்தில் புலிகள் எடுத்துள்ள நிலைப்பாட்டை இதில் கவனிக்க வேண்டும்.பூநகரிப்பாதை திறக்கப்பட வேண்டுமாயின் பூநகரியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்பது புலிகளது கோரிக்கை.

ஆனையிறவுப் பாதை திறப்பதில் புலிகள் அவ்வளவு அக்கறை காட்டவில்லை.இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.ஒன்று,ஆனையிறவுப்பாதை திறப்பதாயின்,புலிகள் தமது இராணுவத் தளங்கள் சிலவற்றைப் பலவீனப்படுத்த நேரிடும்.ஆனையிறவிலிருந்தோ, இயக்கச்சியிலிருந்தோ, இராணுவம் வெளியேறாதவாறுபுலிகள் தமது நிலையைப் பலப்படுத்தியுள்ளனர். பொதுமக்களுக்கு இப் பாதை திறக்கப்படுமாயின், புலிகள் தமது தளங்களைப் பலவீனப்படுத்தியே ஆக வேண்டும். இது தற்கொலைக்கு ஒப்பான செயல்.அரசுக்கும் புலிகளுக்கும் மீண்டும் முறுகல் ஏற்பட்டால், இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இராணுவம் பளையினூடாக சாவகச்சேரி வரையும், பரந்தனினூடாகக் கிளிநொச்சி வரையும் முன்னேறிவிடும். இது புலிகளுக்குப் பலத்த பின்னடைவாகவே அமையலாம். இத்தகைய நிலை குடா நாட்டை முற்று முழுதாக ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து அந்நிலம் அந்நியப்படுவதற்கு வழிவகுத்துவிடும்.இது நீண்டகாலத்தில் தமிழ் மக்கள் அனைவருக்கும் இடரைக் கொடுப்பதாக அமையும். எனவே அத்தகைய நிலைக்குப் புலிகள் சம்மதிக்கப் போவதில்லை, சம்மதிக்கவும் முடியாது

# திருமதி டக்ளஸ் பீரிசும் மூன்று தாலிக் காய்களும்!

முன்னைய ஐ.தே.க. அரசின் காலத்தில் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சராக இருந்து தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளவர் தான் திரு டக்ளஸ் பீரிஸ். இவருடைய மனைவி திருமதி.டக்ளஸ் பீரிஸ். கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரிகின்றார்

அது இந்த புதிய பொதுஜன முன்னணி அரசு பதவிக்கு வராத ஐ.தே.க. அரசின் காலகட்டம். றோயல் கல்லூரியில் கற்பிக்கும் நூற்றுக்கணக்கான ஆசிரிய ஆசிரியைகளுள் எங்கும் பளிச்சென தங்கமாய் மின்னிக் கொண்டுதிரிபவர் தான் திருமதி டக்ளஸ் பீரிஸ்.

நாளுக்கு ஒவ்வொரு புதுப்புது டிசைன்களில் காதிலும் கழுத்திலும் கைகளிலும் மின்னிக் கொண்டிருக்கும் தங்க ஆபரணங்கள், அனைத்து தங்க ஆபரணங்களும் தமிழர்களுக்கேயுரிய கலாசார பண்பாடுகளை ஒட்டி தயாரிக்கப் பட்டவை.

ஒரு நாள் திருமதி டக்ளஸ் பீரிஸ் இன் கழுத்திலிருந்த செயினில் தமிழ்ப்பெண்கள் கழுத்தில் அணியும் மூன்று தாலிக்காய்கள் தொங்கின. பிள்ளையார் சுழி போட்ட வெவ்வேறான தாலிக்காய்கள். ஏனைய தமிழ் ஆசிரிய ஆசிரியர்களுக்கு ஒரே ஆச்சரியம். யாருக்கும் வாய்திறந்து கேட்கப்பயம். அப்போது டக்ளஸ் பீரிஸ் மட்டக்களப்பின் உயர் பொலிஸ் அதிகாரி.


நாலைந்து நாட்களுக்கு பின்னர் திருமதி டக்ளஸ் பீரிஸ் இடம் ஒரு தமிழ் ஆசிரியை தாலி அணிவது பற்றியும் இப்படி யாரும் மூன்று நான்கு வெவ்வேறு டிசைன்களில் போடவும்மாட்டார்கள் எனக்கூறியுள்ளார்.

இல்லை இல்லை இது எனது கணவருக்கு ஒன்று அன்பளிப்பாக கிடைத்தது. ஏனையவை நானும் எனது கணவரும் செட்டியார் தெரு நகைக்கடையில் வாங்கியது எனக் கூறியுள்ளார் திருமதி பீரிஸ்.

→ 16

# புலிகளின் சட்டப் புத்தகம்!

தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதி, நிர்வாகத்துறை தமிழீழ ஒறுப்புச் சட்டம் (Penal Code of Tamileelam) என்ற பெயரில் சட்டக்கோவை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதிலுள்ள சட்ட விதிகள் 1994ஆம் ஆண்டு 12ஆம் மாதம் முதலாம் திகதியுடன் நடைமுறைக்கு வருவதாக இந்நூல் குறிப்பிடுகிறது.


தமிழீழ ஒறுப்புச் சட்டம்
PENAL CODE OF TAMILEELAM
1994
1994 ஆம் ஆண்டின் 04 ஆம் எண் சட்டம்

இதிலடங்கியுள்ள சட்டம் தமிழீழத்தில் இழைக்கப்படும் குற்றங்களை வெளிப்படுத்தவும், அவற்றிற்கான ஒறுப்புக்களைத் தீர்மானிப்பதற்குமான ஒரு சட்டமாகும் என இந்நூலின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இச்சட்டம் தமிழீழத் தேசியத்தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களின் ஒப்புதலுடன் சட்டமாக்கப்படுகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சட்டக்கோவையில் நடைமுறையில் இருந்த தமிழ் சொற்களுக்குப் பதிலாக புதிய தமிழ் சொற்கள் பல உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

புதிதாக 116 தமிழ்ச் சொற்கள் இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்புதிய சொற்களுக்கான பட்டியல் ஒன்றும் இந்நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து சில:

| | |
|---|---|
| விபச்சாரம் | - பரத்தமை |
| தண்டனைச்சட்டம் | - ஒறுப்புச்சட்டம் |
| துப்பாக்கி | - சுடுகலன் |
| பாலம் | - இணைப்பி |

சாதி பற்றிய இயலில் ஒரு பிரிவு இப்படிக் கூறுகிறது:
"பிறப்பால் மனிதர்கள் அனைவரும் ஒருவரே. அவர்களிடையே சாதி எனும் அடிப்படையிலே இழிவு செய்வது தவறாகும் (இயல் - 24 - 432 - அ)"

26 இயல்களையும் 439 தவறுகளும் அவற்றுக்கான தண்டனைகளையும் கொண்ட, எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கமளிக்கப்பட்டுள்ள இந்நூல் நேர்த்தியான முறையில் உயர்தர கடதாசித்தாளில் 222 பக்கங்களில் வெளியிடப்பட்டு ரூபா 250 இற்கு விற்பனை செய்யப்படுகிறது.

# புலிகளிடம் சரணடைந்த ஈ.பி.டி.பியினர்!

நெடுந்தீவில் செயற்பட்டு வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் இருவர் புலிகளிடம் சரணடைந்துள்ளதாக யாழ்ப்பாணத் தினசரியான உதயன் செய்தி வெளியிட்டுள்ளது. இருவரும் தீவுப்பகுதியில் இருந்து நீந்தி வந்து புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த முத்துவேல் கணேசமூர்த்தி (33வயது) அல்லது மன்னன் என்பவர் ஆயுதங்கள் இன்றி கடந்த 14ஆம் திகதி சரணடைந்தார். இவருக்கு இயக்கப்பெயர் தேவராஜ்.

விவாகமான இவர் வேலை இன்றி கஷ்டப்பட்டு வாழ்ந்ததாகவும் - பெயின்டர் வேலை தருவதாக இவரை தம்முடன் சேர்த்துக் கொண்ட ஈ.பி.டி.பியினர் இவருக்கு வற்புறுத்தலின் பேரில் ஆயுதப்பயிற்சி அளித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த சிவலிங்கம் சந்திரசேகரம் (26வயது) என்பவர் ஆயுதங்களுடன் சரண் அடைந்தார். சேகர் அல்லது நாதன் என அழைக்கப்படும் இவருக்கு இயக்கப்பெயர் ராஜ். இவர் கடந்த 4ஆம் திகதி ரி. 56 - 2 ரகத்துப்பாக்கி - ஒன்று, ரவைகள் - 150, மகஸின்கள் - 5, ஜே.ஆர். ரகக் கைக்குண்டு - 2 ஆகியவற்றுடன் சரணடைந்தார்.

விவாகமான இவர் தமிழகத்தில் அகதியாகத் தஞ்சமடைந்து திரும்பிய சமயம் கொழும்பில் வைத்து ஈ.பி.டி.பியினரால் பொறுப்பேற்கப்பட்டவர் என்றும் - அவரது விருப்பத்துக்கு மாறாக ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசின் மனதில் இருப்பது மூன்றாவது ஈழப்போரா? சமாதானமா?

''தமிழீழ விடுதலைப் புலிகள், மக்களின் சமாதானத்தற்கு ஆதரவான எழுச்சியைக் கண்டு பயப்படுகின்றார்கள்''

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் எழுதப்பட்ட, கொழும்புப் பத்திரிகைகளில் பெருமளவுக்கு விளம்பரப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றிற்கு பதிலளிக்கு முகமாக திருமதி சந்திரிகா பண்டார நாயக்க அவர்கள் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவது தொடர்பான தமது கோரிக்கைக்கு எத்தகைய பதிலையும் தெரிவிக்காமல், ஒரு தலைப்பட்சமாக ஆனையிறவு, பூநகரி இரண்டு பாதைகளும் பொது மக்கள் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருப்பது வெறும் விளம்பரப்பகட்டு மட்டுமே அன்றி வேறேதும் அல்ல என்று புலிகள் தரப்பில் தமிழ்ச் செல்வன் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

அரசதரப்பில் தமது கோரிக்கைகள் தொடர்பாக எத்தகைய ஸ்தூலமான முடிவுகளும் தெரிவிக்கப்படாமல், இத்தகைய ஒரு தலைப்பட்சமான முடிவை அரசு அறிவித்திருப்பது அரசின் கவனம் மக்களின் நலன்கள் மீதல்ல, இராணுவ நலன்களிலேயே குவிந்துள்ளது என்பதையே காட்டுகிறது என்ற மேற்குறிப்பிட்ட கடிதத்தில் பிரபாகரனும் எழுதியிருந்தார்.

இவற்றுக்கு பதிலளிக்கு முகமாகவே ஜனாதிபதி, புலிகள் மக்களது எழுச்சி கண்டு அச்சமுறுகிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்.

இந்தப் பூநகரி - ஆனையிறவு விவகாரம் பொ.ஜ.மு. அரசாங்கத்தைப் பொறுத்தவரை புதிய விடயமானாலும் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கங்களுக்குமிடையிலான கடந்தகால பேச்சுக்களைப் பொறுத்தவரை புதிய விடயம் அல்ல. ஏற்கெனவே ஐ.தே.க. அரசாங்கமும் இவ்வாறு ஆனையிறவுப் பாதை 'பொது மக்களின் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தது'. புலிகள்தான் பூநகரி முகாம் அகற்றப்படாத பட்சத்தில் அதை ஏற்க முடியாது என்று தெரிவித்திருந்தார்கள்.

இப்போது சந்திரிகா அரசும் அதே பழைய கதையைத் தான் சொல்லியிருக்கிறது, ஒரேயொரு சின்ன வித்தியாசம். 'பூநகரி முகாமை 500 மீற்றர் பின்னோக்கி நகர்த்தியிருக்கிறது புதிய அரசு. ஆனால் புலிகளின் இராணுவவியலாளர்களின் அபிப்பிராயப்படி இந்த பின்னோக்கிய நகர்வுக்கு எந்த அர்த்தமும் இல்லை. ஏனென்றால் இம்முகாம் ஐந்தே நிமிடத்தில் பழைய இடத்துக்கு நகர்த்தப்பட்டு விட முடியும். எனவே இத்தகைய பின்வாங்கலால் அரசு எந்த விட்டுக் கொடுப்பையும் செய்துவிடவில்லை என்கிறார்கள் அவர்கள்.

ஜனவரிமாதம் நடைமுறைக்கு வந்த யுத்ததவிர்ப்பு ஒப்பந்த அடிப்படையில் சாதாரண மக்களது அன்றாட நலன்களுக்கு உதவும் வகையில் பல பொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது; கிளாலிப்படகுப்பயணம் தாக்குதல் பயமற்ற ஒன்றாக நடந்து வருகிறது; கோடி ரூபா பெறுமதியான புனரமைப்பு வேலைக்கான ஆரம்ப முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. கைதிகளை விடுவித்துக்கொள்ளும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் எவையும் புலிகளைப் பொறுத்தவரையில் பெருமளவக்கு அவர்களுக்கு உதவக்கூடிய விடயங்கள் அல்ல.. புலிகளது இராணுவ தயாரிப்புகட்கு உதவக்கூடிய பொருட்கள் உள்ளே போகின்றன என்று இங்குள்ள பத்திரிகைகளும் இராணுவவாதிகளும் கூறிய போதும் அவற்றில் பெரியளவு உண்மை இருப்பதாக கொள்ள முடியாது. ஏனென்றால் புலிகளுக்கு வேறு வேறு வழிகளில் இவை கிடைத்துக்கொண்டுதான் இருந்திருக்கின்றன. மின்சாரம் வழங்குவது, பற்றரிகள், ரயர் ரியூப்புகள் உட்செல்வது, சீமெந்து போவதெல்லாம் புலிகளை பலப்படுத்தும் என்ற வாதத்தினை பெரிதாக ஏற்க முடியாது. இவை போகாத காலத்தில் கூட இவையெல்லாம் அவர்களிடம் தாராளமாக இருந்துதான் இருக்கின்றன.





**நாசமறுப்பான்**

ஆனால் அரசு தரப்பினைப் பொறுத்தவரை இவையொவ்வொன்றும் அரசியல் ரீதியாகவும், நல்லபிப்பிராய ரீதியாகவும் அதனை பலப்படுத்தும் அம்சங்களாகவே இருந்துள்ளன. வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் மத்தியில் அரசுக்கு இவற்றின் மூலமாக பலத்த ஆதரவு ஏற்பட்டுள்ளது உண்மை. அண்மையில் வடக்குக்கு சென்ற வாசுதேவநாணயக்கார தலைமையிலான சமாதான குழுவினருக்கு அங்கு கிடைத்த ஆதரவும் வரவேற்பும் அவர்களின் சமாதானப் பேரணிக்கு திரண்டுவந்த மக்கள் தொகையும், பேச்சுவார்த்தைக்கு சென்றவர்கள் மீது அங்குள்ள மக்கள் காட்டிய விருப்பும் அரசுக்கு அங்குள்ள மக்கள் மத்தியிலுள்ள ஆதரவை தெளிவாகக் காட்டுகின்றன.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் வரலாற்றை மறந்து இந்த ஆதரவுகளால் தலைக்கனம் கொண்டுவிடுவது புத்திசாலித்தனமானது அல்ல. புலிகளை மக்கள் வெறுக்கிறார்கள் அல்லது, இந்த மக்களது ஆதரவு என்றென்றைக்கும் எம்மீது இருக்கும் என்ற ஒரு முடிவுக்கு ஜனாதிபதி வருவாரென்றால் அது அவரது அரசியல் வாழ்வின் அஸ்தமனத்துக்கு போடும் அத்திவாரமாகிவிடும்.

இவ்வாறுதான் 1987ல் இந்திய விமானங்கள் உணவுப்பொதிகளை போட்ட போதும் மக்களிடையே ஆரவாரம்மிகுந்த ஆதரவு இருந்தது. இந்தியப்படையினர் வந்து இறங்கிய போது ''வாருங்கள், எம்மைக்காக்க வாருங்கள்'' என்று மாலை போட்டு வரவேற்றார்கள் அம்மக்கள். இந்திய ஜவான்களை காக்க வந்த தெய்வங்களாக வாழ்த்திப் பாடினார்கள். ஆனால் எண்ணி மூன்றேமாதத்தில் நிலைமை தலைகீழாகியது. இந்தியப்படை வேண்டாத விருந்தாளியாகியது; விரைவிலேயே தமிழ் மக்களின் பிரதான எதிரியாக மாறிப் போயிற்று.

இந்த விடயத்தை இன்றைய அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளதாக தெரியவில்லை. உலகெங்கும் வாழ்கின்ற எல்லாச் சாதாரண மக்களையும் போலவே வடக்கு கிழக்கு மக்களும் போரை வெறுக்கிறார்கள்; இறப்புக்கும் அழிவுக்கும் அஞ்சுகிறார்கள்; சமாதானத்தை நேசிக்கிறார்கள்; நிம்மதியான வாழ்வு வாழத்துடிக்கிறார்கள்.

ஆனால் இவற்றின் அர்த்தம் அவர்கள் இன்றைய 'சமாதான நடவடிக்கைகளான' பொருளாதார தடைநீக்கம், பாதை திறப்பு போன்ற விவகாரங்களால் தமது அரசியலுரிமைகளை நசுக்கிவிட ஒத்துப்போவார்கள் என்பதல்ல- இது அரசாங்க தரப்பினருக்கு விளங்கியுள்ளதாக தெரியவில்லை. புலிகள் பூநகரி இராணுவ முகாமை நீக்குமாறு கோருவதை ஒரு அசாதாரணமான நியாயமற்ற கோரிக்கையாக அரசு கருதுகிறது. (ஏன் சில சமாதான வியாபாரிகளும், ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கூட அப்படித்தான் கருதுகிறார்கள்) ஆனால் நாம் முன்பொருமுறை இந்த பத்தியில் குறிப்பிட்டது போலவே அவர்கள் நிலைமையின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ள மறுக்கிறார்கள். புலிகள் என்ற ஒரு இயக்கத்தையும் அதன் தலைவர் பிரபாகரனையும் பற்றிய தமது அபிப்பிராயங்களிலிருந்து அவர்கள் இத்தகைய முடிவுக்கு வருகிறார்கள்.

இவர்கள் சொல்வது போலவே - ஜனாதிபதி அவர்களும் அண்மையில் அறிவித்துள்ளது போலவே - புலிகள் இரக்கமற்ற கொலைகாரர்களாக இருக்கலாம். ஆனால் இந்தக் கொலைகள் - ஓரி தவறுகட்கு அப்பால் ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் உரிமைகளின் பேரில் செய்யப்பட்டவை என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். ***புலிகளது ஜனநாயக விரோத, கொலையையே கருத்து முரண்பாடுகட்கு தீர்வாக கொள்கின்ற நடைமுறைகளால் பலவீனமுற்றது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டமே அன்றி, அவ்வுரிமைகளின் மீதான தேவை அல்ல.*** புலிகளை, அவர்கள் சமாதானத்துக்கு எதிரானவர்கள், தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானவர்கள் என்று கருதுவதன் மூலம் எதையும் சாதித்து விட முடியாது. ஏனென்றால், இவ்வாறு சொல்லும் ஒவ்வொரு நபர்களையும் விட தீர்க்கமானதும் உறுதியானதுமான அரசியற் கோரிக்கைகளை புலிகள் முன் வைத்திருக்கிறார்கள். மாற்றுத் தீர்வொன்றை தீர்க்கமாக அரசு தரப்பு முன்வைக்கும் வரை, தமது ஆயுதங்களையோ, போராட்டத்தையோ தாம் மூட்டைகட்டி வைக்கப்போவதில்லை என்று அவர்கள் தெளிவாகத் தெரிவிக்கிறார்கள்; தமிழீழமே தமது தீர்வு என்று கூறும் அவர்கள் மாற்றுத் தீர்வை வைக்கவேண்டிய நியாயமான கடப்பாட்டை கொண்டுள்ள அரசாங்கத்திடம், அதை வைக்குமாறு கோருகிறார்கள்.

அரசு தரப்பிலும்,சில ஜனநாயக வியாபாரிகள் தரப்பிலும் புலிகள் மாற்றுத் தீர்வை முன்வைக்கவேண்டும் என்று கோரப்படுகிறது. நகைப்புக்கிடமான இந்தக்கோரிக்கை, மாற்றுத் தீர்வை முன்வைக்கவேண்டிய கடமையுள்ள அரசாங்கத்திடம் அதை நிர்ப்பந்திக்க தயாரற்ற நிலையிலிருந்தே வருகிறது.

மிக அண்மையில் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''யுத்தம் அற்ற சமாதான காலமாக இருக்கப் போவதாக கூறும் நடப்பாண்டிற்கு இராணுவச் செலவீனமாக ஒரு கோடிரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது; படைதிரட்டலில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது.''

''அரசின் அண்மைக்கால அறிக்கையைப் பார்த்தால் எம்மீது அரசு நம்பிக்கை இழந்து விட்டதாகவும் தோன்றுகிறது. புதிய அரசியல் தீர்வான்றை முன்வைக்க அரசு தயாராக இருப்பதாக அறிவித்தும் உள்ளது. அந்தத் தீர்வு என்ன விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்றும் தெரியவில்லை.''

''எவ்வாறெனினும்,அத்தகைய ஒரு தீர்வு பின்வரும் முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.''

- தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனக் குழுவாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
- தமிழ் மக்களின் உரிமைகளும் ஒருமைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

''தேசிய இனம்,பாரம்பரிய தாயகப்பிரதேசம்,சுயாட்சி என்ற அடிப்படையினை ஏற்றுக்கோள்ளும் விதத்தில் இவ்வுத்தேச தீர்வுத்திட்டம் அமைய வேண்டும்.''

''தமிழீழமே எமது குறிக்கோளாக இன்னமும் இருக்கும் அதேவேளை இக்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய சமஷ்டித்தீர்வொன்றை-வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுயாட்சி அதிகாரம் கொண்ட தீர்வொன்றை-அரசு முன்வைத்தால் அதைப் பரிசீலித்து ஏற்கத் தயார் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.''

இவ்வறிக்கையில்,அவர்கள் மேலும் ஒரு விடயத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.அதாவது 1985 திம்புப் பேச்சுவார்த்தையின் போது இக்கோரிக்கைகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை கணக்கெடுக்க அரசு தவறக்கூடாது என்பதே அதுவாகும்.

ஆனால்,அரசு தரப்பினரோ இன்னமும் அதே பழைய பல்லவியைப்பாடி அரசியல் நடாத்த முனையும் போக்கையே வெளிக்காட்டுகின்றனர், 'புலிகள் இதுவரை எத்தகைய வரவேற்கத்தக்க நேரிடையான பதிலையும் தரவில்லை' என்று தாம் முன்வைத்துள்ள அமைதிக்கான முன்மொழிதலைப்பற்றிய அவர்களது அபிப்பிராயங்கள் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் அண்மையில் கிழக்குக்குப் போன ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

உண்மையில் புலிகள் தொடர்பாக ஜனாதிபதி அடிக்கடி வெளியிடும் தகவல்கள் அவர்களை சமாதானத்தில் ஈடுபடுகின்ற ஒரு குழு என்ற அடிப்படையில் ஏற்றுக்கொண்டு பொறுப்புணர்வுடன் வெளியிப்படுவதாக இல்லை. 'கொலைகாரர்கள்', 'பொய் கூறுகிறார்கள்' என்ற குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி வெளியிடுவது அவர்மீது தெற்கில் எழக்கூடிய அரசியல் நெருக்கடிகளை சமன் செய்யவதாக இருந்த போதும், நடைமுறையில் இவை சமாதான முயற்சிகளை பாழடிக்கவே உதவக்கூடியவை என்பதில் ஐயமில்லை.

நியாயமாகப் பார்த்தால் அரசு தரப்பினால் இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்தக் கணம்வரை தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கு உத்தரவாதமளிக்கும் எந்த விடயங்களும் முன்வைக்கப்படவில்லை. மாறாக, நடை முறை ரீதியிலான 'அன்றாட' விடயங்களே பேசப்பட்டுள்ளன. அவற்றில் கூட,பொருளாதாரதடை முற்றாக நீக்கப்படவில்லை என்றும் புலிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

→ 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது அறப்போர் நிஷாந்த அவர்களே!

போரை அதிகமாக வெறுப்பதனால் சிலவேளைகளில் யதார்த்தத்தை உணரத்தவறிவிடுகின்றோமோ என்ற அச்சம் சரிநிகர் இதழ் 65 இல் நிஷாந்த அவர்களின் கட்டுரையை வாசிக்கும் போது ஏற்படுகின்றது. இந்த ஐயம் தொடர்பில் எழுந்த சில சந்தேகங்கள் தொடர்பாக சில கருத்துக்களை முன்வைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

''பிரபாரன் உண்மையாகவே தமிழ் மக்களின் உரிமைக்காகவே போராடுகிறார் என்றால் அதை நிறைவேற்றுவதற்கான காலம் இப்போது கனிந்துள்ளது'' என்று கட்டுரையின் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார் நிஷாந்த.

நாற்பதுகளின் பிற்கூற்றில் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து தொடங்கப்பட்ட ஒன்று, வடகிழக்கில் தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழும் இடங்களில் சிங்கள அரசுகளின் அத்துமீறல் குடியேற்றம். இக்குடியேற்றம் இன்று வடகிழக்கின் பல பாகங்களை கபளீகரம் செய்துவிட்டது. அத்துடன் வடகிழக்கின் இதயப் பகுதியான மணலாறு (வெலி ஓயா), பறவைக்குளம் (சேருவில) வரை ஊடுருவி வடகிழக்கை துண்டாடக் கூடியவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குடியேற்றங்கட்காக பலவேளைகளில் தமிழ்மக்கள் அடித்துவிரட்டப்பட்டிருக்கின்றார்கள். அது இன்று வரை தொடர்கின்றது. அனுராதபுரத்தில் ஆறொன்றில் இருந்து சிங்களத்தில் பதவியா என்றழைக்கப்படும் பாவற்குளத்திற்கு கால்வாய் ஒன்று வெட்டப்படுவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது என அண்மையில் ஒரு செய்தி வெளியாகியது. இதன் மூலம் 17,000 பேர் பயனடைவர் என்றும் அவர்களில் வடகிழக்கை சேர்ந்தோரும் அடங்குவர் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. பாவற்குளம் முழுமையாக தமிழ்ப் பகுதியாகவிருந்து இன்று சிங்களக் குடியேற்றப்பகுதியாக உள்ளது. இச்செய்தி சந்திரிக்கா குமாரணதுங்க அவர்கள் பிரதமராக பொறுப்பேற்றபின்னர் வெளிவந்திருந்தது. இதுவரை அத்திட்டம் நிறுத்தப்பட்டதாயோ அல்லது தமிழ்மக்கள் மட்டும்தான் குடியேற்றப்படுவார்கள் என்ற அறிவித்தல் விடுக்கப்பட்டதாயோ இல்லை. இவ்வாறு அன்று தொடக்கம் இன்றுவரை குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. இதற்கு இதுவரை சந்திரிக்கா அவர்களின் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது, தமிழ் பேசும் மக்கள் நம்பும்படியாக?

முன்னைய அரசை எடுத்து கொள்ளுங்கள்; தமிழ்மக்களின் கலை - பண்பாட்டு சின்னங்களை அழிப்ப




தில் தீவிரமாக இருந்தது; ஏனென்றால் சேனநாயக்கா, பண்டாரநாயக்கா என்போரால் வளர்க்கப்பட்டு வந்த இந்த நாடு சிங்களவர்களின் நாடு என்ற கருத்தியலை மேலும் முன்னெடுத்து செல்வதற்காக; யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதும், புனித தேவாலயம் குண்டு வீசி தகர்க்கபபட்டடமையும ஐுதனூலதான. ஏ ஙை அதிகமாக, மாணவர்கள் படிக்கும் சமூகக்கல்வி புத்தகத்தில் கூட இலங்கையின் வரலாறாக சிங்கள வரலாறு தான் கூறப்பட்டுள்ளது, வரலாற்றுதிரிபாக! ஏன் சமாதானம் விரும்பும் இன்றைய அரசிலும் கோணேசர்கோவிலில் பண்பாட்டு திணிப்பு நடைபெறுகின்றதே இதற்கு என்ன பதில்? முன்னேச்சரத்தில் அப்படி!

நிஷாந்த அவர்களே, சமாதானம் கதைத்துக் கொண்டு எமது பண்பாட்டை சிங்கள பெளத்தத்துக்கு தாரைவார்த்துவிடச் சொல்கின்றீர்களா? புலிகள் கதைக்க வருகின்றார்களில்லையே என்று ஓலமிடும் அரசு தான் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா? போர் கஷ்டமானதுதான், அழிவைத் தரக்கூடியதுதான். ஆனால் ஏன் ஆயுதம் ஏந்த வேண்டியேற்பட்டதோ, அதற்கானகாரணங்கள் இல்லாது செய்யப்பட்டதா? இல்லவேஇல்லை.பேரினவாதம் இன்னும் கருகிவிடவில்லை. புதுவடிவம் எடுத்துள்ளது, அவ்வளவு மட்டும் தான்.

சரி, அடுத்தததாக நடைமுறை அரசியலுக்கு வருவோம். இன்று சமாதானத்திற்கான குரல் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இதுவரைநாளும் சமாதானம் பேசுபவர்கள் தூரதேசமா போயிருந்தார்கள். கிளாலியில், மயிலந்தனையில், கொக்கட்டிசோலையில் என்று வெட்டிக் குவிக்கப்பட்ட போது சமாதான விரும்பிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள். இன்று சமாதானம் விரும்புபவர்கள் கிளாலி தடையையாவது நீக்கியிருக்கலாமே. அதாவது அரசிற்கு அழுத்தத்தை கொடுத்திருக்கலாமே. இன்று ஆட்சியில் இருக்கும் அதே அரசு

→15

# கதிர்காமரின் அவதூறு!

அச்சர்கள் தர்மசிறி சேனநாயக்காவும், லக்ஷ்மன் கதிர்காமரும் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தோழர் வாசுதேவ நாணயக்கார அவர்களது யாழ் வருகை தொடர்பாகவும், சமாதானக் கூட்டணியின் பேரணி தொடர்பாகவும் அபத்தமானதும் அவதூறாதுமான கருத்துக்களை கக்கியிருக்கிறார்.

தோழர் வாசுதேவா பதவிக்காக அரசியலுக்கு வந்த ஒருவரல்ல. ஆரம்ப காலம் தொட்டே ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்காக உரத்துக் குரல் கொடுக்கிறவராகவும், சிங்கள மக்களது மனச்சாட்சியாக வாழ்ந்து வருகிற, தமிழர்களதும் ஒடுக்கப்பட்ட இலங்கை மக்களதும் நண்பர் அவர். பெரும்பாலான தமிழர்கள் தமது துயரம் நிறைந்த காலங்களில் லக்ஷ்மன் கதிர்காமர் என்று ஒரு சக தமிழர் ஒருவர் வாழ்வது பற்றி அறிந்திருக்கவில்லை. தமிழர்களதோ அல்லது சிங்கள மக்களதோ நலன்களுக்காவோ உரிமைகளுக்காவோ அமைச்சரின் குரல் முன் எப்போதும் உரத்து ஒலித்ததாகவும் தெரியவில்லை. இன்று கூட தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைபற்றியோ வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த பூரண சமஷ்டி பற்றியோ மறந்தும்கூட ஒருவார்த்தை பேச துணியாதவர் அவர். அறிவறிந்த நாள்முதல் தமிழரது சுயநிர்ணய உரிமைக்காக போராட் வந்த தோழர் வாசுதேவ நாணயக்காரவின் யாழ் வருகை கண்டும் மக்களது சமகால எழுச்சியான சமாதான விருப்பை நிறுவனரீதியாக நிரந்தரப்படுத்த உழைக்கும் சமாதானக்கூட்டணியின் பணிகளை கண்டும் திரைமறைவில் 3வது யுத்தத்துக்கான தயாரிப்பில் ஈடுபடுகிறவர்கள் மட்டுமே கலவரமடை வார்கள்.

அமைச்சரின் கலவரம் அவரது அண்மைக்கால உலகப்பயணங்களும் பணிகளும் மூன்றாவது யுத்ததுக்கான ராஜதந்திர தயாரிப்போ என்ற சந்தேகத்தை தமிழர்கள் பலரது மனதில் எழுப்பியுள்ளது. அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தொடர்பாகவும் சமாதாண கூட்டணி தொடர்பாகவும் தெரிவித்த அவதூறுகளை திரும்ப பெறவேண்டும்.

***வ.ஐ.ச.ஜெயபாலன்***
***கொழும்பு***

# பாப்பரசர் என்ன பற்பசை விளம்பரதாரரா?

ஜனவரி 21-பெப்பிரவரி 08,சரிநிகரில் ''புன்னகைக்க மறந்த பாப்பரசர்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த கட்டுரையைப்படித்து விட்டு இக்கடிதத்தை தங்களுக்கு எழுதுகின்றேன்.

முதலில் இக்கட்டுரை தங்களின் அனுமதியுடன் வெளியிடப்பட்டதோ அல்லது தங்களுக்குத் தெயாமல் வெளியாகி விட்டதோ என்ற ஒரு சந்தேகம்.

பாப்பரசர் இங்கு வந்திருந்தார்; வந்த காரியத்தை நிறைவேற்றிவிட்டுச் சென்றார்; அப்படி இருக்க,அவர் கையைமட்டும் அசைத்தார்;சிரிக்கவில்லை; இந்நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டார் என்று எழுதி இருப்பது எழுதியவரின் அறிவீனத்தைக் குறிக்கின்றதா? அல்லது அவருடைய விசமத்தனத்தைக் காட்டுகின்றதா?

பாப்பரசர் இந்நாட்டு மக்களை ஏமாற்றி விட்டாரா? அவர் என்ன வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு அதைச் செய்யாமல் இந்நாட்டு மக்

பரசர் ஏமாற்றிவிட்டார் என்று இந்த மக்களில் எவ்வளவு பேர் இந்தக் கட்டுரையாளரிடம் கூறி இருந்தார்கள்? பாப்பரசரின் முகத்தில் புன்னகையை காணவில்லை என்றால் அது அதை எழுதியவரின் கண்ணில் எதுவோ குறை உள்ளது என்பதையே புலப்படுத்துகிறது.

பாப்பரசர் இங்கு ஒரு சினிமா நட்சத்திரம் போல வந்தாரா,மக்களைப் பார்த்து புன்னகை செய்து கொண்டிருப்பதற்கு? அல்லது ஒரு அரசியல் வாதியைப் போல் வந்தாரா? எல்லோரையும் பார்த்து பல்லிளித்துக் கொண்டிருப்பதற்கு. அல்லது ஏதாவது ஒரு பற்பசைக் கம்பனியின் விளம்பரதாரர் போல் வந்திருந்தாரா தன் பற்களை வெளியே காட்டிக் கொண்டிருப்பதற்கு?

பாப்பரசர் புன்னகைக்க மறந்து விட்டார் என்று கூறியதன் மூலம் பாப்பரசர் ஒரு மறதிக்காரர் அவருக்கு வயது போய் விட்டது அவர் இனி இளைப்பாற வேண்டும் என்று கூறுகிறாரா கட்டுரையாளர்?

பத்திரிகைச் சுதந்திரம் என்றால் எதையும் எழுதி விடலாம் என்பதல்ல.அப்படி எழுதுவது கழுதைக்கு கத்துவதற்கு கிடைத்த சுதந்திரமாகத்தான் இருக்கவேண்டும்!

பாப்பரசர் வந்து தனது பணியைச் செவ்வனே செய்துவிட்டுப்போன தன் பின்பு,சலசலத்து மடிந்துபோன ஒருவிடயத்தை மீண்டும் தூண்டிவிடும் வகையில் ஒரு கட்டுரையை எழுதி கொண்டிருப்பது எதற்காக? இதனால் யாருக்கு என்ன இலாபம்?

சரிநிகர் வெளியிடுவதற்கு வேறு விடயங்கள் இல்லையா? எவ்வளவோ முக்கியமான விடயங்கள் இருக்கின்றனவே!

சரிநிகர் சமானமாக வாழ்வம்! என்ற பாரதியின் பாட்டின் வரியைத் தாங்கி வரும் சரிநிகர், பாரதியின் கருத்தை இப்படியா கொண்டுவர வேண்டும்?

***கொழும்பு-13***
***-அருள்-***

# வீரர்கள் துயிலும் நிலம்

பேய்க்கூச்சல் விசி எழும்
காற்றில் ஒடிந்து விழும்
காவோலைச் சத்தத்தில்
குயில்
மிரண்டு அலறும்
மேற்கே பனந்தோப்பு.

கோடையிலே மணலோடும்
மார்கழியில் நீரோடும்
ஓடும் ஒரு வெள்ள வாய்க்கால்
தெற்கே திசை நீள.

கிழக்கெல்லை பொன்னிப்புலம்
நிலமற்றோர், '' நிறம் குறைந்தோர்''
புறந்தள்ளப்பட்டோர்கள் குடியிருப்பு

செம்மண் தரையும் வயலும் வடக்கே
இவை நடுவே
மருதத்தின் சஞ்சலத்தின் மீது
விரிகிறது ஒரு இடுகாடு;
நடுகற்களின் காடு.

வீரர்கள் துயிலும் நிலம்

இந்த நிலத்தில் தான் நூற்றுக் கணக்கானோர்
தூங்குகிறார்.

புன்சிரிப்பும் புத்துயிர்ப்பும்
முகத்துக்கு மெருகேற்ற
நெஞ்சு நிமிர்த்தி நடந்தவர்கள்,
நினைவை நெருடுகிற நண்பர் பலர், உறவினர்கள்
நானறியா இளைஞர்கள்.

கணப்பொழுது நெஞ்செரியும்
நெஞ்சில் எழுகின்ற நினைவெரியும்
நினைவில் உயிர் பரவும் கதை எரியும்.

இந்த நிலத்தில் தான் தூங்குகிறார் என்னவர்கள்.

நெடுந்தூரம் சென்று நிரை கவர்ந்தோர்
காற்றோடும் கடலோடும்
புகையோடும் போனவர்கள்.
போனவர்கள் போக
மீந்து கிடந்த உடலங்கள் கொண்டு வந்து
இட்டுப் புதைத்து எடுத்த நடுகல்லின்
எட்டுத் திசையும் உறைந்திருக்கும்
உம் ஆத்மா என்கிறார்கள்.

வீரச் சாவடைந்தோர் சொர்க்கத்தைச் சேர்வார்கள்
என்ற பழங்கதையைத் தமிழர்கள் நம்பார்

ஆண்டுக்கொரு முறை உற்றமும் சுற்றமும்
ஆட்சியும்
உங்களை நினைவு கொள்ள வருவார்கள்

அம்மாவின் கண்ணீர்
கல்லறையின் மேற்படிந்த
புழுதியைக் கழுவிய பிற்பாடு
நடுகற்கள் வளரும் இந்த
இடுகாட்டு நெடு நிலத்தில்
பூச்சொரிவார்;
விளக்கேற்றித் துயருறுவார்;
வீரம் விளைந்த கதை விம்மி விம்மிச் சொல்லி
நெஞ்சு நெகிழ்வார்கள்

எதை நினைத்தோம்?
எதை மறந்தோம்?

நம்பாதே வார்த்தைகளை முற்றாக.
வீரர்களுள்
மாற்றானின் படைவலியைச் சிதைத்தவர்கள்
உள்ளார்கள்.
அப்பாவி மக்களது சிரமரிந்து முலையரிந்து
குருதி முகம் நனைய இரவிரவாய் முகம் துடைத்து
வழிமாற்றி மொழிமாற்றி விழிமாற்றி
வெற்றியோடு மீண்டவரும் உள்ளார்கள்

மாவீரம், தியாகத்தின் மறுபக்கம் இது
இவையெல்லாம்
காதோடு காதாக வாய்மொழியில்
வாழ்கின்ற சத்தியங்கள்
இலட்சியத்தின் தாகத்தில் மட்டும்
தங்கியிருப்பதில்லை மேன்மை

நம்பாத வார்த்தைகளை முற்றாக நம்பாதே வார்த்தைகளை
வெற்று வார்த்தைப் பந்தலிலே உம் நினைவைச் சோடித்துத்
தெருத் தெருவாய்ப் பாடி வைத்த
யுத்தப் பரணி யெல்லாம்
செத்த வீட்டு வாசலிலே வெட்டி இட்ட
வாழைகளாய்
நாலாம் நாள் உதிர்கிறது;
ஞாபகமும் தொலைகிறது

சங்கிலியன் உடைவாளில் படிந்த
குழந்தைகளின் இரத்தத்தில்
என் கனவு கரைகிறது

ராஜராஜ சோழன் துவம்சம் செய்த
கர்ப்பிணிப் பெண்களின் அவல விழிகளில்
வரலாறு தற்கொலை செய்கிறது.

தஞ்சைப் பெரிய கோவிலின் கீழ்ப் புதையுண்ட
எலும்புக் கூடுகளின் துயரில்
என் கவிதை நனைகிறது

வரலாற்றில் வீரர்கள் இல்லை.

நம்பாதே வார்த்தைகளை முற்றாக.

காலத்தின் சந்நிதியில் மாசகற்றிய வீரத்தின்
கதை சொல்லக் காத்திருக்கிறேன்
இருப்பையும் இறப்பையும் இழப்பையும்
அப்போது பாடுவேன்.

நவம்பர் 1994

**- சேரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் மக்களும் ஒரு சில கனவுகளும்

முஸ்லிம் மக்களது எதிர்காலம் தொடர்பான சிந்தனைக்கு ஆதாரமாகக் கூடிய கட்டுரைகள், புத்தகங்களைத் தேடி கொழும்பிலுள்ள புத்தகக்கடைகள் பலவற்றில் ஏறி இறங்கி களைத்துப்போனேன்.

முஸ்லிம் நிறுவனங்களில்கூட முஸ்லிம் மக்களின் இனத்துவ, சமூக பொருளாதார கலாசாரப் போக்குகள் பற்றிய புத்தகங்களோ அறிக்கைகளோ காணக்கிடைக்கவில்லை.1983களின் ஆரம்பத்தில் தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும் என்ற நூலை எழுதி வெளியிட்டபோது நானும் வெளியீட்டாளர் 'அலை' யேசுராசாவும் மேற்படி நூல் முஸ்லிம் மக்களது இனத்துவ சமூகபொருளாதார கலாசார அரசியல் தொடர்பான புதிய ஆய்வுகளுக்கும், நூல் வளர்ச்சிக்கும் முன்னோடியாகும் எனக் கனவுகண்டோம்.இனியேனும் முஸ்லிம் சமய நூல்களை. வெளியிடுகின்ற நிறுவனங்கள் அவசியமான ஆய்வு நூல்களையும் வெளியிட முன் வரவேண்டும்.முஸ்லிம் மக்கள் தொடர்பான ஆய்வு, கலாசார நூல்களை வெளியிடுகிற புதிய நிறுவனங்கள் அமையவேண்டும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக பிரதேச ரீதியாக முஸ்லிம் மக்கள் மத்தியில் சமூக கலாசார அபிவிருத்திகளை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுவதில் கற்றறிந்த முஸ்லிம் மக்கள் முன் வந்து உழைக்க வேண்டும்.



– வ.ஐ.ச. ஜெயபாலன்

பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மக்கள்தொடர்பான விடயங்களில் கலைமானி பட்டத்துக்கும் மேற்படிப்புக்கும் எழுதப்படுகிற ஆய்வுக் கட்டுரைகளை தொகுத்து வெளியிடுவதுடன் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதிய மாணவர்கள் தொடர்ந்தும் ஆய்வுகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படவேண்டும்.

இவற்றோடு, மாவட்டவாரியாக முஸ்லிம் அறிஞர்களதும் முதிய அனுபவசாலிகளதும் அனுபவங்கள், ஞாபகக் குறிப்புகள் தொகுக்கப்பட வேண்டும்.

எனினும், இப்போது நிலைமை முன்னைப் போலில்லை. முஸ்லிம் மக்கள் மத்தியில் பல துறைகள் வளர்ச்சிகண்டுள்ளன.

ஆங்கிலக்கல்வி,உயர்கல்வி தொடர்பாக பின்தங்கியிருந்த நிலைமை மிக வேகமாக மாறிவருகிறது.சந்தோசமான ஒரு விடயம் முஸ்லிம் இளையதலைமுறையினர் பலர் மும்மொழி அறிவும் ஆற்றலும் உள்ளவர்களாக நிமிர்கிறார்கள்.பெண்கல்வி விரிவடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் உயர் கல்வியில் பெண்கள் முதன்மைஸ்தானம் பெறபோகிற போக்குகளை இனம் காணக்கூடியதாகவும் இருக்கிறது.முஸ்லிம் மக்கள்மத்தியில் மேலோர் குடும்பங்களுள்ளும் நகர்புறத்திலும் ஒடுங்கிப் போயிருந்த மத்தியதர வர்க்க வளர்ச்சி இன்று பன்முகப்பட்டு பரவலாகி வருகிறது.

இன்று வசதியான தென்பகுதி முஸ்லிம்களது பிள்ளைகள் பலர் சர்வதேசக்கல்லூரிகளில் ஆங்கிலத்தில் பயிலுகிற போக்கு வளர்ச்சி பெற்று வருகிறபோதும் இதுவல்ல எமது எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் மாற்றம், நமது பிள்ளைகள் மும்மொழி வல்லுனர்களாக வந்து சிறக்க வேண்டும் என்கிற சரியான ஒரு பார்வையும் வளர்ந்தே வருகிறது. தென்னிலங்கை முஸ்லிம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு விட்டுச் செல்ல நிலபுலன்களையோ பணத்தையோ வைத்திருக்கவில்லை.அவர்கள் பிள்ளைகளுக்குத் தரக்கூடியது மும்மொழிக் கல்விதான். நாளைய முஸ்லிம் சகோதரர்களும் சகோதரிகளும் இலங்கையின் பல்லின சமூக அமைப்பில் தொடர்புவழியாக, பாலமாக, சன்னலாக நிமிருவார்கள் என்று கனவு தோன்றுகிறது. இருப்பினும் இவற்றின் அர்த்தம் அவர்கள் ஒரு வளமான சமூக பொருளாதார அரசியல் கலாசார எதிர்காலத்தை உருவாக்கும் வாய்ப்பை பெற்றுள்ளனர் என்பது மட்டுமேயாகும்.வளமான எதிர்காலம் அவர்களுக்கு லொத்தர் பரிசாக ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை. அத்தகைய ஒரு எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு தேவையான ஆய்வுகளும் நூல் வெளியீடுகளும் பெருக வேண்டும். அந்த சிந்தனைப் பேரலையில் தற்போது முதன்மைபெற்றுள்ள போலி சமூக பொருளாதார அரசியல் சிந்தனைகளும் பொய் கனவுகளில் வாழ்கிற வாழ்வும் அடியுண்டு போக வேண்டும்.போலிச் சிந்தனை என்ற மணலில் அல்ல யதார்த்த நிலைமை என்கிற கல்லில் முஸ்லிம்களது எதிர்காலத்தின் அத்திவாரம் இடப்படட்டும் நூறு எழுதுகோல்கள் அசையட்டும். எதிர்வரும் காலம் இளைய தலைமுறை முஸ்லிம்களதாகட்டும்!

# அகதி

## வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் வெளியீடு -ஓர் அறிமுகம்

வடக்கிலிருந்து துரத்தப்பட்டவர்களாய், கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக 'புலம் பெயர் வாழ்க்கையின் அவலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்களின் சார்பில் 'அகதி' என்ற சஞ்சிகையொன்று வெளிவந்து கொண்டிருப்பது நம்மில் பலருக்குத் தெரியாது.

புலம் பெயர் வாழ்க்கையின் மிகத் தாமதித்த வேளையிலேயே ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகையானது இதுவரை ஏழு இதழ்களை வெளிக் கொணர்ந்துள்ளது.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் வெளியிடப்படும் இச்சஞ்சிகையானது தனது நோக்கத்தை முதலாவது இதழில் இவ்வாறு சொல்கிறது. '' இப்பத்திரிகையானது 'அகதி'கள் மத்தியில் இருக்கும் பலவீனங்களைப் போக்கி அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி, தன்னம்பிக்கைகளை ஏற்படுத்தி அவர்களை ஒன்றுபட்ட சமுதாயமாக, ஒரே குரலில் தங்களது சகல பிரச்சினைகளையும் முன்வைக்கக்கூடிய சமுதாயமாக ஆக்க முயற்சிப்பதோடு; அகதிகள் எண்ணற்ற பிரச்சினைகளை எதிர் நோக்கி அவற்றை நிவர்த்திக்க வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் தேவைகள், பிரச்சினைகள் இவைகளை நிவர்த்திக்கும் வழிவகைகளையும் எடுத்துக்கூறும்.''

தான் பிரகடனப்படுத்திய மாதிரியே இதுவரை வந்த இதழ்கள் மூலம் 'அகதி'கள் மத்தியிலும் அகதிகள் பற்றிய பிரக்ஞையுள்ளவர்கள் மத்தியிலும் ஆழமான தாக்கத்தினையும், விழிப்பினையும் ஏற்படுத்தியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. 'எம்முடைய தாயகமும் வடக்கே' என்ற வலுவான கோஷத்துடன் பாரம்பரிய பிரதேசக் கருத்தாக்கத்தில் வடக்கு வாழ் முஸ்லிம்களை உறுதியாக இணைத்துக் கொள்வதில் அகதி மும்மரமாக ஈடுபட்டுவருவது தெரிகிறது.

ஆரம்பத்தில் இருபது பக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்பட்ட 'அகதி'யானது அகதிகள் பற்றிய முக்கியமான செய்திகளையும், அவர்களுக்கான அறிவார்த்தவழிகாட்டல்களையும் வழங்கி வருகிறது. இதற்கு உதாரணமாக கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாவின் ''வடமாகாண முஸ்லிம் அகதி மாணவர்கள் எதிர் நோக்கும் கல்விப்பிரச்சினைகள்...'', வடமாகாண முஸ்லிம் அகதிகளின் புனர்வாழ்வு பற்றி ஒரு கண்ணோட்டம்...'' போன்ற கட்டுரைகளைக் கூறலாம். வட மாகாண முஸ்லிம்கள் பற்றிய ஆய்வினை இதுவரை யாரும் மேற்கொள்ளாத வகையில் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் அவர்கள் மேற்கொண்டுவருவது பாராட்டப்படக்கூடியதும், வரவேற்கக்கூடியதுமான ஒரு விடயமாகும். அகதிகள் பற்றிக் குறிப்பாகவும், வடமாகாண முஸ்லிம்கள் பற்றிப் பொதுவாகவும் அவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பரவலாக வெளிக்கொணரப்படுவது இன்றைய தேவைகளில் ஒன்றாகும் என்பது இங்கு குறித்துக்காட்டப்படவேண்டியது.

இவரால் தொகுக்கப்பட்ட ''வடமாகாண முஸ்லிம்கள்'' 1990ம் ஆண்டு புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதிலிருந்து இன்றுவரையான நிகழ்வுகள்'' மிகவும் பயனுடைய ஒன்றாகும். இத்தொகுப்பு அகதியின் 6ம் இதழில் உள்ளது.

ஆரம்ப இதழ்களில் வெளிவந்த '' யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறு '' என்ற எம்.எஸ். ரஹீம் எழுதிய நூலின் மீள் பிரசுரத் தொடர் முக்கியமானது. ஆனால் அது ஏனோ இடைநடுவில் நின்றுவிட்டது.

முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை 'பிரதானப்படுத்துவனவாகவும் இவ்விதழின் ஆக்கங்கள் இருக்கின்றன. அத்தோடு இழந்து போன தமிழ் - முஸ்லிம் மக்களது புரிந்துணர்வை புத்திபூர்வமாக மீட்டுக் கொண்டுவருவதிலும் அகதி தனது பங்களிப்பை வழங்குவது பாராட்டத்தக்கதாகும். வடக்கு வாழ் முஸ்லலிம்கள் பற்றி பிரக்ஞையுடன் எழுதிவரும் வ.ஐ.ச. ஜெயபாலன், பா.அ. ஜயகரன். ஜி.மொனிக்கா ஆகியோரின் கவிகைகள் மீளப் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வடக்கு வாழ் முஸ்லிம்கள் பற்றி விடுதலைப் புலிகளின் அண்மைய நிலைப்பாட்டினை ஆர்வத்தோடு கவனித்து வரவேற்கும் அக்தி வெளியீட்டாளர்கள், பிரபாகரன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியினையும் அன்டன் பாலசிங்கம் ''கௌண்டர் பொயின்ட்'', ''திஐலன்ட்'' ஆகிய பத்திரிகைளுக்கு அளித்த பேட்டிகளையும் பிரசுரித்துள்ளார்கள். பகைமை மறந்தவர்களாய் தாயகம் நோக்கிய பயணத்தை ஆவலோடு காத்திருக்கும் அகதிகளின் ஆவலை இது புலப்படுத்துவதாக உள்ளது. மேலும் அது அகதிகள் பற்றிய கூடிய் கரிசனையை வழங்கக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது.

அகதிமக்கள் தொடர்பாக முஸ்லிம் தலைமைகள் கொண்டிருக்கும் இரட்டை நிலைப்பாட்டினை அகதி தோலுரித்துக் காட்டியிருப்பது துணிச்சலானதாகும். தேர்தல் காலங்களில் மட்டும் அகதி மக்களில் மிக அன்பாயும், அக்கறையாயுமிருக்கும் அரசியல்வாதிகளிடம் விழிப்பாயிருக்குமாறு மக்களை அறைகூவும் பணியிலும் 'அகதி' ஈடுபட்டது.

இடம் பெயர்ந்துள்ள பெரும்பாலான மக்கள் மீளக் குடியேற்றப்படாத நிலையில் நடாத்தப்படும் இத்தேர்தல் வெறும் பம்மாத்து என்று கூறி கடந்த பொதுத் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு கோரியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.




– பாதுஷா

அரசியல் சுயலாபங்களுக்காகவும், அற்ப சலுகைக்காகவும் மக்கள் விலை போகாது காத்ததிலும், தாயகம் பற்றிய பிரக்ஞையை தூர நோக்கின் அடிப்படையில் ஏற்படுத்தியதிலும் அகதியின் பங்களிப்பானது பாரியது.

கதை, கவிதைகள், மற்றும் நடப்பு விடயங்களுடன் தொடர்புடைய ஆக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்படுகின்ற அகதியின் ஏழாவது இதழில் தற்போது வெளிவந்துள்ளது. 40 பக்கங்களைக் கொண்ட இதழின் விலை 10/= முகவரி: அகதி,15 A ரோஹினி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6

www.tamilarangam.net





## பெண்ணிலைவாத நோக்கில் தமிழ் சினிமா — 7

**சுசீலா ரவி**

பாரதிராஜா பெண்கள் பற்றிய திரைப்படங்களை எடுக்காவிட்டாலும் தனது திரைப்படங்களில் பெண்கள் பிரச்சினையைத் தொட்டுள்ளார். ஆனால் **புதுமைப் பெண்** என்னும் திரைப்படம் பெண்ணைப் பற்றி அவளின் விடுதலை பற்றி எடுக்கப்பட்ட திரைப்படமாகும். கதாநாயகி அச்சமும், நாணமும், அடிமைச் சிறுமதியும் கொண்டவளாகவே படைக்கப்பட்டுள்ளாள். காதலிக்கும் போதும் திருமண்மான பின்பும் வேதகாலத்து மாதரைப் போல கணவன் காலில் பூ வைத்துத் தொட்டுக் கும்பிடுகிறாள். பட்டதாரிப் பெண்ணாதலினால் திருமணத்திற்குப் பின் வேலை செய்து சம்பாதித்திருக்கலாம். இறுதியில் கணவன் - தனது கடமையை - உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றி கணவனையும் விடுவித்ததை எண்ணாமல் கற்பை சந்தேகித்ததைத் தாங்க முடியாமல் வெளியேறுகிறாள். பெண் விடுதலை,பேசிய இப்படத்திலும் கூட இரண்டு இடங்களில் இளம் பெண்களை அரைகுறை ஆடைகளில் பாடி ஆட விட்டுள்ளார் பாரதிராஜா. மனைவிக்கு விவாகரத்து உரிமை, பிரிந்து செல்லும் உரிமை உண்டு என்பதை அறிவு பூர்வமாகக் காட்டவில்லை. தன்னில் சந்தேகப்படும் கணவனைத் திருத்த முயற்சி செய்து முடியாத நிலையில் பிரியாமல், உணர்ச்சியின் அடிப்படையில் பிரிகிறாள். குனிந்திருந்த பெண்கள் ஒரே நேரத்தில் கையை உயர்த்தியபடி நிமிர்வதில் இருந்தே இத்திரைப்படம் ஆரம்பமாகிறது.

***"ஒரு தென்றல் புயலாகி வருமே***
***ஒரு தெய்வம் படி தாண்டி வருமே***
***கால தேவனின் தர்ம எல்லைகள் மாறுகின்றதே***
***அடுக்களை துடைப்பதும் படுக்கையை விரிப்பதும்***
***அது பெண்ணின் தொழில் இல்லையே***
***தரித்திரம் துடைப்பதும் சரித்திரம் படைப்பதும்***
***நிலவினில் இருக்கின்ற களங்கத்தை இவளது***
***பெரு விரல் துடைத்து விடும்***
***புதுயுக மகளிவள் அணிகின்ற வளையல்கள்***
***சிறைகளை உடைத்து விடும்"***

***"பத்தினிப் பெண்ணு இவ பார்த்தால் குறிஞ்சி***
***பக்கம் வந்தா நெருங்கி***
***எங்கவூரு பெண்ணும் அப்போதே***
***சூரியனைக் கட்டி வைச்சாளே"***

**போன்ற இப்பாடல்கள் உள்ள திரைப்படத்தில்**

**"ஆலிங்கனங்கள் பரவசம் இதில் அனுமதி இலவசம்"** போன்ற ஆபாசப்பாடல்களும் உண்டு.

பாரதிராஜாவின் ஏனைய திரைப்படங்களிலும் பெண்கள் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றது. பாக்கியராஜ் திரைக்கதை வசனம் எழுதி பாராதிராஜா நெறியாள்கை செய்த **புதிய வார்ப்புக்கள்** என்னும் திரைப்படத்தில் படத்தின் நாயகி ஊரில் உள்ள பண்பில்லாத ஒருவர் கட்டிய தாலியை அறுத்து எறிந்து விட்டு தனக்கு விரும்பிய வாத்தியாருடன் ஓடி விடுகிறாள். இங்கு பெண்கள் உரிமை வலியுறுத்தப்படுகின்றது. தாலி கட்டியவன் கல்லானாலும் கணவன் என்ற நிலை மாறி தனக்கு விருப்பமானவருடன் வாழ வைத்தது. ஆனால் இதே பாக்கியராஜ் கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்த **அந்த 7 நாட்கள்** எனும் திரைப்படத்தில் காதலன் காதலியைப் பிரித்து அவளை வேறு ஒருவனுக்கு மணம் செய்து வைத்த போதும் அவள் காதலன் நினைவாகவே வாழ்வதைக் கண்ட அவள் புருஷன் காதலனை அழைத்து அவளை ஏற்கச் சொல்கிறான். இது தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாத செயல். தாலி கட்டியவன் தான் புருஷன் என அவளை ஏற்க மறுக்கிறான் காதலன். இத்திரைப்படம் சொல்லும் கருத்து மனைவி மனதளவில் வேறு ஒருவனுடன் வாழ்ந்தாலும் தாலி கட்டியவனுடன் தான் வாழ வேண்டும் என்கிறது. இத்தகைய திரைப்படங்கள் காணப்படுவதற்குக் காரணம் போலிப் பண்பாடு, போலிக் கலாசாரங்கள் என்பனவாகும். பாரதிராஜாவின் இன்னொரு திரைப்படம் **சிவப்பு றோஜாக்கள்** ஆகும். இது மூடுபனி என்னும் திரைப்படக் கதையைப் போன்றதேயாகும். இங்கும் கொலை செய்யப்படுகின்றார்கள். ஆண்கள் மனோவியாதிக்குப் பெண்களே காரணம் என்று சொல்லப்படுகின்றது. மூடுபனி பற்றிய விமர்சனம் இதற்கும் பொருந்தும்.

ஜெயகாந்தன் எழுதித் தயாரித்த இரு திரைப்படங்கள் இங்கு கவனத்திற்கு உரியது. அக்கினிப் பிரவேசம் என்னும் சிறுகதை சில நேரங்களில் சில மனிதர்கள் என்னும் நாவல் இரண்டையும் இணைத்து ஒரு பிரதி தயாரித்து **சில 'நேரங்களில் சில மனிதர்கள்** எனும் திரைப்படம் 1977ம் ஆண்டில் வெளிவந்தது. ஒரு பலவீனமான கணத்தில் யாரோ ஒருவனிடம் தன்னை இழந்து பின் தன்னம்பிக்கையோடு படித்து முன்னேறி உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த யாரோ ஒருவரான பிரபுவைச் சந்தித்து அவனைத் தன் நண்பனாகப் பாவித்து வாழும் கங்கா. பெண் பற்றிய சகல தடைகளையும் உடைப்பவளாகச் சித்திரிக்கப்படுகின்றாள். தனக்குச் சரியெனப்படுவதைத் செய்யும் தன்னுணர்வு மிக்கவளான இதில் கங்கா காட்டப்படுகின்றாள். இங்கு கங்காவின் தன்னம்பிக்கை முக்கியமாகக் காட்டப்படுகின்றது. அரசியல் உணர்வு கொண்ட பத்திரிகை நிருபரும் நாடக நடிகையும் வாழ்க்கையில் இணைந்து அது குறித்து விவாதித்துக் கொள்வதும் அதனாலேயே பிரிவதும் பின்னர் மனிதாபிமானத்துடன் சேர்வதும் **ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்** என்னும் திரைப்படக் கதையாகும். இங்கு அவர்கள் தனித்துவங்கள் பேணப்படுகின்றன. நாடக நடிகை சுதந்திரமான கருத்துள்ள பெண்ணாகச் சித்திரிக்கப்படுகின்றாள். அழகியல் உணர்வு, சமூகம் பற்றிய பொறுப்புணர்வு பற்றி இருவருக்கும் வேறுபட்ட கருத்துக்கள் வெவ்வேறு தளங்களில் இருந்த போதும் ஒருவருக்கொருவர் கருத்துக்களில், விட்டுக் கொடுக்கவில்லை. ஒரு முதிர்ந்த பெண்ணாக இந்த நாடக நடிகை காணப்படுகின்றாள். ஜெயகாந்தன் பெண்ணைப் பொதுவாக சுதந்திரமான கருத்துள்ள முதிர்ந்த பெண்ணாகக் காட்டுவதைக் கவனிக்கலாம்.

### பெண் கலைஞர்கள்

திரைப்பட உருவாக்கத்தில் பெண் கலைஞர்கள் பெரிதும் பங்கேற்றுள்ளார்கள். பெண் கலைஞர்கள் இல்லாத திரைப்படமே இல்லை என்று கூறலாம். முக்கியமானவர்கள் நடிகைகள். இவர்கள் பற்றி பின்னர் விரிவாகப் பார்க்கலாம். ஏனைய தொழில் நுட்பக் கலைஞர்களான பெண்களின் பங்களிப்பைக் கவனிக்கலாம்.

பெண்களின் பிரச்சினைகள் பெண்களின் நோக்கில் இருந்து காட்டப்பட வேண்டிய தேவை ஒன்று உணரப்படுகின்றது. ஆண் எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது அம்பையின் எழுத்தில் பெண் பற்றிய புதிய பரிமாணம் தெரியவருகிறது. ஆக்க இலக்கியங்களில் மாத்திரம் அல்லாது வெகுசனத் தொடர்புச் சாதனங்களான சினிமா வீடியோப் படங்கள் போன்றவற்றிலும் பெண்களுடைய ஈடுபாடு தற்போது அதிகரித்து வருகின்றது. இது வரை காலமும் பெண்களது ஆக்கத் திறமைகளுக்கோ, படைப்புக்களுக்கோ அதிக தூண்டுதல் அளிக்கப்படவில்லை. ஆணாதிக்கம் நிலவும் சமூகத்தில் ஆண்கள் பெண்களை நோக்குவதற்கும், பெண்கள் பெண்களையும் அவர்களது பிரச்சினைகளை நோக்குவதற்கும் இடையே வேறுபாடு உண்டு. உதாரணமாக சினிமாவில் ஆண் படப்பிடிப்பாளர் தனது நோக்கிலேயே தனது கோணத்திலேயே பெண்களைக் காண்கிறார். "இவை அவலட்சணமான கோணங்கள்" என்று ஒரு பெண் படப்பிடிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். சினிமாவின் தொழில் நுட்பத்தை பெண்கள் கற்க வேண்டும். அக்கலை வடிவத்தை அவர்கள் கையாள வேண்டும். இவை மூலம் பெண்களது செய்திகள் உலகத்திற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் தமிழில் பெண் நெறியாளர்களால் நெறிப்படுத்தப்பட்ட திரைப்படங்களில் இத்தகைய அம்சங்கள் தெரிய வந்தனவா? இது மிக முக்கியமான கேள்வி. இதற்கு அவர்களுக்குள்ள சமூகப்பார்வை மிக முக்கியமானது. வெறுமனே வீடுகளிலும் ஸ்ரூடியோக்களிலும் சஞ்சரிப்பவர்களால் இதனை வெளிப்படுத்த முடியுமா? இந்தியாவில் புகழ் பெற்ற ஹிந்தி நடிகை "ஷபனா ஆஸ்மி" பம்பாய் நகரில் சேரி வாழ் மக்களின் குடிசைகள் அகற்றப்பட்ட போது அதனை எதிர்த்து அம்மக்களுடன் இணைந்து போராடி இருக்கிறார்" இங்கு சமூகம் பற்றிய பார்வையைக் காணமுடிகிறது. ஹிந்தியில் பெண் இயக்குனர் அபர்ணா ஷென் நெறியாண்ட **36 சொரங்கி லேன்** எனும் ஹிந்தி திரைப்படம் மற்றவர்களின் அன்புக்காக ஏங்கும் ஒரு கிழவியின் கதையைக் கூறுகிறது. பெண்களின் பார்வையில் இத்தகைய திரைப்படங்கள் எழுவது பெண்கள் பற்றிய புதிய பரிணாமத்தைத் தெரியப்படுத்தும்.




**- மகாஜனன்**

## வசந்தம் 91

***(கவிதைத்தொகுதி)***

### *- நட்சத்திரன் செவ்விந்தியன்*

***வெளியீடு: நான்காவது பரிமாணம்***

சமகாலத்தில் இலங்கையிலிருந்து வெளிவருகின்ற சிறந்த கவிதைகளின் தொகுப்பு இது. இவரது கவிதைகள் இன்னொரு பரிமாணத்தை வெளிப்படுத்தி நிற்பன. கவிதைகள் வெளிப்படுத்துகின்ற அனுபவங்கள் சுகமானவை. நவில்தோறும், நவில் தோறும் நயம் தருவன.

இலங்கையில் தற்போது வெளியாகிற கவிதைகள் - குறிப்பாக கிழக்கிலிருந்து வெளியாகிற கவிதைகள் சோலைக்கிளியின் பாதிப்பிலிருந்து, சர்ரியலிசப்பாங்கு பெற்று வருவதுண்டு. மறுபுறத்தில் சேரனின் பாதிப்புடனான கவிதைகள் வெளிவருதலும் உண்டு. தமக்கென்று தனித்துவமிக்க கவிஞர்களும் சமகாலத்தில் உண்டு. ஜெயபாலன், சு.வில்வரத்தினம், விஜயயேந்திரன், சிவசேகரம் இவ்வகையினர். நட்சத்திரன் செவ்விந்தியனின் கவிதைகளும் தனித்துவமானவை. வேறு கவிஞர்களின் பாதிப்பைக் காணமுடியவில்லை.

இக்கவிதைகள் தொற்றவைத்த அனுபவங்கள் வேறுவிதமானவை. பல வரிகளை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். **"இரவில் தாங்கள் நனைந்ததற்காக/ மாலைக்குப்பிறகு மாலையில் காகங்கள் கரைகின்றன..."/**

**" கடற்கரை ஒழுங்கைக்குள் தள்ளாடித் தள்ளாடி/ அறைக்குப் போனேன்' '/**

**"நான் மட்டும்/ ஒரு வலிய சாவுக்காகக் காத்திருக்கிறேன்"/**

**" மப்புக் கொட்டித் துக்கம் சொரிந்தது எனக்காக/ மழை தகரத்தில் அடித்துக்கொண்டு பெய்து/ என் அறையில் சில புத்தகங்களையும் நனைத்து/ நிலம் முழுவதும் தண்ணி கசிந்தும் ஓடியது"/**

**"எல்லையோரக் காடுகளில்/ கரிகொண்டு/ பல் துலக்கி நாள் கழிகிறது/ சாவும் போரும் நகர்கிறது"**

இவை உதாரணத்திற்கான சில வரிகள். ந.செ.வின் கவிதைகள் பற்றிச் சொல்கையில் கவிதைகளின் சொல்லாடல் அபூர்வமானவை. மைம்மல் வீதி, வலிய சாவு, கருங்கல் துருத்தும் தார் றோட்டில், அலாது பட்டு, சுருங்கின இரவு, கவிதை நசிந்து உருகி ஆவியாகிப் போயிற்று, கிறவல் பாதையில் மண்ணில் புதைந்து வளர்ந்தேன், போன்ற சொல்லாடல்களைக் கவனிக்கிற போது, வீரியமிக்க சொற்களாக அவை விளங்குகின்றன. இச்சொற்கள் கவிதையை இறுக்கமாக்கி, ஊசியாகக் குத்துகிறது.
கின்றது. இதனால் உள்ளடக்கத்தெரிவு என்பது முக்கியமானது. பொதுவில் பிற்போக்கானதைக் கவிஞர் படைக்கமாட்டார். அனேகமான அனைத்துக் கவிஞரது படைப்பும் முற்போக்கானவையே. இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் உள்ளடக்கத் தெரிவையே.

இவ்விடயம் தெரிவுக்கு உட்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்து கவிஞர் கவனம் பெறுகிறார். ந.செ.யின் கவிதைத் தெரிவு சிறப்பானது. அழுகிப் போன மாலை, கடக்கப்படாத எல்லை, வெறுமைக்குத் திரும்புதல், அமுங்கின மாலை, வேனிலிலிருந்து கூதல் வரை, ஷெல் குத்துதல் முதலானவை அத்தகையன. இதனால் கிடைக்கிற வாழ்க்கை அனுபவங்கள் குத்தீட்டிகளாக நெஞ்சைக் குடைகின்றன.

கவிதைகளின் பல வரிகள் சோவியத் யூனியனின் நாவல், சிறுகதைகளை மேலாகத் தழுவிச் செல்கின்றன.

**"கிறவல் பாதையில்/ மண்ணில் புதைந்து வந்தேன் நான்/ இக்கங்குல் காலத்தில்/ ஈனஸ்வரத்தில் பூனை அழுகிற மாதிரி/ மயில்கள் அகவுகின்றன"**

போன்ற வரிகளில் அதன் சாயலைக் கவனிக்கலாம்.

கவிதைச்சிறப்பு எனக்கருதி, சில சந்தர்ப்பங்களில் மொழி இவர் கையைத் தவறிச் செல்கின்றது. இதனால் கவிதை உணர்வு பாதகமடைகின்றது.

**"மேசையில் இருந்தால் ஷெல் கூவும் பயம்/ ஆண்டவரே இன்றுதான் உம்மை வேண்டுகிறேன் என்று தோப்புக் கரணம் போட்டேன்../ வயல் வெளி முருகன் கோயிலுக்கு/ 50 சதம் நினைத்தேன்/.** என்று கவிதை எழுதுகிற போது மொழி இடறுகிறது. ஆண்டவரே என்பது கிறிஸ்தவர்கள் இறைவனை அழைக்கும் வார்த்தை. தோப்புக்கரணம் என்பது இந்துக்கள் இறைவனை வணங்கும் விதம். இவ்விடத்தில் இவ்விடயம் கொஞ்சம் நெருடத்தான் செய்கிறது.

' மனம் விக்கிக் கரைந்திருக்க வேண்டிய' கொக்கட்டிச் சோலையில் 166 இற்கு மேற்பட்ட தமிழர் அகோரக்கொலை செய்யப்பட்ட சம்பவம்.

**" என்னை ஒன்றுமே செய்யவில்லை/ நாளைக்குப் பரீட்சை நடக்கும்/ இன்றிரவுக்கு நான் படிப்பேன்"/**

என்று இக்கவிஞரைப் பாதிக்காத போது என்ன பிறவியப்பா இவன்? என்றுதான் கேட்கத்தான் தோன்றுகிறது.

கவிதை சில சில சந்தர்ப்பங்களில் முதிர்வடையாதது போலத் தோன்றுகிறது. அதனை அழுத்திக் கூற முடியவில்லை.
தரமான தொகுப்பு இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சபுகஸ்கந்த வதைமுகாம் :

# உறங்குகின்ற அவலங்கள்

## பின்னணியிலிருந்தது 'கறைபடாத கரங்கள்?'

''நான் பிறந்ததிலிருந்து இங்கு தான் வாழ்ந்து வருகின்றேன்.இதில் மறக்கமுடியாத நாட்களென்றால் அது 1989-1990 காலப்பகுதியே.மிகவும் பயங்கரமான காலம்-அது.நாங்கள் எங்கள் வீடுகளைவிட்டு வெளியிறங்கவில்லை.ஆனாலும் எங்கள் காதுகள் மரண ஓலத்தைக் கேட்காத நாட்களில்லை.''

''கொன்றுவிடாதீர்கள் எனக் கதறும் மனிதக்குரல்கள் எந்த நாளும் ஒலிக்கும்.மரணவேதனையால் துடிக்கும் மனிதர்களது கதறல் கேட்கும்.இச்சத்தங்களெல்லாம் அதோ தெரிகிறதே அந்த உரவீடமைப்புத் தொகுதிக்கருகில் உள்ள வீடுகளிலிருந்து தான் வரும். ஒவ்வொரு நாளும்.. 24 மணி நேரமும் இது கேட்டுக்கொண்டே இருக்கும்.எங்களது குழந்தைகள் அப்போது சிறியவர்கள்.அன்று இவர்களும் இவர்களைப்பற்றி நானும் பீதியுடனேயே இருந்தோம்.இயலாத பட்சத்தில் மனைவியையும்,குழந்தைகளையும் அவரது தாயாருடைய வீட்டிற்கு அனுப்பிவைத்தேன். ஐயோ..அன்றய சந்தர்ப்பங்கள் என் காதுகளில் மீண்டும் கேட்ககூடாது.''

இது சபுகஸ்கந்த வதைமுகாமுக்கருகில் உள்ள குடியிருப்பைச்சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் சொன்ன தகவல்.

பல காலமாக வெளியாருக்கு நுழைய முடியாதிருந்த சபுகஸ்கந்தையில் அமைந்துள்ள இந்த பிரசித்திபெற்ற வகை முகாமுக்கு செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது..


சபுகஸ்கந்த உர வீடமைப்புத்தொகுதி மூன்று வடிவங்களைக் கொண்ட 62 வீடுகளைக்கொண்டது.இதில் நான்கில் மூன்று பகுதி இராணுவ முகாமாக மாற்றப்பட்டு வருகிறது.

1980ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சபுகஸ்கந்த யூரியா உற்பத்தி தொழிற்சாலையில் பணிபுரியும் அதிகாரிகளுக்காக அதனருகில் இந்த வீடமைப்புத்தொகுதி உருவாக்கப்பட்டது. எனினும் 1986இல் அத்தொழிற்சாலையில் உற்பத்தி நிறுத்தப்பட்டது.சேவைக்கு அமர்த்தப்பட்ட அதிகாரிகள் ஒன்றில் விலகிக்கொண்டனர், அல்லது விலக்கிக்கொண்டனர்.பாழடைந்து கிடந்த அந்த வீடமைப்புத்தொகுதியை அன்றைய ஆட்சியாளர்களான ஐ.தே.கவின் தொழிற்சங்க தலைவர்கள் சொந்தமாக்கிக் கொண்டனர்.

பியகம தொகுதி உள்ளடங்கியுள்ள கம்பஹாமாவட்டம் தற்போதைய எதிர்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கவின் பிரதேசமாக இருந்தபடியால் மேற்படி வீடமைப்புத்தொகுதி ரணில்விக்கிரமசிங்கவின் அலுவலகமாக பாவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது 'யானை வாடி' என அழைக்கப்பட்டாலும் 1988ற்குப் பின்னர் 'சபுகஸ்கந்த வதை முகாம்' என்றே அழைக்கப்பட்டது.

1989 காலப்பகுதி தொடக்கம் இந்த இடத்திற்குள் நுழைவதற்கு இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களுக்கும்,அங்குதங்கிய அரசியல் தலைவர்களுக்கும் மட்டுமே அனுமதிவழங்கப்பட்டது.அந்த காலப்பகுதியில் கம்பஹா மாவட்டத்தில் அமைந்திருந்த பிரதான வதைமுகாமாக இருந்த இந்த முகாமில் மட்டும் 2000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.ஆனால் ஒரு போதும் வெளியாருக்கு உள்நுழையக்கிடைக்காததினால் தொடர்ந்தும் இரகசிய வதை முகாமாகவே பயன்படுத்தப்பட்டது.

ஜே.வி.பி அமைப்பினை ஒடுக்குவதற்காக அன்றையகாலப்பகுதியில் பல கொலைக் குழுக்கள் பயன்படுத்தப்பட்டன.'பிரா',(இது ஜே.வி,பியின் கொலைக்குழு என அரசாங்கம் அன்று பிரச்சாரம் செய்திருந்தபோதும்,இல்லை அது அரசாங்கத்தினது கொலைக்குழுவே என்பது பின்னர் எல்லோருக்கும் தெரியவந்தது)'கரும்பூனை போன்ற கொலைக்குழுக்களையும் அன்றைய அரசாங்கம் இதற்கென்று அமைத்திருந்தது.களனி



பொலிஸ் அதிகாரியாக இருந்த டக்ளஸ் பீரிஸ்ஸின் கீழ் சபுகஸ்கந்த வதைமுகாம் இயங்கியது.

இந்த வீடமைப்புத் தொகுதியில் மக்கள் குடியிருப்பது 11 வீடுகளில் மட்டுமே.காட்டுப்பகுதிக்குள் இருக்கும் இன்னும் நான்கு வீடுகள் மூடப்பட்டிருக்கின்றன.பிரதான வதை நிலையமாக A 1/8இலக்கம் கொண்ட வீடு உள்ளது.இதிலிருந்து; ஏனைய மக்களது வீடுகளுக்கான தூரம் 200 மீற்றர் அளவு இருக்கும்.

A.2/2மற்றும்A 2/1 ஆகிய இலக்கம் கொண்ட வீடுகள் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் பாவிக்கப்பட்டிருக்கிறது.(குறிப்பாக 1988 தொடக்கம் 1994 பொதுத்தேர்தல் வரை) இந்த செய்திகளுக்காக தகவல் சேகரிப்புக்கு சென்ற இடத்தில் A 1/8 இலக்கம் கொண்ட வீட்டை சோதனை செய்த போது அங்கு இரத்தக்கறைகளும்,பழைய ரயர்களும் நிரம்பிக் காணப்பட்டன.

''இந்த வதை முகாம் பற்றிய தகவல்களை முதன் முதலில் எமக்கு அளித்தவர் பொலிஸ் அதிகாரியொருவர். தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட இருந்த இவர் பின்னர் எப்படியோ தப்பித்துக்கொண்டவர்.அவர் இது பற்றி குறிப்பிடும்போது ''இந்த வதை முகாம் காட்டில் இருக்கிற இராணுவ முகாம் இல்லை,அரசியல் கொலைக்குழு.சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் அதன் தலைவராக இயங்கினார்.அதன் ஆலோசகராக இலங்கையில் புகழ் பெற்ற அரசியல்வாதியொருவர். கொல்லப்பட்டவர்கள் ஜே.வி.பீ என சந்தேகிக்கப்பட்டவர்கள்.'சுதந்திர மாணவர் சங்கம்' காட்டிக்கொடுக்க பயன்படுத்தப்பட்டார்கள்''. என்கிறார்.

பிரதேசவாசியொருவர் இதுபற்றி கூறும்போது ''இந்த மாவட்டத்தில் ஸ்ரீ.ல,சு.கவுக்கு ஆதரவாக பல இளைஞர்கள் அன்று இருந்தார்கள்.தேர்தலில் வெல்வதற்கு இந்த இளைஞர்களை களையெடுக்க வேண்டும் என்பதை ஐ.தே.கயினர் அன்று கருதியிருந்தனர்.இதற்காக 'கோணவலசுனில்' எனப்படும் பிரசித்திபெற்ற கொலைக்காரனும் அவனது குழுவினரும் பாவிக்கப்பட்டனரே.

**என். சரவணன்**

அவன் பாலியல் வல்லுறவுச் சம்பவமொன்றில் சம்பந்தப்பட்டு சிறைத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டிருந்போது,ஜனாதிபதி விசேட பணிப்பின்கீழ் அவனை விடுதலை செய்ததுடன்,அவனது கொலைக்குழுவின் உதவியைப்பெற்றனர்.1981க்குப் பின்னர் நடந்த அத்தனை தேர்தல்களிலும் கோணவல சுனிலின் கொலைக்குழு பாவிக்கப்பட்டது.1988 காலப்பகுதியில் நடந்த கொலைகளுக்கு கோணவசுனிலும் பயன்படுத்தப்பட்டிருந்தான்.அனேகமாக ஸ்ரீ.ல.சு.க வைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலானோர் அழிக்கப்பட்டனர்.நன்ருக தேடிப் பாருங்கள்! இந்தமாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட சகல பொலிஸ் அதிகாரிகளும் ஐ.தே.க ஆதரவாளர்கள். உதாரணத்திற்கு நிட்டம்புவவில் இருந்த மைத்திரிரத்ன,களனியவில் இருந்த டக்ளஸ் பீரிஸ்,நீர்கொழும்மில் கடாபி போன்ற பல

→15

# ஜனாதிபதி அம்மையாரின் கவலையும்

# தேசிய இனப்பிரச்சினையின் எதிர்காலமும்

## பாலம்

நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை, இம் மாதம் நடைபெறஉள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''இந்தப் பேச்சுவார்த்தைகளில் என்ன அர்த்தமிருக்கிறது?'' - புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் இப்படிக் கேட்டிருக்கின்றார்.

சில விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுடனான உரையாடல் ஒன்றின் போது இது எனக்கு தெரியவந்தது. அவர்கள் சொல்கின்ற விடயங்கள் இவைதான்: 'அரசாங்கம் இவ்வளவு நாட்களாக தடை செய்யப்பட்டிருந்த சில பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் இங்குள்ள இலங்கை இராணுவமோ இவற்றுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சீமெந்து அங்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்ற அதேவேளை அதனோடு பயன்படுத்த வேண்டிய பிற பொருட்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப் படுகின்றன. எல்லா விடயங்களும் இவ்வாறே நடக்கின்றன'.

பிரபலபத்திரிகைகளான 'லங்காதீப', 'திவயின', 'ஐலன்ட்' பத்திரிகைகளுடன் கூடவே சில 'சமாதானவாதிகளும்', புலிகள் பங்கர்கள் கட்டுகிறார்கள், புதிதாக தமது படைக்கு கிழக்கிலிருந்து ஆட்சேர்க்கிறார்கள் என்று கூறி வருகின்றனர். நாம் சந்தித்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சொல்வதில் எவ்வளவுக்கு உண்மை உண்டோ இல்லையோ. அரசாங்கம் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது என்பதுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. அதற்கு தடையாக உள்ளவைகள் நீண்ட காலநோக்கில் படிப்படியாக அகற்றப்படவேண்டும். பதிலாக சீமெந்து கொடுத்தால் அவர்கள் 'பங்கர்' கட்டிவிடுவார்கள், மின்சாரம் கொடுத்தால் ஆயுதம் செய்துவிடுவார்கள் போன்ற அபத்தமான அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. இவை நிறுத்தப்பட வேண்டும். நான் முன்பொருமுறை இப்பத்தியில் குறிப்பிட்டது போல, அமைதியைக் கொண்டு வருவது சிலவேளை சாத்தியமாயினும், அதைத் தொடர்ந்து பேணுவது மிகவும் கடினமானதாகவே இருக்கும்.

குறிப்பாக, சமாதானப் பேச்சுக்கள் நடக்கும் இவ்வேளையில் அவை சுமூகமாக நடப்பதற்கான, பரஸ்பரம் நம்பிக்கையூட்டுகின்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமே ஒழிய அதை கெடுக்கிறவிதத்தில் எதுவும் செய்யப்படக்கூடாது. (தொடக்கத்தில் இரு தரப்பாரிடமும் இருந்த நம்பிக்கை இப்போது கணிசமானளவுந் தகர்ந்து போயுள்ளதாகத் தெரிகிறது!)

ஜனாதிபதி அம்மையாரிடம் ஒரு நம்பிக்கையுடன் கூடிய முன்முயற்சி இருக்கக்கூடும். ஆயினும், அந்தோ! அதன் மீது கூட சந்தேகம் கொள்ளும்படி - இது தொடர்பாக அவர் பொறுப்புடன் நடந்து கொள்வார்தானா என்று சந்தேகம் கொள்ளும்படியான-ஒரு கருத்தை கடந்தவாரம் தெரிவித்திருந்தார்!. ''விடுதலைப் புலிகள் என்னைக் கொல்ல முயற்சிக்கிறார்கள்'' என்பதுதான் அவரது அந்தக் கருத்து. சிலவேளை புலிகளுக்கு அவ்வாறு ஒரு நோக்கம் இருந்திருக்கவும் கூடும். ஆனால், எல்லோரும் சமாதானத்துக்கான தங்களது ''ஹோர்க்குலிய'முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, இவர் ஏன் இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்தார் என்று எனக்கு தோன்றிற்று.

இந்த நாட்டின் எல்லாத் தேசியத் தலைவர்களும் தமிழ் மக்களை உதாசீனம் செய்த நிலையிலும், அவர்கள் ஜனாதிபதி அவர்கள் மீது ஒரு மெல்லிய விருப்பத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கடந்த தேர்தலில் அவர்கள் தெரிவித்த அபிப்பிராயம் தெளிவாக காட்டுகிறது.

''சந்திரிகா என்ற பெயர் மீது அவர்கள் கொண்டிருந்த விருப்பு தேர்தலில் உறுதியாக வெளிப்பட்டது. என்னுடைய மனதில் கூட அப்படியான ஒரு உணர்வுதான் இருந்தது. ஆனால், இவை உரிய கணிப்பீட்டுடன் கணக்கெடுக்கப் படாவிட்டால் இன்றைய எல்லா ஆதரவும் ஒரு கணநேர காட்சியாக மறைந்து விடும். இதற்கு வரலாற்றில் நிறைய உதாரணங்கள் உண்டு''

புலிகளை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட நான் ஒரு புலி எதிர்ப்பாளன் அல்ல. அது கட்டாயம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஏனென்றால், மனித உரிமைகளின் அடிப்படையில் தான் அரசியல் அபிலாசைகள் முகிழ்த்து எழுந்து அமைப்பு வடிவம் பெறுகின்றன. புலிகளின் இயக்கம் கூட தமிழ் மக்களது உரிமைகளின் அடிப்படையில் உருவான ஒன்றுதான். ஆனால் அவர்களும் இனவாதம், இனவெறி என்பனவற்றுடன் கூடிய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். இதன் ஒரு அம்சமாகத்தான் நீண்டகாலமாக கிழக்கில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம், சிங்கள மக்களை அவர்கள் அங்கிலிருந்து விரட்டினார்கள். இந்த யதார்த்தங்கள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டுமே ஒழிய அவற்றை ஒதுக்கிவிட்டு ஆராய்வதிலோ பரிசோதிப்பதிலோ அர்த்தமில்லை .

இன்றைய, 'விளம்பரப்பலகை' சமாதான முயற்சிகள் இதைத்தான் செய்கின்றன. இவர்களது சமாதான முயற்சிகளில் இவர்கள் புலிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்கின்றனர்.

ஒரு நாள், ***ராவய*** (சிங்கள வாரப்பத்திரிகை - மொ-ர்) பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுடன் பேசிக்கொண்டிருக்கும் போது இது பற்றிக் கேட்டேன். ''புலிகளைக் கட்டுப்படுத்துவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்''

தனக்கேயுரிய நகைச்சுவையுடன் அவர் இவ்வாறு பதில் சொன்னார்.

→ 15

**நிஷாந்த எழுதுவது**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பனை வளரும் நிலத்தில்

நான் வாழ்க்கையில் இனி மேற்கொள்ளமாட்டேன் என எண்ணியிருந்த விடயம் யாழ்ப்பாணப் பயணம். தமிழ் ஈழம் என்றோ உருவாகினால் எங்கிருந்தோ வாழ்த்தி உளம் குளிர்வோம் என்ற எண்ணம் மனதில் நிரந்தரமாகிக் கொண்டிருந்த காலம். கேட்டுத்தான் பார்ப்போமே எனும் ஒரு அசட்டுத் துணிச்சல். தெரிந்தவர்களெல்லாம் சொல்லிவிட்டனர் போனால் நீ தொலைந்தாய் என்று. உன்னுடை எழுத்துக்கு அவ்விடம் பாதாளச் சிறைதான் என்றனர் விஷயமறிந்தவர்களாகக் கருதப்படும் சிலர் விபத்து என்ற போர்வையில் நீ அழிக்கப்படலாம் என அறிவுறுத்தினர் இன்னும் சிலர். எனக்குத் தலையில் தட்டிவிட்டதா எனக் கேட்டான் என் சிங்கள சகபாடி ஒருத்தன். புலிகளிடம் யாழ் வர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (I.C.R.C) ஊடாக அனுமதி கோருவதற்கு சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் தான் அருளர் விஷயத்தில் தமிழ்ச்செல்வனை கடுமையாகச் சாடி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை வரைந்திருந்தேன். இதன் காரணமாகவும் பலர் என்னைப் போகாதே என்றனர். ஒரே ஒரு நபரைத் தவிர.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து I.C.R.C இனூடாக புலிகள் நான் அங்கு செல்வதற்கான அனுமதியை அனுப்பியிருந்தனர். எனவே சென்றேன். பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைக் கடைசி நேரத்தில் கண்டு அவசர அவசரமாக எடுக்கப்பட்ட பாதுகாப்பு அனுமதியாகையால் அதில் ஒரு குழப்பம் வவுனியா இராணுவப் பொலீஸ் நிலைய அதிகாரிக்கு. ஆகவே பத்திரிகையாளன் என்றில்லாமல் சாதாரண தமிழ்க் குடிமகனாகவே தாண்டிக்குளம் தடை முகாமூடாகச் சென்று விட்டேன்.

சோதனை பலமாக இல்லை. நொச்சிமோட்டைப் பாலத்திற்கப்பால் தலை வெடிக்கும் வெயிலில் நடக்க வேண்டும் அரைமைலுக்கு மேல்,சாப்பாட்டுக்கடை வரும் வரை.அரசும் புலிகளும் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் கீழ் இந்த யாருக்குமற்ற பிராந்தியத்தில் (NOMAN'S LAND) ஒரு வண்டியை யாழ்ப்பயணிகளின் வசதிக்காக விடலாம். சிறு குழந்தைகளும் வயோதிபர்களும் பெரும் மூட்டை முடிச்சுகளுடன் செல்வோரும் கொதிக்கும் வெயிலில் யாருமில்லா இந்த இடை வெளியில் மிகவும் துன்புறுகின்றனர்.

ஓமந்தையில் புலிகளின் விசாலமான எல்லைப்புறக் குடிவரவு நிலையம். தமிழ் ஈழம் உங்களை வரவேற்கின்றது' எனப் பெரிய பெயர்ப்பலகை. பயணிகளை வகைப்படுத்தி சோதனையிட குறிகாட்டிகள். (இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கு ஒரு சோதனை நிலையம்) மருத்துவ நிலையம்,சிற்றுண்டிச்சாலையும் உண்டு.

ஓமந்தைக் குடிவரவு நிலையத்துக்கு அப்பால் மிக நேர்த்தியான ஒரு பிரயாணிகள் தரிப்பிடம் அடிப்படை நல் வசதிகளுடன் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியை நோக்கிய பயணத்தில் தார் றோட்டினை சிற்சில இடங்களில் மாத்திரமே காணலாம். மற்றப்படி கிறவலும் குழியும்தான். வழியில் நேர்த்தியானவை எனச் சொல்லக்கூடிய விதத்தில் தமிழீழ காவல் நிலையம், நீதிமன்றம் மற்றும் புலிகள் நிறுவியுள்ள ஒரு வாசிகசாலை (புளியங்குளத்திற்கு அருகில் என நினைக்கின்றேன்)போன்றவை உண்டு.

முகாம் இருந்த இடத்தில் மாவீரர் துயிலும் இல்லம். முகாமிற்குள் புகுந்த கரும் புலிகளின் வாகனம் வெடித்த இடம் என்று றோட்டில் பெரிய பள்ளத்தாக்கைக் காட்டினார் எமது சாரதி.

மாங்குளம் சந்திக்கு சற்று அப்பால் பாடசாலைச் சிறுமியர் மூவர் துணிச்சலாக மறித்து ஏறிக் கொண்டனர்.



முன்னாள் இராணுவ முகாம்

சாலையோரக் கிராமங்களில் மக்கள் நடமாட்டத்தின் வீழ்ச்சி நீண்டகாலத்தின் பின் செல்பவர்களுக்கு கண்ணை உறுத்தும் ஒரு விஷயம். பிரயாணச் சிக்கல்கள், செலவீனம் ஆகியன காரணமாக மக்கள் அதிகம் வெளியில் நடமாடுவதில்லையா? அல்லது யுத்தத்தின் கொடூரத்தால் மக்கள் தொகையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா? இது யாழ் சென்று திரும்பும்வரை என்னில் தோன்றிய ஒரு கேள்வி. இங்ஙனம் கேள்வி தோன்றக் காரணம் உண்டு. பிரேமதாசாவின் ஆலோசகர்களில் ஒருவர் யுத்தநெருக்கத்தாலும் அழிவுகளாலும் வடக்கில் சனத்தொகை வீழ்ந்துவிட்டால் புலிகளுக்கு வருமானமும் ஆட்சேர்ப்பு வசதியும் இல்லாமற் போய்விடும், இது அரசிற்கு வெற்றியைப் பெற்றுத் தரும் எனக் கூறிவந்தார். புலிகள் தற்போது ஒரு சனத்தொகை மதிப்பீட்டைச் செய்து வருகின்றனர். அது நிறைவேறினால் நிலைமை தெரிய வரும். யுத்த நெருக்கத்தால் சனத்தொகை வீழ்ச்சியை ஏற்படுத்தி வெல்லுதல் என்பது இராணுவங்கள் கையாளக் கூடிய ஒரு தந்திரோபாயம்.

புளியங்குளம் சந்தியில் பழைய கடைகள் அதே நிலையில் உள்ளன. முற்காலத்தில் அதில் ஒரு கடையில் மானிறச்சியும் இடியப்பமும் தின்றுவிட்டு சந்திக்கு அண்மையில் உள்ள காட்டுப் பாதையில் போனால் வரும் மரையடிச்ச குளத்தில் என் பழைய கூட்டாளி R.Rஉடன் தங்கியிருந்த சில நாட்களின் நினைவு நெஞ்சில் நிழலாடியது.

மாங்குளம் சந்தியை நெருங்கும் போது தாக்கப்பட்ட முகாமையும் அதன் சுற்று வட்டாரத்தையும் ஆறுதலாகப் பார்க்க வேண்டுமென ஆவல். அம்முகாம் தாக்குதலைப் பற்றி ஆங்கிலத்தில் நான் எழுதிய கட்டுரையில் இழையோடிய 'சில புவியற் கருத்துக்களை சரிபார்த்துக் கொள்ளலாமே-என ஒரு எண்ணம் சரிவரவில்லை. யாழ் இரவு பஸ்ஸில் போகையில் மாங்குளம் தடை முகாமில் திடீர் சோதனைக்காக ஈரல்கருக இறங்கிய காலமும் உண்டு.

ஒவ்வொருநாளும் பாடசாலை போகவர எட்டுமைல் நடை. கொதிக்கும் வெயில். ஆங்கில ஆசிரியர் வருவதில்லையாம். இப்படியாக அந்த மண்ணில் இன்னொரு சின்னப் பெண். காலிலும் நெஞ்சிலும் மாறாத வடு. மாற்றவும் மனமில்லை. சிதைந்து போன உள்ளத்தின் துகள்களை காலால் தட்டிவிட்டு கருமமே கண்ணாகமேற் செல்லும் அவளது வைராக்கியம், திடமாகவும் நேராகவும் நிமிரும் பனை வளரும் மண் தானே அது. என்னைப் போன்ற மட்டக்களப்பானுக்கு இம் மனநிலை என்றும் ஒரு புதிர் தான்.

முறிகண்டி

ஈழப் போரின் முன்பிருந்ததைப் போல் பிள்ளையாருக்குக் கலகலப்பான நிலையில்லை. வாகனங்கள் குறைவாயினும் பழைய கடைகள் பெரும்பாலும் உண்டு.

கிளிநொச்சியில் புலிகளின் அரசியற் துறைப்பணிமனை. அங்கிருந்து துறை நோக்கிய் பயணம் கடினமானது.ஏரி கடந்தால் கிளாலித்துறைப் போக்குவரத்து மையத்தில் இராக் கடை உண்டு.புலிகள் நடத்துகிறார்கள். கொத்துரொட்டி ருசியானது. யாழ்ப்பாணம் போய்சேரும்போது நடுச்சாமம். சுபாஷ் ஹோட்டலில் நான் வருவது தெரிந்திருந்தது (விடிந்ததும் உதயன் பத்திரிகை முன்பக்க மூலையில் 'யாழ் வரும் பத்திரிகையாளர்' என என்வருகையைப் பற்றிச் செய்தி). புலிகளின் பத்திரிகை தொடர்பாளர் ஜெயாமாஸ்டா மற்றும் அவருடைய உதவியாளர் மாறன் ஆகியோர் சந்திக்க வந்திருந்தனர். நான் எங்கெங்கு செல்ல வேண்டும் புலிப்பிரமுகர் எவரைக் காணவேண்டும் எனக் கேட்டு கவனமாகக் குறித்துக் கொண்டனர். ''இருங்கள் வாகனம் எடுத்து வருகிறோம்'' என்று போனவர்கள், சில மணித்தியாலங்கள் காணவில்லை.

இடையில் உதயன் பத்திரிகையிலிருந்து என்னைச் சந்திக்க வந்த ஒரு இளம் நிருபருடன் யாழ் நகரைப் பார்க்கலாம் என்று புறப்பட்டேன். நூலகம், வீரசிங்கம் மண்டபம், தபாலகம் மற்றும் கோட்டையை அண்டிய பகுதிகள் அனைத்தும் புதர் மண்டி அழிந்து கிடக்கின்றன.

பேருந்து நிலையம் வேறு இடம் சென்றுள்ளது.என்னைப்போல் ஏழு, எட்டு வருடங்களின் பின் யாழ்ப்பாணம் செல்லும் ஒருவனுக்கு அந்த நகரத்தின் பழை மிடுக்கையும் கலகலப்பையும் எண்ணிப்பார்க்கையில் நெஞ்சில் ஏக்கமும் கவலையும் வராமல் போகாது.

சுபாஸ் கபே செல்லடிபட்டு மூடிக்கிடக்கிறது.

றொலெக்ஸ் கபே தனித்தமிழ் மாற்றம் பெற்று 'தாமரை குளிர் தடாகம்'

**டி.சிவராம்**

என்ற பெயர்ப் பலகையுடன் வியாபாரம் நடக்கின்றது. நகரமெங்கும் பெயர்ப்பலகைகள் தூயதமிழில் காணப்படுகின்றன. பேக்கரிகள் வெதுப்பகங்களாகவும், 'ஸ்டோர்கள்'கள் களஞ்சியங்களாகவும் கூல்பார்கள் 'குளிரருவி','சுவையருவி' எனவும், 'ரெக்கோடிங்பார்கள்' ஒலியகம்,இசையகம்எனவும்டிரெடர்ஸ்- வாணிபமாகவும் தனித்தமிழ் வடிவம் பெற்றுள்ளன.

பிரபல யாழ் புடவைக்கடையான சீமாட்டி திருமாட்டியென தனித்தமிழாகி விட்டது. யாழ்நகரம் செல்லும் தமிழபிமானிகள் நெஞ்சம் இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்திடக்கூடிய வகையில் பெயர்ப்பலகைகளில் இன் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது.

இவற்றையெல்லாம் பார்த்துச் செல்கையில் தனித்தமிழை வடக்கில் நடைமுறைப் படுத்திவரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் அதன் பொறுப்பாளரும் பிரபாகரனுக்கு அடுத்ததாக புலிகளின் மிக மூத்த உறுப்பினரான பேபி சுப்பிரமணியம் என்னும் இளங்குமரன்னையும் காண வேண்டும் என்ற எண்ணம் என்னில் மேலோங்கிற்று.

இப்படியாக ஒரு சுற்றுச் சுற்றி விட்டு உதயன் பத்திரிகைக் காரியாலயம் சென்றேன். ஆசிரியர் கானமயில்நாதன் நீண்ட அனுபவமுடைய பத்திரிகையாளர். 9 ஆயிரம் பிரதிகள் வரை குடாநாட்டில் விற்பனையாகிறது. பத்திரிகைக் காகிதம் நான்கு மடங்கு விலையில் கொள்வனவு செய்யப்பட்டு, அச்சுக் கோப்பு முறையில் பத்திரிகை வெளிவருகிறது. பாதாள பங்கருக்குள் ஒரு அச்சியந்திரத்தை வைத்துள்ளனர். B.B.C, VERITAS, S.L.B.C,ரூபவாகினி,இந்திய வானொலி இப்படி எல்லாவற்றையும் கேட்டு செய்தி எடுக்கிறார்கள். கொழும்புப்பத்திரிகைச் செய்திகளும் ஒரு நாள் கழித்துக் கிடைக்கின்றது.

புலிகள் தன் தொழிலில் பெரிதாகத் தலையிடுவது இல்லை என்றார் கானமயில்நாதன். பத்திரிகை ஓரளவு இலாபத்தில் இயங்குகிறது.பல விளம்பரங்கள் கிடைக்கின்றன.தூரத்திடங்களுக்கு சைக்கிளில் போய் மரண அறிவித்தல் கொடுப்பதைவிட பத்திரிகையில் வருவது பலருக்கு வசதி. இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில் அச்சுக் கோர்ப்பு முறையில் ஒரு பத்திரிகை யாழ்குடாநாட்டு வாசகர்களை மட்டும் நம்பி வெளிவருவது யாழ்மனிதனின் உறுதிக்கோர் நல்ல எடுத்துக்காட்டு. அவனை இங்குள்ள பயல்களால் என்றுமே அழித்திட முடியாது. யாழ் மகன் அப்படியல்ல வாழ்வதில் உறுதி கொண்டவன்.

பிற்பகல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சென்றோம். மிக நேர்த்தியாய் பேணப்படுகிறது. இது ஓர் படை வீரரின் மயானம் என்ற எண்ணம் தோன்ற முடியாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இறந்த புலிகள் சிலரின் நடுகற்களுக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்த ஒருசிலர் அங்கு காணப்பட்டனர்.

பண்டைய தமிழகத்தில் களத்தில் சிறப்புடன் போரிட்டு வீழ்ந்த வீரர்களுக்கு நடு கற்கள் வைத்தும் திருப்பள்ளிப் பள்ளிகள் எழுப்பியும்,வழிபட்ட மரபு பலமாக வேரூன்றி இருந்தது நாமறிந்ததே. யாழ்ப்பாணத்திலும் சமஸ்கிருத வழிபட்ட இந்து மதம் நாவலர் போன்றோர்களால் பரப்பப்படுவ்தற்கு முன்னர் இவ் வீரமரபை அடித்தளமாகக் கொண்ட ஒரு வழிபாட்டு முறை இருந்தது.உதாரணமாக யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் என்பது ஒல்லாந்தருடன் போரிட்ட ஏழு வன்னிச்சிகள் தாம் கைப்பற்றப்படுவதை தவிர்ப்பதற்காக நஞ்சருந்தி மாண்டபின் அவர்களுக்காக எழுப்பப்பட்ட கோயிலாகுமென்று பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை குறிப்பிடுகிறார். இன்று வட

→ 15



கிளாலி கடலேரி

www.tamilarangam.net



# 50 வருட குத்தகை: மலையக மக்களின் கழுத்தில் சுருக்குக் கயிறு

வேலுச்சாமி

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் பரீட்சார்த்தமாக 5 வருட குத்தகைக்கென தனியார் கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களை 50 வருட குத்தகைக்கு கொடுப்பதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அண்மையில் 1995ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து பேசும் போது பிரதி நிதிஅமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்திருந்தார்.

ஏற்கெனவே ஐக்கிய தேசியக்கட்சியால் தோட்டங்கள் கையளிக்கப்பட்ட 23 முகாமைத்துவக் கம்பனிகளில் 4 கம்பனிகள் மட்டுமே இலாபத்துடன் இயங்குகின்ற ஒரு நிலையில் எவ்வித மதிப்பீடுகளும் இல்லாமல் அரசாங்கத்தினால் இம்முடிவெடுக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட அபிவிருத்தி பற்றிய நலன்களோ, அங்கு வாழும் மலையக மக்களின் நலன்களோ கவனத்தில் எடுக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்ட ஒரு முடிவாகவே இம்முடிவு காணப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இத்தோட்டங்களை தனியார் கம்பனிகளுக்கு கொடுத்த போது மலையக தொழிற் சங்கங்கள் உட்பட பல முற்போக்கு சக்திகள் இதனைக் காரசாரமாகக் கண்டித்திருந்தன. ஆனால் முன்னைய அரசாங்கம் அவற்றையெல்லாம் அசட்டை செய்து தொண்டமானின் ஆதரவுடன் தனியார் கம்பனிகளுக்கு கொடுக்கும் கைங்கரியத்தை நிறைவேற்றியிருந்தது.

தோட்டங்கள் கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு சில ஆண்டுகளிலையே அதன் விளைவுகள் பூதாகரமாக வெளிக்கிளம்பத் தொடங்கின. கம்பனிகள் கிடைத்த காலத்தில் தோட்டங்களிலிருந்து பிடுங்க வேண்டியதை பிடுங்க நினைத்தனவே தவிர தோட்ட அபிவிருத்தி எதிலும் முறையாக ஈடுபடவில்லை. தோட்ட மக்களின் நலன் பேணும் நடவடிக்கைகள் எவற்றிலும் அக்கறை செலுத்தவும் இல்லை.

அரசாங்கம் தோட்டங்களைக் கையளிக்கும் போது தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக வங்கிக்கடன்களையும் வழங்கியிருந்தது. இக்கடன்களை கம்பனிகள் வேறு முதலீடுகளுக்குப் பயன்படுத்தினவே தவிர தோட்ட அபிவிருத்திக்கு பயன்படுத்தவில்லை. ஏற்கனவே இருந்த தேயிலைச் செடிகள் தூர்ந்து போகவிடப்பட்டனவே தவிர மீள்நடுகை என்பது எந்தவொரு தோட்டத்திலும் நடைபெறவில்லை. தோட்டங்களை அபிவிருத்தி செய்வதை விட அதனை நட்டத்தில் காட்டுவதற்கே பல கம்பனிகள் முயற்சி செய்தன. இதன் மூலம் வங்கிக் கடன்களை அடைத்தலையும் தொழிலாளர் நலன் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்வதையும் தட்டிக்கழிக்க முற்பட்டன. பல தோட்டங்களில் செயற்கையான முறையில் அவை நட்டத்தினைக் காட்டின. தங்களுடன் சேர்ந்துள்ள சகோதரக்கம்பனிகளைக் கொண்டே தேயிலையை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதன் மூலம் நட்டத்தினைக் காட்டின. அதேவேளை அச்சகோதரக்கம்பனி கூடிய விலைக்கு தேயிலையை ஏற்றுமதி செய்தது. இலாபத்தை பின்னர் அவர்கள் பங்கிட்டுக் கொண்டனர்.

இதைவிட தேயிலையின் தரத்தைப் பொறுத்தவரையிலும் கூட இக்கம்பனிகள் போதிய அக்கறை காட்டவில்லை. அதிக கொழுந்தைப்பறிக்க வேண்டும் என்பதற்காக நல்ல தேயிலைக்கு உதவாத முற்றிய இலைகளை கொய்யுமாறு கூட தொழிலாளர்கள் பல இடங்களில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதனால் தேயிலையின் தரம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்காக ஏற்றுமதியாளர்கள் கலப்படம் செய்து கூட தேயிலையை விற்க முற்பட்டனர். இந்நிலை சர்வதேச ரீதியாக இலங்கைத் தேயிலைக்கு இருந்த நல்ல பெயரை இல்லாமல் செய்துள்ளது.

தோட்டங்களில் இருந்து அதிகவிரைவில் இலாபத்தை பெற வேண்டும் என்பதற்காக கம்பனிகள் காடு வளர்த்தல், மரம் வெட்டுதல் போன்றவற்றிலும் ஈடுபட்டன. தரிசாக இருந்த நிலத்தை காடு வளர்ப்பதற்காக பயன்படுத்தினால் பரவாயில்லை. தேயிலைச் செடிகள் வளர்ந்திருந்த இடத்தைக் கூட காடு வளர்ப்பதற்கு பயன்படுத்தின. அத்தோடு தோட்டங்களுக்கு அரணாக இருந்த தோட்டங்களில் பெரும் சொத்தாக விளங்கிய மரங்களைக் கூட தறித்து விற்பதில் ஈடுபட்டன. தொழிலாளர்கள் விறகுக்காக சிறிய மரத்தை தறித்தால் கூட பொலிஸாருடன் வரும் தோட்ட நிர்வாகம் மரங்களை தானாக வெட்டிவிற்கும் கைங்கரியத்தில் எவ்வித மன உறுத்தலும் இன்றி ஈடுபட்டது. மண்ணரிப்பபையும் மண் சரிவையும் தடுத்து தேயிலைச் செடிகளையும், தொழிலாளர் குடியிருப்புக்களையும் காப்பாற்றும் இம்மரங்கள் அழிக்கப்படுகின்றமையால் தோட்டங்கள் மண்சரிவு, மண் அரிப்பு அபாயங்களுக்கு இன்று உள்ளாகி வருகின்றது.



இவற்றுக்கு புறம்பாக தோட்ட நிலங்களிளை வேறு பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தும் நிலைமைகளும், வேறு பயிர்ச்சி செய்கைக்காக தனியார்களுக்கு தோட்ட நிலங்களை குத்தகைக்கு விடும் நிலைமைகளும் கூட இப்போது ஏற்பட்டுள்ளன. நுவரேலியா மாவட்டத்தில் உடப்புசல்லாவ பிளாண்டேசன் கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோட்லேஜ், கோட்பெல்,பூப்பனை, கந்தப்பனை டிவிஷன் போன்ற தோட்டங்களில் இவ்வாறு குத்தகைக்கு கொடுக்கும் முயற்சி நடைபெறுகின்றது. உருளைக்கிழங்கு உற்பத்திக்காகவே அதிகளவு நிலம் இவ்வாறு குத்தகைக்கு கொடுக்க முயற்சிக்கப்படுகின்றது. இக்குத்தகைகளில் எவையும் அங்கு வாழும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

இவ்வேறு பயிர்ச் செய்கை முயற்சிகளினால் பெருந்தோட்ட அபிவிருத்தி பாதிக்கப்படுவதோடு தொழிலாளர்களின் நலன்களும் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. தொழிலாளர்களின் வேலை நாள் வெகுவாகக் குறைகின்றது.

தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டமையால் தோட்ட அபிவிருத்தி சீர்குலைவு ஒரு பக்கம் நடைபெற மறுபக்கத்தில் அங்கு வாழும் மலையகத் தொழிலாளர் நலன்களுக்கு பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டன, வேலையின் நேரமும், வேலையின் அளவும் அதிகரிக்கப்பட்டன. இதனால் தொழிலாளர்கள் பல்வேறு பொருளாதார சுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் வாழங்கப்பட்ட 8 ரூபா சம்பள உயர்வு பற்றி மூச்சே கிடையாது. சில தோட்டங்களில் மாதத்தில் 6 நாட்கள் மட்டும் வேலை கொடுக்கும் நிலை கூட ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், பகிஸ்கரிப்பு போன்ற பல நடவடிக்கைளில் தொடராக ஈடுபட்டும் கூட தோட்ட நிர்வாகங்கள் அசைந்ததாகத் தெரியவில்லை.



இதைவிட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளும் கூட உதாசீனம் செய்யப்பட்டன. குடியிருப்புக்ககளை காலத்துக்காலம் திருத்தும் வேலைகளை இதுவரை காலமும் தோட்ட நிர்வாகமே மேற்கொண்டுவந்தது. தற்போது தனியார் கம்பனிகள் அதனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. குடிநீர் குழாய்களைத் திருத்தும் விடயத்திலும் இந்நிலையே காணப்படுகின்றது. தோட்ட மருந்தகத்தினதும் பிரசவ விடுதியினதும் நிலைகள் வார்த்தைகளால் கூறிவிடமுடியாது. போதிய மருத்துவ வசதிகளோ போதிய சுகாதார வசதிகளோ, கட்டிடத் திருத்தங்களோ இல்லாத பாழடைந்த நிலையங்களாகவே அவை உள்ளன. தோட்டங்களுக்கான வீதிகள் மனிதர் போக்குவரத்துச் செய்க்கூடிய வீதிகளாக இல்லை. இவை பற்றியெல்லாம் அரசாங்கத்தை கேட்டால் இவை தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பு எனக் கையை விரிக்கின்றது. தோட்ட நிர்வாகத்தை கேட்டால் தோட்டம் நட்டத்தில் இயங்கும் போது எம்மால் என்ன செய்ய முடியும் எனக்கூறுகின்றது.

இவ்வாறு தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டு ஒரு சில வருடங்களுக்குள்ளேயே இத்தகைய பூதாகரமான பிரச்சினைகள் தோன்றியுள்ளன. ஆனால் இப்பிரச்சினைகள் எவற்றையும் மதிப்பீடு செய்யாமல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்களைக் கண்டு பிடிக்காமல் அரசு 50 வருட குத்தகைக்கு கொடுப்பதற்கு முடிவெடுத்துள்ளது.

மலையக அமைப்புக்கள் பழைய தவறுகளை இது விடயத்தில் இந்தத் தடவையும் விடாமல் பார்த்துக் கொள்வது அவசியமானதாகும். தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு கொடுக்கப்படுவதை மலையக அமைப்புகளால் தடுக்க முடியும் என நான் நினைக்கவில்லை. உலகமெங்கும் பரவிவரும் திறந்த பொருளாதார சீர்கேட்டின் தலைவிதிக்கு மலையகமும் உட்படுவது தவிர்க்க முடியாதது. எனவே தனியார் கம்பனிக்கு கொடுக்கப்பட்டாலும் தோட்ட அபிவிருத்திக்கான உத்தரவாதத்தினையும் தோட்ட மக்களின் நலன்களுக்கான உத்தரவாதத்தினையும் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும். அதற்கு அரசு, கம்பனிகள் தொழிற்சங்கங்கள் இணைந்த முத்தரப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வது அவசியம்.

ஒப்பந்தத்தில் தோட்ட அபிவிருத்தி தொடர்பாகவும் மக்கள் நலன்கள் தொடர்பாகவும் பின்வரும் விடயங்களை அடக்கிக்கொள்வதற்கு மலையக அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

### தோட்ட அபிவிருத்தி தொடர்பானவை:

1. தோட்ட அபிவிருத்தி தொடர்பான முறையான திட்டங்களைக் கொண்ட கம்பனிகளுக்கே குத்தகை வாழங்கப்படல் வேண்டும்.

2. மாற்றுப் பயிர்ச் செய்கைகளுக்கு தரிசு நிலங்களைப் பயன்படுத்தலாமே தவிர தேயிலை வளரக்கூடிய நிலங்களைப் பயன்படுத்தக்கூடாது.

3. காலத்துக்காலம் மீள்நடுகை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. தேயிலையின் தரத்தில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். தரத்தைப் பாதிக்கக்கூடிய எந்த வேலையிலும் கம்பனிகள் இறங்கக் கூடாது.

5. தோட்டங்களை மண் சரிவிலிருந்தும் மண் அரிப்பிலிருந்தும் பாதுகாக்கின்ற மரங்கள் வெட்டப்படுவதற்கோ அருகிலுள்ள காடுகள் அழிக்கப்படுவதற்கோ இடமளிக்கக் கூடாது.

6. தோட்டங்களின் அபிவிருத்திக்கு முயற்சிக்காத கம்பனிகளின் குத்தகைக் காலம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

### தோட்ட மக்களின் நலன்களுடன் சம்பந்தப்பட்டவை:

1. வேலை நாட்கள், வேலையின் அளவு, வேலை நேரம் என்பது தொடர்பான உத்தரவாதம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2. மக்களுக்கென வழங்கப்படுகின்ற 20% பங்குகள் தோட்ட மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

3. தோட்ட மக்களுக்கு குடியிருப்புக் காணி வழங்கப்படுவதோடு அவர்கள் சொந்தமாக பயிர் செய்வதற்கு தலா ஒவ்வொரு ஏக்கர் பயிர் செய் நிலமும் வழங்கப்பட வேண்டும். தோட்டங்களில் வேலை நாட்கள் குறைந்து வருவதால் இது மிக மிக அவசியமானதாகும்.

4. மாற்றுப் பயிர்ச் செய்கைக்கு துரித நிலங்களை குத்தகைக்கு வழங்கும் போது தோட்ட மக்களுக்கே குத்தகைக்கு வழங்குதல் வேண்டும். தோட்ட மக்கள் கூட்டுறவு அடிப்படையில் அரச கடன் உதவியுடன் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவதற்கு வழிவகைகள் செய்தல் வேண்டும்.

6. தோட்ட மக்களின் குடியிருப்புகள் பயிர் செய் நிலங்கள், வீதிகள் குடிநீர் வசதிகள், பிரசவ விடுதிகள் மருந்தகம் என்பனவற்றை தோட்ட நிர்வாகத்திடமிருந்து எடுத்து பிரதேச சபைகளின் அதிகாரத்தின் கீழ் அவைகளை கொண்டு வருதல் வேண்டும். இதன் மூலம் தோட்ட நிர்வாகமே தோட்ட மக்களின் அனைத்துவாழ்வையும் நிர்ணயிக்கின்ற நிலையை இல்லாமல் செய்தல் வேண்டும். இதனூடாக தோட்டங்களில் மலையக கிராமங்களை உருவாக்குதல் வேண்டும். இது விடயத்தில் தொழிற்சங்கங்கள் தமது சொந்த நலனைக்கருத்தில் கொள்ளாது மக்களின் நலனையே கருத்தில் கொள்ளுதல் வேண்டும். தோட்டங்கள் கிராமங்களாகும் போது தமது பிடிதளர்ந்து விடுமென தொழிற்சங்ககங்கள் அஞ்சி நிலக்கோரிக்கைகளையும், கிராமிய மயமாதல் கோரிக்கையும் ஆதரிக்க பின் நிற்கின்றன. இது தவிர்க்கப்படல் வேண்டும்.

எனவே இறுதியாக தோட்டங்களை தனியாரிடம் கையளித்தல் என்பது தோட்ட மக்களின் கழுத்தில் தொங்கவிடப்பட்ட சுருக்குக் கயிறாகும். இதில் போதிய கவனம் செலுத்தப்படாவிட்டால் மலையக மக்களின் வாழ்வே அஸ்தமனமாகிவிடக்கூடிய நிலை ஏற்படலாம். மலையக அமைப்புக்கள் காலம் தாழ்த்தப்பட்ட நிலையிலாவது நீண்ட கால நோக்குடன் இவ்விடயத்தை அணுகுவதற்கு முயற்சிக்க வேண்டும். இவ்வரலாற்றுக் கடமையை அவை செய்யத்தவறுமேயானால் அவை வரலாற்றுப்பழிக்கு உள்ளாகுவது தவிர்க்க முடியாதது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக அரசியல் சமூக கலாசார அமைப்புகள்

இறுதிப்பகுதி

**மலையக அரசியல் சமூக கலாசார அமைப்புகள் என்ற இத்தொடர் இவ்விதழுடன் நிறைவு பெறுகிறது. இக்கட்டுரை மலையகத்தில் உருவாகி செயற்பட்ட, செயற்பட்டு வருகின்ற பல்வேறு அமைப்புகளின் பாத்திரங்கள் குறித்த பதிவைச் செய்திருக்கிறது என நம்புகிறோம். எனினும் இவ்வாறான ஒரு பதிவில் விடுபடல்களும், தகவல் தவறுகளும் சாத்தியம் என்பதால் அது குறித்து எழுதுமாறு வாசகர்களை வேண்டுகிறோம்.**

**-ஆ-ர்**

## எழுச்சி கொண்ட உள்ளங்கள் எழுகின்றன!

**வி.ரி.தர்மலிங்கம்**

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும், அபிலாஷைகளையும் அரசே தீர்த்து வைக்க வேண்டும். இந்நாட்டின் நன்மைக்காக உழைத்துக் கொடுக்கும் இம் மக்களின் உரிமைகளை அரசு இனி மேலும் புறக்கணிக்க முடியாது - என்ற தீர்க்கதரிசனமான உரிமை முழக்கத்துடன் 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் நாள் **''மலையக மக்கள் முன்னணி''** ஏழைமக்களின் உரிமைக்காக உறுதியுடன் போராடிய சந்திரசேகரனின் தலைமையில் தியாகத்தையும், துணிவையும் தனது வெற்றிக்கு அணிகலனாகக் கொண்டு உதித்தது.

**''மலையக மக்கள் முன்னணி''** - உதயமாகிய அந்த நாள் மக்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கை எனும் ஒளிக்கீற்றை அறிவித்த பொன்னாளாகும். கல்லும், முள்ளும், பள்ளங்களும், மேடுகளும் நிறைந்த பயங்கரமான அரசியல் பாதையைத் துணிந்து கடக்க மனோபலம் கொண்டு ஆரம்பிக்கபபட்டது. மக்களின் துயர் தீர்க்க வெற்றி முழக்கத்துடன், சங்கோசை எங்கும் ஒலிக்க மக்களின் அளவற்ற மகிழ்ச்சி ஆரவாரத்துடன் - திக்கெல்லாம் முரசு கொட்டி **''மலையக மக்கள் முன்னணி''** வெற்றிப் பாதையை நோக்கி வீறுகொண்டு எழுந்தது. மக்களின் உள்ளத்தை வெற்றி கொள்ள மக்கள் இந்நாட்டில் உயர்வுடன் வாழ நல்ல பல திட்டங்களுடன் மக்களை ஒன்றுதிரட்டும் சக்தியாகத் தன் பயணத்தைத் தொடங்கியது.

பல ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் இந்தியத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற 'இலங்கை இந்திய சங்கம்' என்றும், பின் 'இலங்கை இந்திய காங்கிரஸ்' என்றும் பெயர் மாற்றப்பட்டு ஒரு ஸ்தாபனம் 1939இல் அமைக்கப்பட்டது. இது இந்திய வம்சாவழியைச் சேர்ந்த பணக்காரர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இயங்கியது. காங்கிரஸின் பாதுகாப்பிற்காக தொழிலாளர் பிரிவையும் 1940ல் ஆரம்பித்து பயன்படுத்தத் தொடங்கியது. இதன் வளர்ச்சியில் அரசாங்க அணியில் அங்கத்தவர்களையும், அமைச்சர்களையும் பெற்றுக்கொண்டது. 1948ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ஏழு (7) மலையகத் தமிழர்களை உறுப்பினர்களாகப் பெற்று இலங்கையில் சக்திவாய்ந்த அமைப்பாக இயங்கியது. இப்புதிய பாராளுமன்றத்தில் ஐ.தே. கட்சி கொண்டு வந்த உரிமைச்சட்டத்தினால் மலையக மக்கள் அரசியல் உரிமைகளை இழந்தார்கள். அடுத்துவந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இதனால் இந்த அமைப்பின் அரசியல் செயற்பாடுகள் அஸ்தமித்துவிட்டன. அதன் பின் தொழிற்சங்க அமைப்புக்களே வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்று மலையக மக்கள் மத்தியில் ஆலமரமாக வளர்ந்தது.

இலங்கை இந்திய காங்கிரஸ் 1950இல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயர் மாற்றத்துடன் தொழிற்சங்கத் துறையில் பெரும் செல்வாக்குப் பெற்று வளர்ந்தது: தொண்டமான் அசைக்க முடியாத ஆயுட் காலத் தலைவராக நிலைத்து நின்றார். தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அரசியலையும் தொட்டுக் கொண்டு வந்தார்.

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முழுநேர அரசியல் கட்சி ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையாளர்களின் கோரிக்கையினை அவர் நிராகரித்தார். ஏறத்தாழ 50 ஆண்டுகளாக ஒரு ஸ்தாபனத்திற்கு ஒரு இனத்திற்கு ஒரு தனிநபர் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் தொடர்ந்து தலைமை தாங்கி வருகின்றார். என்றால் அம்மக்கள் பல ஆண்டுகாலமாக் வளர்ச்சியடையவில்லை. காலத்திற்கு ஏற்றவாறு சமுதாயம் மாற்றம் பெற முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அன்று மலையக மக்கள் மத்தியில் அஸ்தமித்த அரசியல் 1989ம் ஆண்டு மீண்டும் புத்துயிர் பெறுகின்றது. அரசியலில் மறுமலர்ச்சியைக்காண மக்கள் சுய சிந்தனையோடு செயல்படத் தொடங்கிவிட்டார்கள். அதனால் தான் சந்திரசேகரன் தலைமையில் மலையக மக்கள் முன்னணி உதித்த போது மக்கள் கைகொட்டி ஆரவாரத்துடன் வரவேற்றார்கள். மக்கள் மனதில் ஏ[illegible]பட்ட மனமாற்றத்தினால் தங்களின் பிரச்சினைகளை அரசியல் மூலமே தீர்க்க முடியும் என உணர்ந்துவிட்டார்கள். இவர்களின் உணர்வால் இன்று மலையகம் எழுகின்றது. மக்களின் ஒற்றுமையாலும், இலங்கை வாழ் மக்களிடம் எங்கள் பிரச்சினைகளைப் புரிய வைத்து அவர்களின் ஆதரவுடன் எம் சமுதாயம் உயர்வடைய 'மலையக மக்கள் முன்னணி' தீர்க்கதரிசனத்துடன் ஒரு வழிகாட்டியாகவும், மலையைக மக்களின் மாபெரும் சக்திவாய்ந்த அரசியல் இயக்கமாகவும் வளர்ந்து வருகின்றது.

மலையக மக்களிடம் மாற்றம் வேண்டும் என்ற எண்ணம் உதித்து விட்டது. மலையக மக்களின் வாழ்வில் சூழ்ந்துவிட்ட இருளை அகற்றி ஒலியேற்றி விடிவுகாணத் துடிக்கும் உணர்வுமிக்கவர்களுக்கு வடிகாலாக 'மலையக மக்கள் முன்னணி' திகழ்ந்தது. வருங்கால சமுதா்யம் ஒரு ஆரோக்கிய சமுதாயமாக தங்களின் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்யக் கூடிய வலிமை நிறைந்த சமுதாயமாக எதற்கும் முகம் கொடுக்கும், உறுதி கொண்ட மாபெரும் சக்தியாக திகழும் என்ற அசையாத நம்பிக்கையுடன் எழுச்சி கொண்ட உள்ளங்கள் மலையக மண்ணில் எழுகின்றன.

# வனத்தின் அழைப்பு

- இருட்குகையில்
சிதைந்த மனிதரின் நினைவிற்கு

அஸ்வகோஸ்

## பகுதி 1 - அலைகள்

கடலின் அழைப்பு
எப்படி இருந்தது நண்ப!
உண்பதும் உறங்குவதுமாய்
உன்னுலகினை வரைந்தாய்

கடற்கரையில் கையிணைத்திருந்த
கடைசி மாலையில் அடைந்த பரவசம்!
அன்று தத்துவம் தெரிந்திருந்தது!
அனுபவம் இல்லை
கடல் இரைந்து கொண்டிருந்த
பெளர்ணமி தினம்!

இன்றுவரை
அந்தக் கரையில் நானும் இல்லை!
உன்னைப் போல் கடலிலும் இல்லை!
அலைகளில்...!

ரசித்த நிலவும் முணுமுணுத்த பழைய பாடலின்
ஓரிரு வரிகளுமாய்
ஓர் அரசனைப் போல்
இரவுகளை வெற்றி கொண்டேன்
அடிமையடிமை யென்றார்த்தது பகல்!

அந்த கோடை! கூடவந்தவர்களைக் கொண்டுபோன புயல்!
அந்த பேரழிவு நான்
அந்த மலையும் தனித்தழும் தீவும் நான்
நான் அந்த வேதனை!

ஏறியேறிக் களைத்தோய்ந்த பின்னும்
சாம்பல் மேட்டில் கிளம்பும்
புழுதிகள் பற்றி ஏராளம்
கவிதைகள் கேட்ட பின்னும்
ஏனிதை எழுதினேன்?

வெளிவரமுடியா வரிகளை எழுதுவது
எனக்கு சிரமமே!
எங்கோ குழலொன்று தனித்தொலிக்கின்றது!
பச்சைப் பசேல் என்ற அந்தக் காலம்!
மலர்களை காவு கொண்ட இளவேனில்!

போர்!
மீளவும் மீளவும் போர்!
போரின் அனர்த்தம் என்னுள் விளைந்தன
நான் மாறினேன்
துருவத்திலிருந்து இன்னோர் துருவத்திற்கு
இடம் மாறினேன்

திருப்திதரா உண்மையாய் தனிமை!
இகழப்பட்டதும் வெறுக்கப்பட்டதும்
உண்மையாய் ஆனது!

எதிர்பார்த்தது போலவே
இரத்தக் கொதிப்பு அடங்கி
இதயத்தில் தங்கிவிட்டது!

பின் இறப்பு!
எல்லோருக்கும் வருவது போல்!
வரும் வரை காத்திருப்பு!


அள்ளப்படுவதற்கு முன்
எளிமையான ஒரு பாதை!
பிரியமான வழித்துணை!
முடியுமா!
எங்கிருந்து தொடங்குவது நண்ப!

(வரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# திபெத்: இரட்டை வேடதாரிகளை இனம் காட்டுகிறது!

இனப்பிரச்சினைத் தீர்வுகள் தொடர்பிலும் சிறுபான்மையினர் பட்டுவரும் அவலங்கள் தொடர்பிலும் திபெத்திய மக்களின் பரிதாப நிலை இரண்டு வகையில் கவனத்தை ஈர்க்கின்றது. திபெத்திய மககள் தொகையில் ஆறிலொரு பங்கினை சீன இராணுவம் ஏப்பம் விட்டுவிட்டது. ஆனால் இந்த எண்ணிக்கை பற்றி - மொத்தத்தில் 12 லட்சம் இறப்புகள் பற்றிப் 'பெரியவர்கள்' பெரிதாக எதுவுமே அலட்டிக்கொள்ளவில்லை. 1951 - 1979 இடையிலேயே இத்தகைய இழப்புக்கள் பெருமளவில் இடம்பெற்றிருந்தன. திபெத்தியர்களுடைய எதிர்ப்பு மும்முரமடைந்த வேளைகளில் 17 அம்ச உடன்படிக்கை தலாய்லாமாவினால் மீறப்பட்டது. 1959 ஏப்ரல் 24இல் அவர் இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்து நிலைமையை விளக்கினார். யூன் 20ஆந் தேதியன்று உடன்படிக்கையைத்தான் தூக்கி எறிந்து விட்டதாக திபெத்தியத்தலைவர் பகிரங்கமாக அறிவிப்புச் செய்தார், அத்தோடு அவர் இந்தியாவில் அரசியல் அடைக்கலமும் பெற்றுக் கொண்டார்.

விசாரணையற்ற தடுப்புக்காவல், கண்ட இடத்தில் வைத்தே சுட்டுக் கொல்லுதல், இயந்திரமயமான கீழ்ப்படிவு இவை மட்டுமே திபெத்தியர்களுக்குச் சீனா வழங்கிய சுதந்திரமும் அபிவிருத்தியும் என்பதாயிற்று. திபெத்தியர்கள் தாய்நாட்டில் படும் அவதியையும் அவர்கள் அகதிகளாகச் சென்று அல்லலுறுவதையும் சொற்களை வைத்து விளக்க முற்படுதலில் பிரயோசனமில்லை. நாளடைவில் திபெத்தியர்களை திபெத்துக்குள்ளேயே சிறுபான்மையினராக்கும் முயற்சியின் சீனா திட்டமிட்டுச் செயற்பட்டுவருகின்றது. இந்த நோக்கில் இராணுவம் கிராமம் கிராமமாக அனுப்பப்பட்டது. இனவிகிதாசாரத்தை மாற்றும் முயற்சியே தனக்கு முதற்கவலையாக இருப்பதாக தலாய்லாமா இதனாலேயே தொடர்ந்து முறைப்பட்டு வருகின்றார். 'மக்கள் குழுவை இடம் மாற்றுதல்', திபெத்தியர்களைச் சீனர்களுடன் ஒன்று கலக்க வைத்தல் என்ற வழிகள் நன்கறியப்பட்ட இனப்படுகொலை ஆயுதங்கள், இவை திபெத்தில் தாராளமாக பிரயோகிக்கப்படுகின்றன.

ஐ.நா.தனது 1965 தீர்மானத்தில் கொலை,கற்பழிப்பு, எதேச்சாதிகாரக் கைது, சித்திரவதை என்பன பெருமளவில் நிகழ்த்தப்படுவதால் அங்கு சுதந்திரம் அடியோடு இல்லாமற்போய்விட்டது எனக்கூறியுள்ளது. அரசுக்குச் சிறப்பாக உரிய சில சலுகைகளின் கீழ் சீன அரசாங்கம் தொடர்ந்து தப்பித்து வந்தது. அரசு எதையும் செய்து தப்பிக்கலாம் என்ற விவஸ்தைகெட்ட கோட்பாட்டுக்குத் திபெத்தில் சீனா நடாத்தும் அட்டூழியம் நல்ல ஆதாரமாகின்றது.

சர்வதேசச் சட்ட அறிஞர் ஆணைக்குழு திபெத்துக்கு வந்து முழு அளவிலான விசாரணை நடாத்தியது. பலரைப் பேட்டி கண்டது. அதனது விசாரணையிலிருந்து தெரியவந்த தகவல்கள் மிகப்பயங்கரமானவையாக இருந்தன. ஆயிரக்கணக்கானோர் இறந்தனர் இராணுவ நடவடிக்கைகக்ளில் மட்டுமல்ல; தனித்தனியாகவும் வேண்டுமென்றேயும் கொல்லப்பட்டிருந்தனர். கம்யூனிஸத்தை எதிர்த்தமைக்காக, பணம் கறப்பதற்காக, அவர்களுடைய அந்தஸ்து, பதவி என்பவற்றுக்காக, மதத்தைத் துறக்க மறுத்தமைக்காக என்று அநாகரீக காரணங்களுக்காக கொல்லப்பட்டிருந்தனர். சூடுபட்டு, தடியடிபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, உயிருடன் புதைக்கப்பட்டு, நீரில் மூழ்கடிக்கப்பட்டு, துண்டு துண்டாக வெட்டப்பட்டு என்றெல்லாம் பலரும் மரணத்தைத் தழுவினர்.

மதகுருமார் அடிமைகள் போலக் கொண்டு செல்லப்பட்டு வேலை வாங்கப்பட்டனர். மடாலயங்களும் வழிபாட்டுத் தலங்களும் இராணுவ முகாம்களாக மாறின. 'தலாய்லாமா வாழ்க' என்று கோஷிக்காமலிருப்பதற்காக மக்களின் நாக்குகளைப் புண்ணாக்கிவிட்டது இராணுவம். 'இனப்படுகொலை' நிச்சயமாக இடம்பெற்றுள்ளது என்று ஆணைக்குழு அறிக்கையிட்டது. திபெத்திலுள்ள பௌத்தர்களை அழிப்பதே சீனாவின் நோக்கம் என்பதை அறிக்கை வெளியாக்கியது. கலாசார ரீதியான படுகொலையை நிறுத்துங்கள் என்று பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உவீத்தெரன் பிரபு உணர்வு பொங்க முழக்கமிட்டார் 1993இல். ஆனால் பிரிட்டன் இன்னும் கண்திறக்கவில்லை.

உயிர்வாழ உரிமை இல்லை, உணவு தேட முடியாது. உடையைக் கூட இராணுவம் விட்டு வைப்பதில்லை. இந்நிலையில் மனித உரிமைகள் பற்றிப் பெரிதாக வெளியில் பிதற்றுகிறார்கள் என்று திபெத்திய அகதிகள் குமுறுகிறார்கள். நாட்டின் சுற்றாடல் அடியோடு மாற்றப்பட்டு வருகிறது. மனிதப் பிறவியே கேவலப்படுத்தப்படுகிறது. கேட்பார் எவருமற்ற நிலையில் திபெத்தின் சுதந்திரம் சீன இராணுவத்தின் காலடியில் மிதிபடுகிறது. சீனாவின் இராஜரீக வல்லமை திபெத்தின் குரலைக்கூட நசுக்கிவிடுகின்றது. வெளிநாடுகளில் பிரச்சாரத்தை மேற்கொள்ளும் திபெத்தியர் பலவித இன்னல்களுக்கும் உள்ளாகின்றனர். பிரதிநிதிகள் வெளியேற்றப்படுவர் அல்லது பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இதற்கு சீனாவின் அசுர வல்லமை

**சிசைரோ**


பல விதங்களில் பாவிக்கப்படுகின்றது.

உதாரணமாக , 1993 யூனில் வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மகாநாட்டில் தலாய்லாமா பேச முடியாதவாறு தடுக்கப்பட்டார். சர்வதேச மன்னிப்புச் சபை இதனைப் பலமாகக் கண்டித்தது. யூலை 1993இல் தலாய்லாமா ஜப்பானுக்கு ஆறு நாள் விஜயம் மேற்கொள்ள இருந்தார். சீனாவின் தூண்டுதலால் விஜயம் தடைப்பட்டது. நோபல் பரிசு பெற்றவர்களை அனுமதிக்கும் கூட்டங்களில், அதே பரிசைப் பெற்றவரான தலாய்லாமா அனுமதிக்கப்படுவதில்லை. நோபல் பரிசாளர்கள் இதனால் பல கூட்டங்களைப் பகிஷ்கரித்து ஆன்மீகத் தலைவருக்கு தமது ஆதரவை வெளிக்காட்டியுள்ளனர். வியன்னாவில் இதனால் பல ஆர்ப்பாட்டங்களும் மாகாநாட்டு மண்டபத்துக்கு வெளியில் இடம் பெற்றன.

அமெரிக்காவுக்கு முதன் முதலில் 1972 இல் சென்றிருந்த தலாய்லாமா அமெரிக்க மக்களின் சுதந்திர உணர்வைப்பாராட்டிய அதே வேளை நியூயோர்க் நகரம் குப்பையாக இருப்பதாகப் பகிரங்கமாகவே கண்டித்தார். பிச்சைக்காரர்களை கண்டு திகைத்துப்போனார். ''அமெரிக்க அரசியல் முறைமை அதனது சொந்த இலட்சியங்களுக்கு ஏற்ப செயற்படவில்லை'' எனக் கண்டித்தார்.

1987 செப்டெம்பரில் வாஷிங்டனில் வைத்து தலாய்லாமா தனது சமாதானத் திட்டத்தை வெளியிட்டார். திபெத்துக்கான ஐந்து அம்சத் திட்டம் என இது குறிப்பிடப்படுகிறது. திபெத்தைச் சமாதானப் பிரதேசமாக மாற்றுதல், மானிடமும் இயற்கையும் ஒன்றித்து வாழும் நிலை ஏற்பட வேண்டும், மனித உரிமைகள், ஜனநாயகம் மதிக்கப்படல், சுற்றாடல் பாதுகாக்கப்படல், சீனர்களைத் திபெத்தில் கொண்டு வந்து குவித்தலைத் தடுத்தல் என்பவையே இந்தத்திட்டங்களாகும்.

1993 மேயில் அமெரிக்க செனட்டில் செனட்டர் பற்றிக் மொய்னிகன் பின்வருமாறு பேசியுள்ளார். '' இன்று கிளின்ரன் வரலாறு படைத்துள்ளார். சீனர்கள் திபெத்துக்குள் நுழைதல், திபெத்தின் அடையாளத்தையும் கலாசாரத்தையும் அச்சுறுத்துகிற்து என்று ஜனாதிபதி கூறியள்ளார். இது முதன் முதலாக திபெத் மீதான ஆக்கிரமிப்புக் குறித்த அமெரிக்காவின் எதிர்ப்புக் குரலாக அமைகிறது. எங்கள் உறவுகளில் இந்த ஆக்கிரமிப்பு நிச்சயம் முக்கிய பிரச்சினையாகிறது''.





1964 செப்டெம்பரில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் பின்வருமாறு பேசியுள்ளார்: 1959இல் நான் கூறியுள்ளதையே இப்போதும் வலியுறுத்துகிறேன். இந்தியா ஐ.நா.வில் திபெத்தின் சுதந்திரத்துக்காக வாதிட வேண்டும். நடுநிலைமை என்று தட்டிக் கழிக்கக்கூடாது. கலாசாரப் படுகொலையும் சுயநிர்ணய உரிமை மறுப்புமாக இது அமையும். இதில் இவ்விரு விடயத்திலும் எங்கள் ஆதரவு திபெத் பக்கமே இருக்கவேண்டும்''. 1984 மேயில் ஆசிய விஜயம் செய்த பரிசுத்த பாப்பரசர் திபெத்திய மக்கள் தமது சொந்த இடத்துக்குத் திரும்ப வேண்டும். சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் அவர்கள் பெற வேண்டும் என வலியுறுத்திச் சென்றார். ஆனால் பாப்பரசர் கூறியதைச் செயற்படுத்த மேற்குநாடுகள் சீனாவைத் தூண்ட இதுவரை முன்வரவில்லை என்பதே மிக விசனத்துக்குரியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# நிலவு தொலைந்த மணல்வீடு

நாம் நடக்கத்தொடங்கியதிலிருந்து இது வரை நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள வில்லை.

இதயம் தொடர்ந்து வேகமாய் அடித்துக் கொண்டிருந்தது. நாக்குவரண்டு... முகத்தில டித்து கரைந்து வடிகின்ற பனிநீரை உள்ளே இழுத்து விழுங்குவதுமாய் நான்.

தொடர்ந்து நடந்தோம்.
எனக்கு முன்னே சந்திரன். அவன்தான் இன்று எனக்கு வழிகாட்டி.

தொடராய் நாய்கள் குரைப்பதும், அமைதி யைக்குலைக்கும் வாகனங்களின் இரைச்சலும் அடிக்கடி கேட்டது.

என்னைப்பயம் பிராண்டிக்கிழித்தது.
கால்களும் உடலும் பயத்திலும் குளிரிலும் சன்னதமாய் நடுங்க ஏதோ ஒரு அவலத்தில் பறப்பது போல் நடந்தேன்.
அது வெண்பனியை அள்ளிக் குளிராய் கொட்டுகின்ற 'வின்ரர்' காலம். நத்தாருக்கு இன்னமும் நான்கு நாட்கள். குளிர்காற்று பனிக்குறுநல்களை கல்லாய்க்கட்டி முகத்திலடிக்கும் ஓர் இரவு. தோல்களும் மனமும் மரத்து இறுகிப் போன மனிதர்களாய்.... அந்த நடுச்சாமம் - எங்கும் வெண்மையாய் படர்ந்த பனிப்பரப்பினூடே இரண்டு கருங்கோடுகள் சமாந்திரமாய் நீண்டு வளர்ந்த அந்த இரும்புப்பாதை.

ஒரு சம இடைவெளியில் ஏதோ ஒரு குறிப்பில் ஒவ்வோர்கவடு வைத்து நடந்து கொண்டிருக்கிறோம். சிலுப்பர் கட்டைகளை மூடிக்கிடந்த 'ஐஸ்' சப்பாத்துக்குள்ளேயும் புகுந்து விறைக்கத் தொடங்கிவிட்டது.

''நாங்கள் இன்னும் கனதூரம் நடக்கோணுமா? '' எட்டிமிதித்து அவனிடம் மெதுவாய்க்கேட்டேன்.
''இல்லை'' சட்டென்று பதில் சொன்னான்.

'புகையிரத நிலையம் வரும் வரை பேசுவதற்குத்தடை. மனித உருவங்கள், பொலிஸ் தெரிந்தால் பதுங்கிக் கொள்ளவேண்டும். பாலங்களைக்கடக்கும் போது அவதானம் வேண்டும். ஐஸ் சறுக்கும் ஆற்றுக்குள் அம்போதான். பிடிபட்டால் ஒருவரையொருவர் தெரிந்தவர்களாகக் காட்டிக்கொள்ளக்கூடாது'. இப்படிப் பல விடயங்கள் ஏற்கனவே சொல்லித்தான் அவன் எனக்கு வழிகாட்டுகிறான்.

புறப்படும்போதிருந்த மனநிலை இப்போது பயமாய்க் கரைந்தது. அதனால் பலதை நான் மறந்தே போய்விட்டேன்.

குளிரில் விறைத்துச்சாவதைவிட 'என்னைப் பிடித்து இலங்கைக்குத்திருப்பி அனுப்பு' என்று கூவவேண்டும் போலிருந்தது.

ஐரோப்பாவில் ஜேர்மனிக்குள் வந்திறங்கி ஒரு அகதியாய்ப் பதிந்ததிலிருந்து நான் பட்ட அவலங்கள் போதும் போதும் என்றாகிவிட்டது. விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டதும் நச்சரிக்கப்பட்டதும்.
பின்னர் அகதிமுகாம் என்ற ஒரு பயங்கரமான சூழலும்.
நாமோர் சிறைக்கைதிகள் போல, அதுவும் நாமே பல கற்பனைகளை வளர்த்துக்கொண்டு சிறைகளுக்குள் புகுந்து - வசமாக மாட்டிக் கொண்ட கைதிகளாக....

வேற்றுமொழி, ஒட்டாத சூழல், பல அதிகாரிகளினதும் பொலிஸாரினதும் கெடுபிடிகள். எப்போதும் எல்லாவற்றிலும் ஒரு அந்நியனாய்.

நான் மட்டுமா? இல்லை அகதி வாழ்வே ஒரு அன்னியமாதல்தான்.

தூரத்தே கம்ப விளக்குகளின் கதிர் பனிப்புழுதியில் மங்கலாய்த் தெரிகிறது. தண்டவாளக்கரைகளில் தெரிந்த ஓரிரண்டு வீடுகளில் இன்னமும் விளக்குள் அணைக்கப்படவில்லை. முகடுகளில் புகை வருவதும் கூடத்தெரிந்தது.

'ஹொலண்ட்' எல்லையை அண்டி ஜேர்மனிக்குள் ஒரு குடியிருப்புப் பகுதிக்குள் இறக்கப்பட்டபின்.... இன்று இந்த அவலம் நிறைந்த இரவும் இந்தத் தண்டவாள அனுபவமும் களவாக 'ஹொலண்டு'க்குள் வருவதற்காகத் தொடர்கின்ற தொல்லை நிறைந்த இரவு.

'ஹொலண்டில் அகதிகளுக்கு நல்ல சலுகைகளாம்' என்ற நம்பிக்கைகளைச் சுமந்து கொண்டு Boder கரைகளில் நாய்களுடன் அலையும் பொலிஸ் காரர்களின் கண்ணில் படாமல், கட்வுகளிலுள்ள ஆபத்துக்களைக் கடந்து... அந்த மூன்றுமணி நேர பாதயாத்திரை ஒரு அகதியால் கூட சகித்துக்கொள்ள முடியாததுதான்.

இரும்புப்பாதை முடிந்த அந்தப் புகையிரதநிலையம் இன்னும் திறக்கப்படவில்லை. நேரம் அதிகாலை 4.20 லிருந்து அசைந்து கொண்டிருந்தது.

முன்னாலிருந்த பஸ்ராண்டினுள் நாம் ஒதுங்க முடியாதபடி மூட்டை முடிச்சுக்களுடன் தூங்கிக் கொண்டிருந்தனர் சில வெள்ளைப் பிச்சைக்காரர்கள்.

அமைதியான அந்தத் தெருக்களில் ஓரிரண்டு பஸ் வண்டிகள் மட்டும் போய் வந்தன.

சந்திரன் அடிக்கடி நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.
''ஐஞ்சுமணிக்குத்தான் ஸ்ரேசன் திறக்கும். ஐஞ்சரைக்கு முதல் றெயின்'' மெதுவாய்ச் சொன்னான்.
'' இவடத்தில பிடிபட்டால் ஈசியாய் பதிஞ்சிடலாம்'' என் பயத்தை உணர்ந்தவனாய் நம்பிக்கை தந்தான்.
''ரோந்துக்குப் பொலிஸ் வந்தால் கரைச்சல்''
மறையக்கூடிய இடமொன்றை நாடி அவன் பின்னால் நான்.
வெள்ளைப் பொலிஸ் கார் ஒன்று பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.
நாம் நெருக்கமாய் இருந்த தூண் ஒன்றின் மறைவில் ஒளிய முற்பட்டோம்.
அந்தக்குளிரிலும் எனக்கு வேர்க்கத்தொடங்கி விட்டது.
பிச்சைக்காரர்களை தட்டியெழுப்பி நடக்கவிட்டார்கள் பொலிஸ்காரர்கள்.
அவர்கள் நித்திரை வெறியில் திட்டிக்கொண்டும் ஏசிக்கொண்டும் நடந்தார்கள் போலிருந்தது எனக்கு.
இனி அவர்கள் எம்மை நோக்கி வரக்கூடும். நாம் மீண்டும் நெருக்கமாய் மறைவைத்தேடி ஒதுங்கிக்கொண்டோம்.
பிடிபட்டால் ஒரு கள்ளனாய், கைவிலங்கிட்டு, போடர் பொலிசிடம் கொடுத்து, நம்பர் கொழுவி நாலுபக்கமும் படமெடுத்து.
விரல் விரலாய் கைரேகையைப் பதித்து... நிர்வாணமாக்கி, குண்டிக்குள் வைத்து போதைப் பொருள் கடத்துகிறோமா என்று சோதனையிட்டு, தண்டப்பணம் கட்டி, மீண்டும் ஜேர்மனியப் பொலிஸிடம் ஒப்படைக்கப்படுவோம்.
அங்கேயும் ஆயிரம் கேள்விகள். சிலவேளை நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் ,சிறை, குறைந்தது ஏழுநாட்கள். முரட்டுத்தனமான நடவடிக்கைகள்.

பலருக்குக் கிடைத்த அனுபவங்களின் முகமாய் வீங்கி விறைத்தது.
மீண்டும் அந்தக்காடு தொடங்கும் இடத்தில் தனித்து விடப்பட்ட அந்தப் பாழடைந்த அகதி முகாமிற்கா?
சவம்பிடித்தவாழ்க்கை

ஒன்றித்துப்போக முடியாத மனிதர்கள்.
விருப்பமற்ற சாப்பாட்டுக்கு 'கியூ' கூழும் கஞ்சியும் போல சாப்பாடு.
மனம் குலைந்துபோய்க் கிடக்கும் விசர் ஆசுட்பத்திரிதான் அது.
சாமம் சாமமாய் குடிக்காய்ச் சண்டையும் சண்டைக்காய்ச் குடியும்
அடிக்கடி பொலிஸ் வரும்
நிச்சயமாய் அது ஒரு சிறைதான்.

அந்தச்சனிப்பிடித்த வாழ்க்கையை விட்டுத் தானே இங்கு ஓடிவந்தேன். இதுவும் பயங்கரமானது.

நாம் தப்பி விட்டோம்.
'றெயின்' ஏறி கட்டிடக்காடாய் வளர்ந்து கிடக்கிற பிரசித்திபெற்ற துறைமுகநகரான 'றொட்டடம்' வந்தபோது நன்றாக விடிந்துவிட்டது.
நகர வெளிநாட்டுப் பொலிஸைக் காட்டிவிட்டு சந்திரன் மாறிவிட்டான்.
பொலிஸில் பதிந்து அவர்களின் ஆயிரம் கேள்விகளுக்கு அப்பாவியாய் முகம்காட்டி கைரேகையும் படமும் பிடித்து, தூரத்துக் கிராமமொன்றுக்கு அவர்கள் 'றெயின்டிக்கட்' தந்து நான் போய் அகதிகள் முகாமைத் தேடிப்பிடிக்க மாலை நான்கு மணிக்கு மேலாகிவிட்டது.

எனக்குத்தரப்பட்ட அறையில் இன்னும் இரண்டுபேர் தமிழர்களாம். எனக்கு அறைகாட்டியவன் சொன்னான்.
களைப்பும் வெறுப்பும் ஆழ்ந்த நித்திரையில் விடிந்தது.

முகாமில் பல நாட்டவர்கள். இப்போதுதான் எமக்கு யாதும் ஊரே யாவரும் கேளீர். இளைஞர்கள் குடும்பங்கள் ஏழுபேர்வரை தமிழர்கள்.
முகாமில் கட்டுப்பாடுகள், பாதுகாப்பு என்பன கடுமையாய்த்தான் இருக்கிறது. பொலிஸ் வைத்திய உதவி, சமூகசேவை, அகதிகள் நலன் புரிச் சங்கம் எல்லாமே உள்ளே இருந்தன.
கொஞ்சம் வசதி இருப்பதாக ஒப்பீடுகளுடன் திருப்திப்பட்டுக் கொண்டேன்.
இதுவும் நடுக்காட்டுக்குள் உள்ள பழைய அங்கவீனர் இல்லம்தான்.
கிழமைக்கு ஒருக்கால் 'விசா' புதுப்பிக்க வேண்டும். பொலிசுக்குப் போகும் நாட்களெல்லாம் பயந்து கொண்டே போனேன். மூன்று மாதங்கள்தான் முகாம் வாழ்க்கை. பின்னர் வீடு கிடைத்தால் நிம்மதியாய் ஏதாவது செய்யலாம் என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டேன்.
அரசியல் தஞ்சவிசாரணை இன்னமும் நடைபெறவில்லை. எதையும் துணிவாய்க்கேட்கவும் வாதாடவும் தக்க மனநிலை தற்போது என்னிடமிருந்து விலகிநிற்கின்றது.
அகதியாய் அலைந்த அனுபவம் என்னையும் களைத்துப்போகப் பண்ணிவிட்டது
ஏற்கெனவே அரசியல் தஞ்சம் கேட்டுப்பின் இங்கு வந்து பதிந்தவர்கள் பலர் விசாரணைகளின் போது மாட்டுப்படுவதை கதைகதையாய்ச் சொல்கிறார்கள்.
''ஏமாத்துக்கேசுக்கு ஆறுமாதம் தெரியுமா?'' என்கிறான் அறை நண்பன் சிவா.
''அது உனக்கும் பொருந்தும் நீயும் 'போடர்' கடந்தவன்தான்'' என்றேன் நான்.
கேலிகளுக்கும் பகிடிகளுக்கும் கூட பயமே உயிரோட்டமாய்த் தெரிகிறது.
நாம் பயந்து சாகிறோம்.
ஏன் எது வரினும் வரட்டும் என்ற மனவுறுதியை இழந்தோம்?
போதும் இந்த வாழ்வைத் தொலைத்த அகதி வாழ்க்கை.

சார்ள்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் அண்மைக்கால அதிகரிப்புப் பற்றி கண்டனம் எழுப்பப்பட்டு வந்த இவ் வேளை அரசாங்க தரப்பில் நீதி, அரசியல் விவகார அமைச்சின் செயலாளர் தஹாராவிஜயதிலக 'இதுவரை காலம் பாலியல் வல்லுறவுச் செயல்களுக்கு குறைந்த பட்ச தண்டனையாக அளிக்கப்பட்டு வந்த 5 வருட தண்டனையை 7 வருடமாக்கப்படுவதற்கான மசோதா திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என அண்மையில் அறிவித்திருக்கிறார்.

பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ள பாலியல் வல்லுறவுச்சம்பவங்களின் எண்ணிக்கை

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1990 | 369 |
| 1991 | 375 |
| 1992 | 410 |
| 1993 (முதல் 6 மாத கணக்கெடுப்பு) | 162 |




**மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினம்**

# பாலியல் வல்லுறவு: நீதியின் பெயரால் நரகத்தில் இடப்பட்டோம்!

எனினும் 'பாலியல் வல்லுறவு செயல் தொடர்பாக இதுவரை பெண்கள் தரப்பில் எழுப்பப்பட்டு வந்த கோரிக்கைகளில் 'குற்றத்திற்கான தண்டனை அதிகரிப்பு' என்பது இரண்டாம் பட்சமாகவே எழுப்பப்பட்டு வந்திருக்கிறது. உண்மையில் 'பாலியல் வல்லுறவுச்' சம்பவம் ஒன்று நடந்து முடிந்ததன் பின், 'பாலியல் வல்லுறவு' நடந்திருக்கிறது என்று பாதிக்கப்பட்ட பெண் நிரூபிப்பதில் எதிர் நோக்கும் சட்டப் பிரச்சினைகளை மாற்றவேண்டும் என்ற கோரிக்கையே அதிகளவு எடுக்கப்பட்டு வந்திருக்கிறது.இந்நிலையில் மேற்படி 'தண்டனை அதிகரிப்பு' முயற்சி இரண்டாம் பட்ச தேவை என்பதை பலரும் உணர்வர்.

குறிப்பாக பெண் 'பாலியல் வல்லுறவுக்கு' உள்ளாகியிருப்பதாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணத்திற்கு பெண்குறியில் காயங்கள், அல்லது வேறு இடங்களில் ஏற்பட்ட காயத்தையோ சிராய்ப்புகளையோ தனது எதிர்ப்பின் மத்தியில்தான் வல்லுறவு கொள்ளப்பட்டது என்பதற்கான ஆதாரமாக பெண் காட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக சந்தரேகா வழக்கைக் குறிப்பிடலாம்.

## கோமதி

இது பற்றி பெண்ணிலை வாதியான சீதா ரஞ்சினி இப்படி குறிப்பிடுகிறார்.

''பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் ஒரு சிறுமி,அல்லது பெண் தனது வாழ்நாளில் மூன்று முறை கொல்லப்படுகிறாள். சில வேளைகளில் நான்கு முறை கூட...''

முதலாவதாக பாலியல் வல்லுறவு எதிர்ப்பின் மத்தியில் மேற்கொள்ளும் போது பெண்குறிக்குள் ஏற்படுத்தப்படும் வேதனையில் கொல்லப்படுகிறாள். (கடந்த காலங்களில் பாதுகாப்பு படையினரால் இவ்வகையான வல்லுறவு - கொள்ளப்பட்டதுடன் பெண்குறிக்குள் போத்தல் வாய்ப்பகுதியை திணித்தும், எஸ்லோன் பைப்புக்களை திணித்தும் மேற்கொள்ளப்பட்ட வதைகள் எவ்வளவு குரூரமானது என்பதையும் எண்ணிப்பாருங்கள்).

அவள் பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலம் அளிக்கும்போது- அவளால் திருப்பித்திருப்பிச் சொல்லும் போதும் இரண்டாவது தடவை அவள் கொல்லப்படுகிறாள்.

நீதிமன்றத்தில் அவள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டாள் என்பதை நிரூபிக்கும் போது-குறிப்பாக



பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட பெண்களின் சடலங்கள்

எதிர்த்தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது மூன்றாவது தடவையும் கொல்லப்படுகிறாள்.

நான்காவது, அவள் சமூகத்தின் முன்னால் முகம் கொடுக்கும் போது சமூகத்தால் இகழப்படுதலுக்கு உள்ளாகும் போது மீண்டும் மீண்டும் கொல்லப்படுகிறாள். சமூகம், எல்லாவற்றையும் முடித்துவிட்டாள் என்ற பார்வையையே அவளில் செலுத்துகிறது.''

கலாநிதி நந்தசேன ரத்னபால என்பவரால் எழுதப்பட்ட 'குற்றவியற் கோட்பாட்டின் அடிப்படை' எனும் நூலில், பாலியல் வல்லுறவுக்குள்ளான ஒரு பெண்ணின் வாக்கு மூலத்தை அவர் சிறந்த உதாரணமாகத் தருகிறார்.

''அந்த வெறி பிடித்தவன் என்னைக் கெடுத்தான். அந்தக் கணத்தில் நான் பெற்ற வேதனையைவிட அதிகளவு வேதனையை எனது தாயிடம் கூறும் நேரம் அவர்களால் தூற்றுதலுக்குள்ளான போது அடைந்தேன். பொலிஸ் நிலையத்தில் கேட்கப்பட்ட கேள்விகளின்போது இரண்டாவது தடவையும் பாலியல் வல்லுறவுக்குள்ளான வேதனையை அடைந்தேன். உண்மையில் எதிர்த்தரப்பு வக்கீலால் கேட்கப்பட்ட கேள்விகளினால் மீண்டும் மீண்டும் இறந்து மீண்டேன். அவர்கேட்ட 'கேள்வி அந்த வெறிபிடித்தவனை விடுவிப்பதற்கான கேள்வி என்பது எனக்குத் தெரியும்.

ஆனால் அந்தக் கேள்விகளின் தன்மை, பாதிக்கப்பட்டிருக்கும் என்னை ஈவிரக்கமற்ற ரீதியில் நடத்திய விதம் என்னை சித்திரை வதை செய்தன.நான் ஏன் நீதிமன்றம் வந்தேன் என வருந்தினேன்.அவனோ என்னை நடுக்காட்டில் வைத்து வல்லுறவு புரிந்தான். ஆனால் நீதி என்ற பேரில் நான். பலர் முன்னிலையில் மீண்டும் நீதிமன்றத்தில் வல்லுறவு கொள்ளப்பட்டதாகவே கருதுகிறேன். இப்படி நடக்குமென்று முன்னரே தெரிந்திருந்தால் நான் நடந்ததைப்பற்றி அம்மாவுக்கு சொல்லியிருக்கமாட்டேன். நடந்ததை இரகசியமாக வைத்துக்கொண்டு அந்த சோகத்தோடு மரணித்திருப்பேன். அப்படி இறந்திருந்தால் பொலீசாரால்,நீதிமன்றத்தினால் பட்ட வதைகளை விட நான் பட்ட வதை மிகச்சிறிய வதையாகவே இருந்திருக்கும்.''

உண்மையில் 'பாலியல் வல்லுறவு தொடர்பான பிரச்சினை அதிகளவு துன்பம் தரக்கூடிய பக்கம் இதுதான். இன்னும் சொல்லப்போனால், நீதிமன்றத்தில் பாலியல் வல்லுறவுச் செயலை நிரூபிப்பதற்கு கண்ணால் கண்ட சாட்சியமும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் குறிப்பிட்ட நபர் இப்படிப்பட்ட தவறொன்றை புரிந்தார் என்பதற்கு சம்பந்தப்பட்ட பெண்ணின் வாக்கு மூலத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள நீதிமன்றம் தயாராக இல்லை. இதற்காக நீதிமன்றத்தால் கூறப்படும் நியாயம் 'நிரபராதியொருவர் பழிவாங்கப்பட பாலியல் வல்லுறவு பயன்படுத்தப்பட கூடாது' என்பதே. ஆனால் 'பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடக்கும் சந்தர்ப்பங்களில் 95%க்கும் அதிகமான சம்பவங்களுக்கு இவ்வாறான சாட்சிகளை காட்ட சந்தர்ப்பமே இல்லை.இதைச் செய்பவன் என்ன பகிரங்கமாக நாலு பேருக்குத் தெரியவா செய்கிறான்.

நீதிமன்றத்தில் அதிகளவு வதைக்குள்ளாக்கும் கேள்விகளுக்கும் முகம் கொடுத்த பின்னர் மேற்படி சாட்சியங்கள் இல்லை எனக் கூறி அவ்வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட சம்பவங்கள் எத்தனையோ நடந்தேறியுள்ளன. அதுமட்டுமா. சமூகத்தின் முன் கேவலத்துக்கு உள்ளாவதோடு இறுதியில் நீதிக்கு முன் பொய்க்காரி ஆக்கப்பட்டு குற்றவாளியையும் இலகுவாக விடுதலை செய்யும் சட்டமே இன்று நடைமுறையில் உள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் பெண்கள் அமைப்புக்கள் எல்லாம் கூட்டாக சேர்ந்து சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முவை ஆதரித்து பெருமளவு பிரச்சாரங்களை மேற்கொண்டதற்கான காரணம்; நாட்டின் தலைமையை பெண்ணொருவர் கைப்பற்றுவதன் மூலம் தமது முன்னேற்றத்

# 3வது சுதந்திர இலக்கிய விழாப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

**1993ம் ஆண்டின் சிறந்த நாவல்:**
தாகம் – தாமரைச்செல்வி

**1993ம் ஆண்டின் சிறந்த கவிதைத் தொகுதி:**
எரிந்து கொண்டிருக்கும் நேரம் – சேரன்

**1993ம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதி:**
அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் – நந்தினி சேவியர்

**1993ம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்பு இலக்கியம்:**
உக்ரேனிய மஹாகவி தாராஸ் செவ்சென்கோ கவிதைகள் – கேகணேஷ்

## புதிய எழுத்தாளர்களுக்கான போட்டியில்

***சிறுகதை –***
**முதலாமிடம்** – மானிட நசிவுகள் – செல்வ மதீந்திரன்
**இரண்டாமிடம்** – தாகமாயிருக்கிறேன் – மட்டுநகர் முத்தழகு
**மூன்றாமிடம்** – உடைத்துப்போட்ட தெருவிளக்கு – இயுவேந்திரா

***கவிதை–***
**முதலாமிடம்:** "ஆணலை" எம்ஐஎம்ஜாபிர்
**இரண்டாமிடம்:** "பதுங்கு குழியில்" எம்ஏஅலால்தீன் (றியாஸ்)
**மூன்றாமிடம்:** "என்னுடன் இரவைக் கழித்த நிலவு" – முகமட் அபார்

சுதந்திர இலக்கிய விழாப் போட்டியில் சரிநிகர் 54வது இதழில் வெளியாகிய *'ஆணலை'* என்ற எம்.ஐ.எம்.ஜாபிர் அவர்களின் கவிதை முதற்பரிசையும், 50வது இதழில் வெளியாகிய *'என்னுடன் இரவைக் கழித்த நிலவு'* என்ற முகமட் அபார் அவர்களின் கவிதை மூன்றாவது பரிசையும், இதழ் 40இல் வெளியாகிய *'தாகமாயிருக்கிறேன்'* என்ற மட்டுநகர் முத்தழகு அவர்களின் சிறுகதை இரண்டாம் பரிசையும், இதழ் 52இல் வெளியாகிய *'உடைத்துப்போட்ட தெருவிளக்கு'* என்ற யுவேந்திரா அவர்களின் சிறுகதை மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்!

## நாய்க்குட்டியுடன்... அவள்



இறக்கை விரித்த இரவுகள்.
இயந்திரங்களான மனசு.
ஆட்டுத் தோலுக்குள்
ஆழமாய்ப் புகுந்த உடல்.
நீலப்படங்களைப் பார்த்து
இருப்புக் கொள்ளாத விசாரம்.
இவ்வளவும் குளிர்காலத்து
நாளொன்றில்...

நானும் ஆபிரிக்க நண்பனும்
நாய்க்குட்டியை நக்கிக் கொண்டு போகும்
வெள்ளைப் பெண்மணிக்கு பின்னால்
நடக்கிறோம்.
அதுவும் ஆங்கிலம் பேசுகிறது.
ஆபிரிக்க நண்பன்
நாய்க் குட்டியை முத்தமிட நெருங்கினான்.
நாய்க்குட்டியின் "வள்வள்"
"தொடாதே தொடாதே..."

அவள் தன்முகத்தையே கொடுத்தாள்
நண்பனும் முத்தம் பதித்தான்.
நான் நினைத்தேன்
அவள் விபச்சாரியில்லை என்று.

–கவிதாஞ்சன்–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1993இல் வெளியான சிறுகதை தொகுப்புக்கள் பற்றி...

## ரஞ்சகுமார்

**விபவி மாற்றுக் கலாசார நிறுவனம் நடாத்திய மூன்றாவது சுதந்திர இலக்கிய விழாவில் விருது வழங்கப்பட்ட 1993 இற்கான சிறுகதை தொகுப்புகள் பற்றி நடுவர் குழுவில் ஒருவரான ரஞ்சகுமார் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பினைத் தருகிறோம்:**

கவிதை, சிறுகதை என்பன பற்றி இன்று ஆராயப்படுகின்றது. அவையிரண்டும் இலங்கையில் மிக நன்றாக வளர்ச்சியடைந்துள்ள விடயங்களாகும். 21ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்துக்கு இலங்கை எழுத்துக்கள் புதிய வலு கொடுக்க வல்லன என்று இப்போது பலராலும் கருதப்படுகின்றது. அந்த எதிர்பார்ப்பு கவிதை சிறுகதை என்பவற்றைப் பொறுத்தவரையில் நியாயமானதே எனினும், சில கேள்விக்குறிகளையும் நம் முன்னே வைக்கிறது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதே. 93ம் ஆண்டில் இலங்கை எழுத்தாளர்களின் 9 சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

**குருட்டு வெளிச்சம்**
**- திக்குவல்லை கமால்**
**சிறகொடிந்த பறவைகள்**
**- மண்டூர் அசோகா**
**புண்ணியத்தின் பாதுகாவலர்கள்**
**- மொயின் சமீன்**
**அவா**
**- எஸ். பொன்னுத்துரை**
**கடவுளின் பூக்கள்**
**- பத்மா சோமகாந்தன்**
**மேலோர் வட்டம்**
**- செ. யோகநாதன்**
**யாழ்ப்பாணத்து இராத்திரிகள்**
**- செங்கை ஆழியான்**
**வெட்டுமுகம்**
**- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**
**அயல் கிராமத்தைச்சேர்ந்தவர்கள்**
**- நந்தினி சேவியர்**




செங்கை ஆழியான் நிறைய எழுதுபவர். மிகப் புகழ் பெற்றவர். அவருக்கு நிறைய வாசகர்கள் உள்ளார்கள். அவரது கதைகள் இலங்கையிலும் இந்தியாவிலும் எந்நேரமும் பிரசுரமாகிக் கொண்டேயிருக்கும். ஆனந்த விகடனில் எழுதுவார். இங்கே மல்லிகையிலும் எழுதுவார். அத்துடன் ஒரே நேரத்தில் ஒரேகதை வெவ்வேறு சஞ்சிகைகளில் வெளியாகும். அல்லது ஒன்றிரண்டு மாதங்கழித்து அவை மீள் பிசுரமசமாகும். அவர் சிறுகதை தொகுப்புக்களை தொகுக்கும் விதமே அலாதி. எல்லாத் தொகுப்புக்களிலும் தனது சில நல்ல கதைகளைப் புகுத்தி விடுவார். இந்த யாழ்ப்பாணத்து இராத்திரிகளில் வருகின்ற பலகதைகளை நான் வெவ்வேறு புத்தகங்களில் வாசித்திருக்கிறேன். இவையெல்லாம் பெயருக்கும், அங்கீகாரத்துக்கும் பறந்து கொண்டிருப்பவர்களுக்கேயான கீழ்த்தரமான தந்திரங்கள்.

இவர் ஒரு வல்லுநர். கதை தயாரிப்பதில். உதாரணமாக, இவரது கதை எழுதும் முறை அல்லது தொழில் நுட்பம் இலகுவானது.

யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் ஒரு பிரயாணத்தை பற்றி இவர் எழுதுவாராயின் யாழ்ப்பாணத்துக்கு செல்லும் வழி எவ்வளவு சிரமமானது என பத்திரிகைகளில் வருகிற செய்திகள் எல்லாம் அவரது கதைகளில் வந்து விடும்.

காட்டுப்பாதையாயின் யானை வரும். அதுவும் அலியன் யானையாகத் தான் வரும். எந்த நேரமும் ஷெல்கள் சுடும். குண்டுகள் விழும். எப்படியாவது வாசகரை இந்தச் சாகசங்களினால் குத்திக் குத்தி உசாராக வைத்திருப்பது அவருக்குக் கைவந்த கலை. ஆனால் ஒருதேர்ந்த வாசகன் இவரிடம் ஏமாற மாட்டான். வயலின் ஒருபுறத்தில் வரட்சியினால் புழுதி பறக்க, மறுபுறத்தில் சேற்றில் பன்றிக் குளம்பின் அடையாளம் தெரிகிறாதாக இவர் கதை விடுவார்.

எதிர் காலத்தில் இத்தகைய தவறுகளிலும் கொஞ்சம் கவனம் செலுத்துமாறு நாம் இவருக்கு ஆலோசனை தருவது நல்லது. பேச்சுவழக்கு மொழியையும் இவர் பயிலுதல் வேண்டும். இலக்கணத். தமிழையும் பழகு தமிழையும் கலந்து தருதல் இவரது பழக்கம்.

பழகு தமிழில் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு சாதியினருக்கும் கூட வித்தியாசங்கள் உண்டு. அதையெல்லாம் நுண்மையான படைப்பாளியே அறிவான். இவரைப் போல கதை தயாரிப்பவர்கள் அறியமாட்டார்கள். உதாரணமாக ஒரு விவசாயி கஷ்டம் என்று சொல்லமாட்டான். 'கயிட்டம்' என்றே சொல்லுவான். ஒரு வேட்டைக்காரன் பாரடா தமபி ,என்று சொல்லமாட்டான். 'பாறறாம்பி' என்றே சொல்லுவான். நந்தினிசேவியரின் வேட்டை என்னும் கதையில் இந்த வட்டார வழக்கு, வேட்டையில் பரபரப்பு நிலை என்பன அச்சொட்டாக வந்து விடுதலை நாம் காண்கிறோம்.

அடுத்ததாக, மற்றொரு பிரபல எழுத்தாளர் செ.. யோகநாதனைப் பற்றியும் கூற வேண்டிய அவசியம் உள்ளது. தற்காலத் தமிழிலக்கியத்தில் புகலிட இலக்கியம் என்னும் புதிய பிரிவு புதிய வீறுடன் தொழிற்பட்டுவருவதை நாம் அறிவோம். நாட்டை விட்டு துரத்தப்பட்டு, அல்லது நாட்டை விட்டு வெளியேறி அயல் நாடுகளில் புகலிடம் பெற்றவர்களில், தாம் புலம் பெயர்ந்தமையினாலேயே எழுத ஆரம்பித்தவர்கள் பலர். அவர்களது எழுத்துக்கள் சத்தியமானவை. பாசாங்கற்றவை.

ஆனால், நமது எழுத்தாளர் செ. யோகநாதன் ஒரு இலட்சியவாதி. அவர் எழுதுவதற்காகவே புலம் பெயர்ந்தவர். அந்த வாயபபை மிகவும் காரியார்த்தமாகக் கையாள்கிறார். அடிக்கடி தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் தாம் தம் மனைவி மக்களைப் பிரிந்து இருப்பதாகவும் இலக்கிய வேள்வி நடாத்தி வருவதாகவும் அறிக்கைகள் விடுவார். பேட்டி கொடுப்பார். அவரது தொகுப்பின் பெயர் மேலோர் வட்டம். அந்தத் தொகுப்பை முழுமையாக என்னால் வாசிக்க முடியவில்லை. இவ்வாறு சொல்வதற்காக நான் வெட்கப்படவில்லை. எனது கடமையில் தவறியதாக நான் கருதவுமில்லை.

இவர்களையும் விஞ்சிய ஒரு எழுத்துலகப்பிரமுகர் நம்மிடையே உள்ளார். அவரது பெயர் எஸ். பொன்னுத்துரை. சொற்களைக் கொண்டு அலங்கார அடுக்குகளை அமைத்து அதற்குள்ளேயே தனது தனிமனித காழ்ப்புக்களையும், பாலியல் வக்கிரங்களையும் மறைத்துக் கொள்வதில் வல்லவர். இவரது அழகு தமிழ்ச் சொற்களையும், தத்துவ விசாரங்கள் என இவர் கருதும் அர்த்தமற்ற சொற்கூட்டங்களையும் கழித்துவிட்டால் எஞ்சுவது மிகுந்த ஆபாசமான ஒரு கதை. ஏறத்தாழ ஒரு நீலப்படத்துக்கு சமமானது. உதாரணமாக இவரது சுவடு என்னும் கதையை நாம் பார்க்கலாம். காலையில் ஒரு கொலை, பிற்பகலில் இன்னொரு கொலை. கொலை செய்த கத்தியை கொலையாளி தனது உடையில் செருகிக் கொண்ட பின்னர் உடனேயே தனது ஆசை நாயகிக்யைக் கூடுகிறார். இத்தனைக்கும் கொலையாளி ஒரு துறவி.

மதத்தின் பெயராலும் மொழியின் பெயராலும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் இனறைய காலகட்டத்தில் ஒருவரது மதத்துக்கும், மொழிக்கும் மற்றையவர் மதிப்பளிப்பதும், சகிப்புத்தன்மையை காட்ட வேண்டியதுமான நிலையில் எஸ்.பொ. போன்ற எழுத்து நடை கை வந்த வல்லாமர்களின் அசுரத்தனமான கூக்குரல்கள் தூக்கிவீசப்படவேண்டியவை என்பதை சொல்லவேண்டியது எனது கடமை என எண்ணுகிறேன்.

ஆகவே,நண்பர்களே மூன்று முக்கிய பிரமுகர்களை நாம் இப்போது சமாளித்து விட்டோம். இனி எஞ்சுபவற்றை ஆராயலாம்.

சிறுபத்திரிகைகளிலே கூட இரு வகை உண்டு. விஷயங்களை சொல்லவேண்டும் என்பதற்காக கொண்டு வரப்படுபவை ஒரு வகை. தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதால் விஷயங்களை எப்படியாவது தயாரித்துக் கொள்பவை இரண்டாவது வகை. இந்த இரண்டாவது வகை சிறு சஞ்சிகை ஒன்றினால் பெரிதும் வளர்க்கப்பட்டவர் திக்குவல்லை கமால். இவரது கதைகள் சராசரியாக வாசிக்கத் தகுந்தவை என்பது எனுது நிலைப்பாடு.

தன்னுடைய பிரதேசத்துமக்களின் பேச்சுவழக்கு மொழியை வெகு நேர்த்தியாக கையாள்பவர் என்னும் வகையில் திக்குவல்லை கமால் பாராட்டுக்குரியவர். ஏழை எளிய மக்களின் வாழ்க்கையையே பெரிதும் எழுதி வருகிறார். எனினும் கலைத்துவ அமைதி குன்றியவையாகவே இவரது மிகப் பெரும்பாலான படைப்புக்கள் காணப்படுகின்றன.

மண்டூர் அசோகா, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் என்பவர்களுடைய தொகுதிகளும் வெளிவந்திருக்கின்றன. இலங்கையில் தமிழ் வார மலர்கள் இப்போது பெருகி வருகின்றன. அவற்றுக்கான வாசகர் கூட்டமும் விஷயதானம் செய்வோரும் பெருகி வருகின்றனர். அந்த வார மஞ்சரிக் கதைகள் என்னும் வகையில் இவர்களது கதைகள் அடங்குகின்றன. இவற்றையும் மிஞ்சி கலையாக்கலில் ஈடுபட இவர்கள் விரும்பினால் போதிய நிதானத்தையும், பயிற்சியையும் உள்மனத்தியானத்தையும் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது என்பது எனது அபிப்பிராயம்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகிறது. எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் பற்றியெல்லாம் இப்போது பரபரப்பாக பேசப்படுகிறது. பத்மா சோமகாந்தன் 'கடவுளின் பூக்கள்' போன்ற கதைகளை எழுதலாம். அதற்கு யாரும் தடை போட முடியாது. ஆனால் வாசகனுக்கும் ஒரு சுதந்திரம் வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதாவது இவ்வாறான அறுவைக் கதைகளை வாசித்து நேரத்தை வீணடிக்காதிருக்கும் சுதந்திரம் நமக்கும் வேண்டும்.

புண்ணியத்தின் பாதுகாவலர்கள் எனும் தொகுதியை வெளியிட்டிருக்கிற மொயின் சமீன் எனது கவனத்தை கவர்ந்த எழுத்தாளராவார். முஸ்லிகளின் பேச்சு வழக்கை மிக இலாவகமாகக் கையாண்டு நல்ல கதைகள் சிலவற்றை இந்தத் தொகுதியின் மூலம் அவர் நமக்கு படிக்கக் கொடுத்திருக்கிறார். ஆசிரியர் பாராட்டுக்குரிய ஒரு எழுத்தாளராவார் என்பது எனது எண்ணம்.

இனி எஞ்சிய அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனும் தொகுதியைப் பரிசுக்குரிய தொகுதியாக நாங்கள் அறிவித்திருக்கிறோம்.

நந்தினி சேவியர் 60களின் பிற்பகுதியில் இருந்து எழுதி வருகிறார். அவரது முதலாவது தொகுப்பு இது. எட்டு கதைகள் அடங்கியுள்ளன. இந்தக்கதைகள் எனக்குப் பிடித்தமைக்கான காரணம் அவற்றில் தொனிக்கின்ற உண்மை. ஆசிரியர் நமக்குக்காட்டுகின்ற மக்கள், அம்மக்கள் வாழ்கின்ற சிரமந்தரும் வாழ்க்கை, அந்த வாழ்க்கையை அவர்கள் எதிர்கொள்ளும் முறைமை. அவர்களது போர்க்குணம் யாவுமே உண்மைக்குப் புறம்பானவையல்ல. பாசாங்குத்தனமானவையல்ல. அதற்கான காரணம் நந்தினி சேவியர் தனது படைப்பாக்கத்தில் கூடிய கவனம் செலுத்துவதேயாகும். அத்துடன் அவர் நமக்கு அறிமுகப்படுத்திய பாத்திரங்கள் அவருக்கு அன்னியமானவர்கள் அல்ல. ஒரு உயர் பதவி வகிக்கும் அரசாங்க அதிகாரி விவசாயியையோ, வேட்டைக்காரனையோ, இடதுசாரி எண்ணம் கொண்ட வேலையற்ற இளைஞனையோ உண்மையாக நம் முன்னே படைத்துக்காட்டுதல் மிகக் கடினமானது. அவ்வாறு படைக்க வேண்டுமாயின் ஒன்றில் அந்தப் பாத்திரங்களாக அவர் இருந்திருக்க வேண்டும் அல்லது பெரும் சித்தி கைவரப் பெற்ற மேதாவியாக வேண்டும். நந்தினி சேவியர் மேதாவியல்ல. அவர் மிகச் சாதாரண மனிதன். தனது கதை மாந்தரைப் போலவே அவரும் உண்மையான ஒரு மனிதன். அந்த மாந்தரை அவர் படைத்துள்ளார். இது ஒன்றே அவர் பரிசு பெறத் தகுதியுள்ளவராக்கியது.

இந்தக் கதைகள் பற்றிய விமர்சனங்கள், குறைகள் சொல்லவும் உண்டு. அதற்கு இது சமயமுமல்ல. நேரமும் குறைவு. ஆசிரியருக்கு எமது வாழத்துக்களும் பாராட்டுக்ளும்.

நல்லது நண்பர்களே நான் விடை பெற விரும்புகிறேன். நீங்கள் கேட்கலாம் 21ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் பற்றி ஏதேதோ கூறினிரே என்று.

ஆம்.

21ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியத்துக்கு வளமூட்ட வல்லவர் நம்மிடையே உள்ளார்கள்தான். ஆனால் அவர்கள் இவர்களல்ல. அவர்கள் மிக இளைஞர்கள். சிறுவர்கள் என்று கூடச் சொல்லலாம். அவர்களது எழுத்துக்கள் அரிதாகவே, இந்தப் பரந்த உலகின் எங்கோ ஒரு மூலையில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எந்த அகதி முகாமிலிருந்தோ, எந்தச் சிறைக்கூடத்திலிருந்தோ அவர்கள் சாதனை படைக்கும் கதைகளை, கவிதைகளை எழுதிக் கொண்டிக்கின்றார்கள். அவை சரியாக சேகரிக்கப்படவேண்டும். அந்த இளைஞர்கள் சரியாக அடையாளம் காணப்படவேண்டும். காணப்படுவார்கள். ஏனெனில் அது வரலாற்றுத்தேவை. நம் முன்னே உள்ள பணி அதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உனக்கல்லடி உபதேசம்!

முன்னைய அரசாங்கத்தின் கீழ இலங்கை ஒலிபரப்புக் கூட்டத் தாபனத்தினுடாக ஈ.பி.டி.பி இயக்கம் 'மக்கள் குரல்' என்ற நிகழ்ச்சி ஒன்றை நடத்தி வந்தது. செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 5.30 மணிமுதல் 6.00 மணி வரை ஒலிபரப்பி வந்த இந்நிகழ்ச்சி,இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வழமையான ஒழுங்கு முறையின் கீழ் ஈ.பி.டி.பிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை எனினும்,அப்போதைய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்காவினால் பிரத்தியேகமாக இந்நிகழ்ச்சி ஈ.பி.டி.பிக்கு வழங்கப்பட்டிருந்தது என்ற குற்றச் சாட்டும் பரவலாக அப்போது இருந்து வந்தது.

இந்நிகழ்ச்சி புலிகளுக்கு எதிரான நிகழ்ச்சியாக இருந்த அதே நேரத்தில், பிறேமதாச அரசுக்கு சார்பாகவும்,அதற்கெதிரான ஜனநாயக, முற்போக்கு சக்திகளுக்கு எதிராகவும் இருந்து வந்ததாக. ஜனநாயக வாதிகள் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகி இருந்தது.

இப்போது புதிய அரசாங்கத்தின் கீழ் ஈ.பி.ஆர்.எல்.எப்க்கு வழங்கப்பட்டுள்ளதாகவும்,இதனை ஈ.பி.ஆர்.எப்பைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவகுமார்,பாஸ்கரன் ஆகியோர் 'இதயசங்கமம்' என்ற பெயரில் நடாத்தி வருவதாகவும் தெரிய வருகிறது.

இந்நிகழ்ச்சி தொடர்பான ஈ.பி.டி.பியின் ஜனநாயகம் குறித்து அதிருப்தி தெரிவித்து வந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இப்போது அதே மாதிரியான நிகழ்ச்சியை நடத்த முன்வந்தது எப்படி?

உபதேசம் உனக்கல்லடி ஊருக்கடி பெண்ணே என்ற கதையாகவல்லவா இருக்கிறது இது?

## இது அறப்போர்..

தான் அன்று எதிர்க்கட்சியில் இருந்தது என்பது மட்டுமன்றி, இராணுவநடவடிக்கைகட்கு ஒத்துழைப்பும் வழங்கியது என்பதை நாம் மறக்கவில்லை. நிஷாந்த அவர்களே, வடகிழக்கில் நடைபெறுவது வெறும் நாட்டைப்பிடிப்பதற்கான போர் மட்டுமல்ல, எமது இருப்பை எமது சுயத்தை, பண்பாட்டை, கலாசாரத்தை எல்லாம் மீட்பதற்கான போர்! வடகிழக்கை கூட இணைக்கமுடியாது என்று கூறிவிட்ட இந்த அரசில் நம்புவதற்கு என்ன இருக்கிறது? இதை நம்பி மீளவும் தமிழர்களை அழியச்சொல்கின்றீர்களா? எதிர் கால சந்ததியும் நிம்மதியாக வாழ வேண்டாமா?

நிஷாந்த அவர்களே, கிருஷ்ணபகவான் கீதையில் கூறுவது போல் "இது அறப்போர், இது அறத்தைக் காப்பதற்கான போர். இதில் உறவினர் என்றோ, நண்பர்கள் என்றோ பார்க்கமுடியாது. அறத்தை நிலை நாட்டும் பொருட்டு எதிரிகளை அழித்துத்தான் ஆகவேண்டும். எதிரியாராக இருந்தாலும்". ஏனெனில் இந்நாட்டில் இனஐக்கியம், சமாதானம் கட்டியெழுப்பப்படுவது அவசியம். அதற்கு அரசு இணங்காவிட்டால் போராடித்தான் ஆகவேண்டும். ஏனென்றால் நீங்கள் முன்பொருதடவை சரிநிகரில் குறிப்பிட்டது போல "ஐக்கியத்திற்கான முதற்படி பிரிந்து போதலே"!

**எதார்த்தன்**
**மொரட்டுவை.**

## பனை...

நாட்டில் இருந்து குடாநாட்டுக்குள் இறக்குமதியாகியிருக்கும் தெய்வங்களும் அவற்றினுடைய சமஸ்கிருதமயப்பட்ட வழிபாட்டு முறையும், யாழ் மக்களின் மனதில் வேரூன்றிப் போயிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் மாவீரரை மதித்துப்போற்றும் மரபு எந்தளவுக்கு வேரோடி வருகின்றது என்பது ஆராயப்பட வேண்டிய விசயம்.

யாழ் தமிழர், சாய்பாபாவையும், சங்கராச்சாரியாரையும் மற்றும் பல சமஸ்கிருத கலாசாரக் கடவுளரையும் பக்திப் பரவசமாகி, பணம் இறைத்து வழிபடும் இந்தக் காலகட்டத்தில் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லமானது தமிழ் மரபினை மீட்டிட ஒரு பெரு முயற்சி எனக் கூறினால் மிகையாகாது.

அடுத்து ஜெயாமாஸ்டரும் மாறனும் கிட்டு சிறுவர் பூங்காவிற்கு அழைத்துச் சென்றனர்.விசாலமாக அமைக்கப்பட்டுள்ளது. மீன் தொட்டிகள் அமைந்த செயற்கைக் குகை, உயர் பாலம் எல்லாம் உண்டு. புலோப்பளைச் சமரில் தகர்க்கப்பட்ட இலங்கை இராணுவத்தின் ஒரு பெரிய தாங்கி ஒன்று(ரி52) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ரியூசனே கதி என்று திரியும் யாழ் சிறார் கிட்டு பூங்காவில் நான் போன நேரத்தில் அதிகமாகக் காணப்படவில்லை. அடுத்த நாள் தமிழ்ச் செல்வனுடன் சந்திப்பு.

இளைஞன் என்றாலும் ஆள் திறமைசாலி.கொழும்பு அரசியல் நிலையைப்பற்றித்தான் கூடுலாக பேச வேண்டியதாயிற்று. புலி அரசியல் துறை என் போன்ற பத்திரிகையாளர்களுக்கு உடனுக்குடன் தனது நிலைப்பாட்டினைத் தெரிவு படுத்தி விஷயங்களை அனுப்பி வைத்தால் பல குழப்பங்கள் தவிர்க்கப் படலாம் எனக் கூறினேன். புலிகள் தரப்பு நியாயம் யாழ் மக்களுக்கு மட்டுமே தெரிகிறதே ஒழிய தெற்கில் இருப்போருக்கும், மேற்குநாடுகளுக்கும் பெரிதாகத் தெரிய வராததால் சந்திரிக்கா அரசின் நிலைப்பாடே நியாயமானது என்னும் எண்ணம் தோன்றக்கூடிய நிலை உள்ளது எனவும் கூறினேன். இந்நிலையில் யாழ்ப்பாணமே என்ன நிறம் என்று பல வருடங்களாக அறியாமல் இருக்கும் என் போன்றவர்களுடைய கருத்துக்களில் சிக்கல்கள் இருப்பது பவிர்க்கப் பட முடியாததே என்பதையும் சுட்டிக்காட்டினேன்.


"என்னை பாதாளச் சிறையில் போட்டு அடைத்து விடுவீர்கள் என்று நினைத்து வந்தேன். சிரித்துப் பேசுகிறீர்கள்" என்றேன் தமிழ்ச் செல்வனிடம்.அதற்கும் சிரிப்பு. இது முடிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் B.B.தேமிழோசைப் பொறுப்பாளரையும் என்னையும் பேசும்படி ஒரு கூட்டம் வளாகத்தில் ஒழுங்கு பண்ணியிருந்தது. பேசினேன். கேட்டிருந்த ஒரு பழைய நண்பர் சொன்னார் சந்திரிக்காவின் அணுகு முறையைப் பற்றி-அது மனிதாபிமான முகத்துடன் வரும் இனவாதம்-என்று.

## தமிழ்க் கட்சிகள்..

புலிகள் இப்போதாவது ஏனைய அமைப்புக்களுடன் பேச முனவருவது பாராட்டக்கூடிய விடயம்தான் எனினும், பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக நல்லெண்ண அடிப்படையில் சிலவற்றைப் புலிகள் செய்ய வேண்டியவர்களாக உள்ளார்கள்.

குறிப்பாக புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மாற்று இயக்க உறுப்பினர்களை விடுதலை செய்தல் வேண்டும். அதேபோல் மாற்றுக்கருத்துக்களைக் கொண்டவர்கள் என்பதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும். விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மாற்று அமைப்புக்கள் பணிபுரி அனுமதிக்க வேண்டும்.நல்லெண்ண அடிப்படையில் புலிகள் இவற்றை நிறைவேற்றினாலேயே பரஸ்பர நல்லெண்ணமும்,நம்பிக்கையும் உருவாக வாய்ப்பேற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் அரசகரும...


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY
No. 842/8 — TUESDAY, OCTOBER 25, 1994
(Published by Authority)
PART I : SECTION (I) — GENERAL
Government Notifications
SRI LANKA FOREIGN SERVICE MINUTE
THE Minute on the Overseas Service of Ceylon published in June, 1959 is hereby revised and published under the authority of the Cabinet of Ministers as the Minute of the Sri Lanka Foreign Service.
R. C. A. VANDERGERT,
Secretary,
Ministry of Foreign Affairs.
CHAPTER I
MINUTE OF THE SRI LANKA FOREIGN SERVICE

யாக தமிழ் அல்லது ஆங்கிலம் எனும் தேர்வுரிமை வழங்கப்படின், தமிழ்மொழி அல்லது ஆங்கில மொழிமூலம் சித்தியடைபவர்கட்கும் இரண்டாவது மொழியாக சிங்களம் அல்லது ஆங்கிலம் எனும் தேர்வுரிமை வழங்கப்படுவது தானே நியாயம்.

சந்திரிகா அரசு மட்டுமல்ல எந்த அரசு பதவிக்கு வந்தாலும் தமிழ் பேசும் மக்களோ தமிழ் மொழியோ இந்நாட்டில் சம அந்தஸ்துப் பெறமுடியாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இலங்கை வெளிநாட்டுச் சேவை வெளிநாட்டமைச்சின் கீழ்வரும் ஒரு சேவை, லக்ஸ்மன் கதிர்காமர் தான் வெளிநாட்டமைச்சர், இவ் அரச அறிவித்தல் அவர் அமைச்சராக பதவியேற்றபின் வெளியிடப் பட்டது எனும் உண்மைகள் குறிப்பிடத்தக்கவை.

## அரசின்.........

**டுள்ளார்கள். அனுராதபுர படுகொலைகள் முதல் பள்ளிவாசல் படுகொலைகள் வரை, ஜனநாயகவாதிகள் முதல் மாற்று அரசியல் குழுக்களை அழித்து அல்லது நாட்டைவிட்டு விரட்டியது வரை இவற்றுக்கு நூற்றுக்கணக்கில் உதாரணங்கள் உண்டு.**

இவை எல்லாவற்றுக்கும் புலிகள் மக்களுக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆனால், புலிகளின் ஒரு பக்கம்தான் இவை.

இன்னொரு பக்கம், தமிழ்மக்களின் அரசியல் உரிமைக்காக தென்னிலங்கையிலும் சரி, அரசுதரப்பிலும் சரி ஏதாவது செய்துதான் ஆக வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியதும் அவர்களேதான்.

1987ல் புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் சமரசம் செய்துகொண்டிருந்தால்,இன்று இந்திய - இலங்கை அரசுகளதும், அரச அதிகாரிகளதும் நமட்டுச் சிரிப்புக்கு கைகட்டி வாய்பொத்தி நிற்கும் நிலையே தமிழ்மக்கள் எதிர் நோக்கவேண்டி இருந்திருக்கும்.

புலிகளை இன்று வரை தக்கவைத்திருப்பது, சரியான காலத்தில் அவர்கள் எடுத்த சரியான அரசியல் முடிவுகளே. பல தவறுகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்கும் நிலை அவர்களுக்கும் (உ+ம் பிரேமதாச கால பேச்சு வார்த்தை) ஏற்பட்டு அவர்கள் தடுமாறினாலும்கூட பழைய தடத்துக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

அது அவர்களைக் காப்பாற்றியது.

இன்னமும் திரும்பி வராத பலர், தம்மையும் இழந்து, தமிழ் மக்களையும் இழந்து தனியன்களாய்ப் போனார்கள்!

இன்றைய அரசாங்கத்தின் மீது கண்மூடித்தனமாக நம்பிக்கை வைக்க தமிழ் மக்களே தயாரக இல்லாத போது, புலிகள் வைப்பார்களா என்பது கேள்விக் குறி.

அப்படி வைக்க வேண்டுமென எதிர் பார்ப்பது நேர்மையானதல்ல; கபடத்தனமானது.

வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே கண் மூடித்தனமாக நம்புவார்கள்!

தேவை வெளிப்படையான பேச்சு; செய்யப்படவேண்டியவை பற்றிய பேச்சு.ஏமாற்றுவதற்கான பேச்சு அல்ல.

சந்திரிக்கா அரசு இதற்கு தயாராக இல்லை என்றால், மக்களைப்பார்த்து அவர் பயப்படவேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை.

**"அரசின் மனதில் இருப்பது மூன்றாவது ஈழப்போரா சமாதானமா என்பது யாருக்குமே தெரியவில்லை.**

**புலிகள் மட்டும் இரண்டுக்கும் தயாரா இருக்கக் கூடாது என்று எதிர் பார்ப்பது எப்படி?"**

இப்போது நடந்துகொண்டிருப்பது புலிகளுக்கும் அரசக்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்றால்,பேசும் இரு தரப்பாருக்கும் இடையில் ஆகக் குறைந்த பட்ச அளவிலான மதிப்பை யாவது இருதரப்பாரும் வெளிப்படுத்த வேண்டும்.

"சந்திரிக்காவின் கைகள் கறைபடாத கைகள்' என்றும், "சந்திரிக்காவை கொல்லவேண்டிய தேவை எமக்கு இல்லை" என்றும் புலிகள் தம் தரப்பிற்கு ஜனாதிபதி மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.ஆனால் அரசு தரப்பிலிருந்து இன்று வரை புலிகள் தரப்பினையிட்டு எந்த குறிப்பிடத் தக்கதான அபிப்பிராயமும் வெளியிடப்படவில்லை. யாழ் சென்று திரும்பிய சமாதானக்குழுவினர் முதல் பத்திரிகையாளர் வரை எல்லோரும் புலிகள் சமாதானத்திற்கு தயாராக இருக்கிறார்கள் என்றும் சமஷ்டியை பரிசீலிக்க அவர்கள் தயார் என்றும் தெரிவித்த பின்னும் கூட இவர்கள் இவ்வாறு இறங்கி வந்தது வரவேற்கத் தக்கது, மக்களது எழுச்சியைக் கண்டு அவர்கள் அஞ்சுவது நீண்டகால நோக்கில் நல்லது' போன்ற கபடத்தனமான அறிக்கைகள் அரசு தரப்பிலிருந்து வெளிப்படுகின்றனவே ஒழிய, மனப்பூர்வமாக எதையுமே வெளியிடவில்லை!

எவ்வாறாயினும், மக்களது எழுச்சியைக்கண்டு பயப்படுவது புலிகள் என்று சொல்லும் அதே ஜனாதிபதி அதேமாதிரியானதொரு அச்சத்துக்கு தானும் உள்ளாகும் துரதிர்ஷ்ட நிலை ஏற்படாதிருக்க வேண்டுமானால்,கயிறுழுப்புக்கு பதில் பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

**புலிகள் ஒரு ஸ்தாபனம் என்றவகையில் தமிழ்மக்களின் கடந்தகால போராட்ட வரலாற்றில் பாரிய எதிர்ப் போக்கு நடவடிக்கையில் ஈடுபட்**

## சபுகஸ்கந்தை......

ரைக்கூறலாம்".

"இந்த அரசாங்கம் மேற்படி குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பார்கள் என நம்பிக்கையில்லை.பொதுஜன முன்னணியும் அரசாங்கம் அமைத்து 5 மாதங்கள் கடந்துவிட்டன.இந்நிலையில் இன்னமும் இம் முகாம்பற்றி தேடிப் பார்க்காததன் காரணம் என்ன? பல பொலிஸ்அதிகாரிகள் தங்க வசதியின்றி இருக்கும்போது பொலிஸ் அதிகாரி பீரிஸ்ஸிற்கு இரண்டு வீடுகளை கொடுத்தது யார்?B 8மற்றும் இலக்கமிடப்படாத வீடொன்று)

தற்போது பொ.ஐ.மும் இம் முகாமிற்கு ஆதரவளிப்பதாகச் சந்தேகப் படுகின்றோம். பொ.ஐ.மு அரசாங்கத்திற்கு தங்களது நேர்மையை வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அது இந்த வதை முகாம் பற்றிய மேலதிகவிசாரணைகளை மேற்கொள்ள ஒரு ஆணைக்குழு நியமிப்பதே. அடுத்து இந்த வீடமைப்புத் தொகுதியை மேற்படி நபர்கள் பயன் படுத்துவதற்கான உரிமை எங்கிருந்துவந்தது என்பது பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எங்களைவிட 5 லட்சத்துக்கு கிட்டிய வாக்குகளை சந்திரிக்காவுக்கு அளித்த கம்பஹாமக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

**தகவல்:ராவய**

## ஜனாதிபதி.......

"அவர்களைக் கட்டுப்படுத்துவதால் நீங்கள் சாதிக்கப் போவது என்ன?"

உண்மை அதுதான். நாங்கள் இப்போது மிகவும் நெருக்கடியானதும் நெடியதுமான ஒரு நடவடிக்கைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மனது நிறைந்த துயரத்துடன் நான் இதனைச் சொல்கிறேன். இருதரப்பாரும் ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது விட்டுக்கொடுத்து ஒரு யதார்த்தமான தீர்மானத்துக்கு வர வேண்டும்.

இந்த முயற்சி தோல்வியுறுமானால், எஞ்சியுள்ள முடிவு மிகவும் ஆபத்தானதாக அமையும். இதை, சென்ற வாரம் பாராளுமன்றத்தில் நடராஜா என்ற உறுப்பினரும் தெரிவித்திருந்தார்.

"ஒரு பரவலான எதிர்பார்ப்பு நிலவுகிறது. இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை கொண்டுவருவதற்காகக் கிட்டியுள்ள இறுதிச் சந்தர்ப்பம் இது. இதுவும் வெற்றி பெறாது போகுமானால், தமிழ் மக்களின் ஆயுதமேந்திய போராட்டம் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகிப் போய்விடும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒருவர் எப்போதும் ஒரு நல்ல முடிவையே எதிர்பார்ப்பார்"

எனது உளப்பூர்மான நம்பிக்கையெல்லாம் இந்தப் பூமியில் இரத்தமும் கண்ணீரும் இனிமேலும் சிந்தாமல் இருக்க வேண்டும் என்பதுதான்.

ஏனென்றால், நீங்களும் நானும் இது வரை போதுமானளவு இரத்தத்தையும், கண்ணீரையும் அதிலிருந்து பிறப்பெடுக்கும் துயரத்தையும் கண்டுவிட்டோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

வாருங்கள் இப்போது பிஸியாக இருக்கிறோம் என்ற வார்த்தை மூலமே தட்டிக்கழிக்கப்பட்டுள்ளார்.

வேலைக்குச் செல்ல மறுத்த ஊழியர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்து விசாரணை செய்யப் பயந்த தலைவர் வாமதேவன் பொலிசாரைக் கொண்டு ஊழியர்களைப் பயமுறுத்தும் பணியில் இறங்கிப் பரிதாபகரமாகத் தோல்வியைத் தழுவியுள்ளார்.

## ஒரு உத்தியோகத்தரின் இரண்டு உத்தியோகங்கள்!

(நமது திருமலை நிருபா)

திருக்கோணமலை சிக்கனக் கடனுதவி சங்கங்களின் சமாசத்தில் ஊழல்கள் எல்லை மீறிவிட்டதாக அதன் உறுப்பினர்கள் பலர் வருத்தப் படுகிறார்கள். பணமோசடி செய்யும் அதன் முகாமையாளரான எஸ்.தில்லைநாதன் என்பவரும் அந்த மோசடிக்கு உடந்தையாகிப் பங்குபெற்றுவரும் வாமதேவன் என்பவர் தலைமையிலான இயக்குநர் சபையும் இச்சமாசத்தை உண்டு இல்லை என்று ஒரு வழிபண்ணி விடுவார்களோ என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள்.

கூட்டுறவு என்ற போர்வையில் தாங்கள் சிறுகச் சிறுகச் சேமித்த பணத்துக்கும் ஏதாவது நடந்து விட்டதோ என்று மாவட்டம் முழுதாகவுள்ள 45 சங்கங்களும் கையைப் பிசைந்து கொள்ளுமளவுக்கு மோசடிகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இந்தச் சமாசம் அமைந்திருக்கும் அதே கூரையில் இவர்களது பரிபாலனத்தின் கீழ் ஜனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வேறு அமைந்து செயல்படுகிறது இவர்களது தில்லுமுல்லுக்கு வசதியாகிவிட்டது. யாராவது உறுப்பினர்கள் சபைக்கு வழக்கில் சந்தேகங் கேட்டால், திருடன் ஆடு வளர்த்தது போல் தில்லைநாதன் கணக்குச் சொல்ல ஆரம்பித்தாரென்றால் கேட்டவர் வழுக்கைத் தலையராகத்தான் வெளியேற வேண்டி வரும். பொய்யைத்தவிர வேறொன்றையும் பேசுவதில்லை என்று கூட்டுப் பிரமாணம் எடுத்தாரோ என்னவோ தலைவரும் முகாமையாளரும் உரிக்க உரிக்கத் தோலாக வரும் வெங்காயம் போலவே நிறைக்கு நிறை மோசடி ஊழல் என்பவற்றிலேயே சமாசத்தை மிதக்கவிட்டுள்ளார்கள்.

தில்லைநாதனோ நாடோடி மன்னர் எம்.ஜி.ஆர். போல் ஜனசவிய நம்பிக்கை நிதியத்தின் மாவட்ட இணைப்பாளராகவும் சிக்கனக் கடனுதவி சங்கத்தின் முகாமையாளராகவும் இரட்டை வேடமேற்றுள்ளார். இதில் சிறப்பு என்னவென்றால் சி.க.கூ. சங்க முகாமையாளராக இவர் இருப்பது ஜனசக்தி நம்பிக்கை நிதியத்துக்கு தெரியவே தெரியாது. அவர்கள் கொழும்பிலிருந்து வரும் போது முகாமையாளர் என்ற பெயர்ப்பலகையையும் அவை சம்பந்தமாக தனது மேசையில் உள்ள பைல்களையும் உடனே மீறந்து விடுவதோடு. சி.க.கூ. சங்கம் பற்றி ஏதாவது உரையாடலில் வந்தால் அது பற்றி மனேஜரிடம் தான் கேட்க வேண்டும். அவர் வெளியில் போய் விட்டார் என்று சொல்லி மடக்கிவிடுவார்.

இவ்வாறு ஏமாற்றி இவர் இரண்டு சம்பளங்கள் பெறுவது அவரது திறமைக்கான சம்மானம் என்று விட்டு விடலாம். ஆனால் கொத்தணி உத்தியோகத்தர்களான ரம்யகாந்தி, யோகேஸ்வரன், கேதீஸ்வரன். ரஞ்சித் ஆகியோரின் பெயர்களை ஜனசக்தி நம்பிக்கை நிதிய ஊழியர்களாவும் காட்டி மாதமாதம் சம்பளம் பெற்று வந்துள்ளார். இது சம்பந்தமான அறிக்கைக்கு தலைவர் வாமதேவனும் கையெழுத்திட்டே வந்திருக்கிறார். இவ்வாறான சம்பளம் பெற்று வந்த விடயம் எவருக்குமே தெரியாமல் மூடிமறைக்கப்பட்டே வந்திருக்கிறது. இந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்று மர்மமாகவே இருந்து வந்துள்ளது. இவ்வாறு மாதாமாதம் சுமார் பத்தாயிரம் ரூபாய் வரை சுருட்டப்பட்டிருக்கிறது.

சேவை மனப்பான்மையுடன் வேலை செய்யுங்கள் என்று தர்மோபதேசம் செய்து மேற்படி ஊழியர்களிடம் இரண்டு உத்தியோகத்தர்களுக்கான வேலை வாங்கிவிட்டு கொத்தணி உத்தியோகத்தர்களின் சம்பளம் என ரூ.1200 மட்டுமே வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இங்கே கூட மோசடி இடம் பெறாமல் இல்லை. இதே உத்தயோகத்திர்களின் சம்பளமாக சம்மேளனத்தில் இருந்து 1500/= பெற்றுக் கொண்டு 1200/= மட்டுமே வழங்கப்பட்டு 300/=வும் சுருட்டப்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி கொத்தணிச் செயலாளர்களின் எண்ணிக்கையில் இரண்டு அதிகரிக்கப்பட்டு அந்தச் சம்பளம் ரூ.3000உம் எட்டு கொத்தனிச் செயலாளர்கள் சம்பளத்தில் தலா 300/- வீதம் 2400/=உம் என மாதமாதம் ரூபா 5400களீகரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. மேலே காட்டப்பட்ட இரண்டு வகையான கையாடல்களும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தெரியாமலே லாவகமாக கடத்தப்பட்டு வந்துள்ளது என்பது தான் இவர்கள் திறமைக்குச் சான்று.

இது போக சி.க.கூ. சம்மேளனத்திலிருந்து கடனுதவி சங்க உறுப்பினர்கள் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காக கருத்தரங்குகள், பயிற்சிகள் என்பவற்றுக்காக வழங்கப்பட்டுவரும் பெருந்தொகையான பணத்திலும் மோசடிச் கணக்குகள் இடம் பெற்றுள்ளன. செலவை அதிகரித்துக் காட்டியும் நடத்தப்படாத கருத்தரங்குகளை நடத்தியதாகக் காட்டியும் பணம் சூறையாடப்பட்டுள்ளது.

தாங்கள் பணிபுரியும் நிறுவனத்தில் தமக்குத் தெரியாமல் ஏதோ தில்லுமுல்லுகள் நடப்பதாகச் சந்தேகித்த, தி.க.யோகேஸ்வரன், எச்.டி.கமலரஞ்சித், திருமதி.சா.தர்மரத்தினம், செல்வி.தே.கேதீஸ்வரி, செல்வி.யூடித் கொரேரா, திருமதி.இ.தேவிகா ஆகியோர் நிர்வாகத்தில் சீர்கேடுகள் மலிந்துள்ளதாகவும். இது பற்றி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இயக்குநர் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். விசாரணை மேற்கொண்டால் தாங்கள் மாட்டுப்படக்கூடும் என்று பயந்த இயக்குநர்கள் முகாமையாளர் தில்லைநாதனுக்கு முட்டுக்கொடுக்க முயலவே, நம்பிக்கையீனமடைந்த இவ்ஆறு ஊழியர்களும் ஒழுங்காக விசாரணை மேற்கொண்டு நிர்வாகத்தைச் சீர்படுத்தும் வரை வேலைக்குத் திரும்பப்போவதில்லை எனத்தெரிவித்து 05.12.1994ல் வெளியேறியவர்கள் இன்றுவரை விசாரணைகள் மேற்கொள்ளப்படாததால் வேலைக்குச் செல்லாமலே இருந்து வருகின்றனர்.

இது இவ்விதமிருக்க முறைப்படி நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு கடந்த ஆண்டில் நியமனம் பெற்ற இராசையா ஜெயமோகனராஜா என்ற வெளிக்கள உத்தியோகத்தர் சேமுறு வரைப்பகுதிக்குப் பணியாற்ற அனுப்பப்பட்ட போதும் முகாமையாளரின் மோசடிக் கணக்கு வழக்குகளுக்கு உடன்பட மறுத்த காரணத்தால் சம்பளம் வழங்கப்படாமலேயே கைவிடப்பட்டார். ஒரு மாதம் வரை பணியாற்றிய இவர் தனது சம்பளத்தை இன்று வரை பெற்றுக்கொள்ளவில்லை என்பதோ, தனக்கு நடந்த சதி பற்றி கேட்க முனைந்த போதேல்லாம் பிறகு வாருங்கள் இப்போது பிஸியாக இருக்கிறோம் என்ற வார்த்தை மூலமே தட்டிக்கழிக்கப்பட்டுள்ளார்.

இம்மோசடிகளால் வெகுண்டெழுந்த சம்மேளன அதிகாரியொருவர் வாமதேவனுடன் தொடர்பு கொண்டு உடனடியாக விசாரணை நடத்திக் குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும் எனக்கடுமையாக எச்சரித்துள்ளார். ஆனால் வாமதேவனோ ஹி.. ஹி... என்று கெக்கரித்துள்ளார்.

இதனால் மேலும் கோபமடைந்த அநத அதிகாரி நாங்கள் கணக்காய்வாளர்களைத் தருகிறோம். சரியாகக் கணக்காய்வு செய்யத் தயங்கினால் தொடர்ந்து பணம் அனுப்பப்படப் போவதில்லை என்றும் சீறியுள்ளார்.

கட்டைப் பிரம்மச்சாரி வேஷத்திலிருக்கும் முகாமையாளர் பற்றி ஆதாரங்களுடன் ''கிசு கிசு''க்களும் பரவலாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

கூட்டுறவு அரசியல் கலவாதது என்பது கோட்பாடு எனினும் கடந்த தேர்தல் காலத்தில், சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் அன்றைய ஐ.தே.க அமைப்பாளரும் வேட்பாளருமான திருமதி.ரஞ்சனி சேரசிங்கவுடன் முகாமையாள தலைவரும் இரகசியமாக பேச்சுவார்த்தை செய்ததும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஒரு வேளை மீண்டும் ஐ.தே.க. பதவிக்கு வந்திருந்தால் தங்கள் நிலையை உயர்த்திக் கொண்டிருப் பார்களோ?

எதுவானால் என்ன? விசாரணை நடத்த தலைவர் ஏன் பயப்படுகிறார் என்பது தான் இன்றைய கேள்வி!

## நீதியின்...

திற்கு அதிகளவு முக்கியத்துவம் இனியாவது வழங்கப்படட்டும் என்பதற்காகவே. அந்தப் பெண்களின் எண்ணப்படி சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு. அரசேற்றுள்ளது. அமைச்சரவையிலும் இதுவரை காலமில்லாத அளவு பெண்கள் உள்ளனர். இந்நிலையில் பெண்களது முன்னேற்றம் தொடர்பான அரசின் முயற்சிகள் அக்கறையோடு முன்னெடுக்கப்பட வேண்டியவை. 'பாலியல் வல்லுறவு' பிரச்சினை பற்றிய அணுகுமுறை அவ்வாறான அக்கறையுடன் முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை. இந்நிலையில் சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி இலங்கைப் பெண்களின் ஒருமித்த கோஷம் அரசை துயிலெழுப் பட்டும்.

## திருமதி டக்ளஸ்.

அதற்கு அந்த சக ஆசிரியையும் இது (தாலிக்காய்) எந்த நகைக்கடையிலும் செய்து விற்பதல்ல. யாரும் அன்பளிப்பாகவும் கொடுக்கவும் மாட்டார்கள். இது நல்லநேரம் காலம் பார்த்து பொன் உருக்கி ஓடர் கொடுத்தே செய்வார்கள் என பதிலளித்துள்ளார். அதற்கு பின்னர் தான் திருமதி டக்ளஸ் பீரிஸ் இன் கழுத்தில் தாலிக்காய்களை காண முடியவில்லை.

திரு. டக்ளஸ் பீரிஸ் வடகிழக்கின் பல பகுதிகளில் பணியாற்றியவர் வடமாராட்சி ஒப்ரேசன் லிபரேசனிலும் பங்கேற்றவர். கடைசியாக மட்டக்களப்பில் பணியாற்றியவர்.

மட்டக்களப்பில் நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் ஏறாவூர், காத்தான்குடி, ஆறுமுகத்தான்குடியிருப்பு போன்ற இடங்களில் பொதுமக்களை வெருட்டி அவர்களின் வாக்குச்சீட்டுக்களை பறித்து ஐ.தே.கவின் ஆனைக்கு வாக்கு போட்டு தேர்தல் மோசடியில் ஈடுப்பட்டதற்காக தற்போது விசாரணையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்.

அது மட்டுமன்றி கடந்த ஐ.தே.க. அரசின் காலத்தில் மட்டக்களப்பில் தற்போதைய மட்டக்களப்பு நகர ஐ.தே.க அமைப்பாளரும் தற்போதைய மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான பத்மநாதனுடன் சேர்ந்து பல்வேறு அடாவடித்தனங்களை புரிந்தமை மட்டக்களப்பு மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

மட்டக்களப்பில் சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்களிடம் ஆயிரக்கணக்கில் (பத்மநாதனுடன்) சேர்த்த கையல்லவா? டக்ளஸ் பீரிஸ் இன் கரம்.

வடமாராச்சியிலோ அல்லது மட்டக்களப்பிலோ தான் டக்ளஸ் பீரிஸ்க்கு தாலிக்காய்கள் அன்பளிப்பாக கிடைத்திருக்கலாமென றோயல் கல்லூரியில் கற்பிக்கும் தமிழ் ஆசிரிய ஆசிரியர்கள் தங்களுக்குள் (காதோடு காதாக) பேசிக்கொண்டார்கள்.

## மீண்டும் தலைதூக்கும் தமிழர் கைதுகள்!

கடந்த பல மாதங்களாக கொழும்பு நகரில் அச்சமின்றி நடமாடிய தமிழர்கள் மீண்டும் ஒருவித பயபீதியுடன் நடமாடவேண்டிய ஓர் சூழ்நிலை மெல்ல மெல்ல தோற்றுவிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, ஆமர்வீதி போன்ற இடங்களிலுள்ள விடுதிகளில் இந்த ஒரு மாதகால இடைவெளிக்குள் நாலைந்து தடவைக்கு மேல் சுற்றிவளைக்கப்பட்டு பலர் விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அதே போல் கொட்டாஞ்சேனை, மோதரை பொலிசார் வீடுகளிலும் இடையிடையே தேடுதல் நடத்தத் தொடங்கியுள்ளார்கள். கடந்த 4ஆம் திகதி கொட்டாஞ்சேனைப் பொலிசார் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்த பலரை கைது செய்துள்ளார்கள். இவர்களில் அனேகமானோர் நாற்பது ஐம்பது வயதையுடையவர்கள். வவுனியாவில் கொடுக்கும் பாஸ் அன்றுதான் தாங்கள் ரயிலில் வந்த ரயில் டிக்கட் என்பன காட்டியும் இவர்களை இரண்டு நாட்கள் உள்ளே வைத்துவிட்டார்கள்.

இதே .போல் கொட்டாஞ்சேனை பொலிசில் சந்தேகத்தில் பிடிபட்டு உள்ளேயிருக்கும் தனது நண்பனை பார்க்கச் சென்ற ஒருவருக்கு கிடைத்த அனுபவம் இன்னும் வித்தியாசமானது. அவருக்கு சிங்களமும் நன்றாகத்தெரியும். சென்றியிலிருந்த பொலிசாரிடம் எனது நண்பனைப் பார்க்க வேண்டும் எனக்கூறியிருக்கிறார். தெமிலா? சிங்களமா? எனக் கேள்வி வந்தவுடன் தமிழ் என்று சொல்லியிருக்கிறார் கன்னத்தில் விழுந்த முதலடியுடனேயே சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டார்.

தீவுப்பகுதியிலிருந்து கல்வி அமைச்சுக்கு தனது வேலை விடயமாக கதைக்க வந்த ஒரு ஆசிரியையும் அவரது கணவரும் அவருக்கு உதவியாகச் சென்ற ஒருவரையும் ஓட்டோவில் மறித்து கைது செய்த மோதரைப் பொலிசார். கல்வி அமைச்சுக்குச் சென்று வந்த தஸ்தாவேச்சுக்கள், தேசிய அடையாள அட்டை, ஆசிரிய அடையாள அட்டை என்பனவற்றை காட்டியும் இரவுதான் வந்தோம் காலையில் கல்வியமைச்சுக்கு போய்வருகிறோம். அதற்கிடையில் எப்படி வந்து பொலிசில் பதிய முடியும் என விபரமாகச் சொல்லியும் மறுத்து தடுத்துவைக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதற்குப் பின்னரும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இன்னுமொரு இளம் ஆசிரியை தலவாக்கொலையில் ஆசிரியராகப்பணிபுரியும் தனது சகோதரருடன் மோதரயிலுள்ள தங்கள் உறவினர் ஒருவர் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு கதைத்துக் கொண்டிருக்கும் போது பதியவில்லை என்ற காரணத்தைக்காட்டி கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மோதரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புதிதாக பதியச் செல்பவர்களிடம் நாளைக்குக் கொண்டு வா அடுத்தநாள் கொண்டுவா, எத்தனை ஆயிரத்துக்கு வீடு எடுத்தனீர் என்றவாறு காலத்தை இழுத்தடித்து வருபவர்களிடம் எதையாவது கறந்துவிடலாமென்று தனது பழைய பாணியை காட்டிக் கொள்கிறார்.

இவர் தான் முன்னரும் யூ.என்.பி. அரசு காத்தில் பிடித்து வருபவர்களிடம் பக்கத்திலுள்ள கொமினிக்கேஷன் ( பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ளது) முதலாளியை பேரம் பேசச்சொல்லி ஆயிரக்கணக்கில் அளந்தவர். (இது பற்றிய செய்தி சரிநிகரில் வெளிவந்தபின் மேலிடத்திலிருந்து கொஞ்சம் அடக்கிவாசிக்குமாறு உத்தரவு வந்து கொஞ்சக்காலம் அமைதியாக இருந்தார் என்று கேள்வி).

இதைவிட கோல் பேசில் (காலிமுகத்திடலில்) சிங்கள மக்கள் அன்றாடம் வந்து போட்டோ எடுக்கிறார்கள். ஆனால் யாராவது தமிழர்கள் போட்டோ எடுத்தால் சிவில் உடையில் திரியும் பொலிசார் பிரபாகரனை பிடித்துவிட்ட எக்களிப்புடன் இழுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதுவரை பல தமிழர்கள் இவ்வாறு பிடிபட்டிருக்கிறார்கள். அரசு கூட இவ்விடத்தில் போட்டோ எடுக்கக்கூடாது என எந்த அறிப்பும் இடவில்லை.

இந்தியாவிலிருந்து ரோட்டரி மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பல தமிழர்கள் உட்பட அண்மையில் மூன்று மலையக இளைஞர்கள், பின்னர் ஒரு கணவனும் மனைவியும் ........... இப்படிப்பலர்.

என்னதான் அரசு சமாதானம் பற்றி பேசினாலும் அதன் படைகளின் அ[illegible] மனதிலுள்ள இனக்குரோத உணர்வு மாறும்வரை எல்லாமே அப்படித் தான் இருக்கும் போலும்!

## மண்டபம்...

கொள்கின்றேன் என்று கூறிவிட்டு சைவ பரிபாலன சபையினரையும், பதுளை வாழ் மக்களையும் ஏமாற்றிவிட்டார். இப்படிப் பலமுறை ஏமாற்றிவிட்டார் அவர். இந்நிலையில் 94ம் ஆண்டுக்கு கலாசார மண்டபத்திற்கு ஒன்பது இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்பண்டபத்தை திறப்பதில் ஊவா மாகாண சபைக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் இந்து கலாசார அமைச்சே திறப்பு விழாவை பின்போட்டு வருகின்றது. இதற்கு ஒரு தமிழ் அமைச்சரே தலைமை தாங்குகின்றார். இம்மண்டபத் திறப்பு விழாவில் அரசியல் விரோதங்களே தலைவிரித்தாடுகின்றது. முன்னைய அமைச்சரும், தற்போதைய அமைச்சரும் இ.தொ.கா. தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்கள் என்பதை இங்கு குறிப்பிடவேண்டும். இவர்களிடையே அரசியல் விரோதங்கள் காணப்படுவதனால் பாதிப்படைவது மலையக தமிழ் மக்களே என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள். மண்டபம் திறந்து வைப்பதில் கால தாமதமடைவதற்கு வேறு எந்த காரணங்களும் கிடையாது என்பது தெளிவு!

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அல்லோசாலை ... நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 18-03-95

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்